உமா

262

ஆசிரியர்: ஜி. உமாபதி

JL
211, N53 4A
N53·1·3
197200
26:2
3-54

MALABAR Bouquet HAIR OIL

is perfected after extensive research. It was our aim to produce an hair oil which will satisfy the most modern hair dressing requirement. The perfume, being the direct absolute drawn from nature's own flowers satisfies even the most delicate taste. It prevents dandruff, Alopecia, premature greying and falling of hair. **MALABAR Bouquet HAIR OIL** grows, preserves and beautifies hair.

MANUFACTURERS -

RATHOD TRADING CO.,

SOWCARPET, : : MADRAS-1.

WHY FRET ABOUT YOUR FOUNTAIN PEN?

Used wherever good pens are used.

Manufactured for

THE PILOT PEN CO. (INDIA) LTD.

RED HILLS **MADRAS.**

EP

When **ASTHMA**
attack is imminent
use

MULTIMIX

Indo-French Pharmaceutical Co.,

P. B. No. 1542. MADRAS-1.

PHONE:
2200

UMA PRINTERS

Specialists in **CARTONS**
& CARD BOARD BOXES



4/32, THATHAMUTHIAPPAN STREET,
MADRAS-1 (NEXT TO SELECT TALKIES)

உமா

ஆசிரியர்: ஜி. உமாபதி

நிர்வாக ஆசிரியர் : ர. சண்முகம்

செடி 1 மலர் 3	ஜுலை 1953	விஜய ஸ்ரீ ஆனி மீ

பொருளடக்கம்

வாழ்க்கைத் துணை நூல் (கவிதை)	கு. சா. கி.	... 6
கல்வியில் புரட்சி	தலையங்கம்	... 7
நாமும் நீங்களும்	...	... 9
எதிரொலி	...	... 10
தன்னம்பிக்கை	'பதி'	... 12
குழந்தை இன்பம்	சாமி பழனியப்பன்	... 13
பிராயச்சித்தம்	கி. ரா. கோபாலன்	... 19
யார் குற்றவாளி ?	எஸ். கிருஷ்ணன்	... 30
இரட்டைக் கொலை !	நாராயணன்	... 37
ஆர்க்கும் அலைகடல் (கவிதை)	ராம சுப்பிரமணியம்	... 43
கடவுளும் நானும்	பக்தன்	... 44
வாழ்வளித்த தெய்வம்	கோகுலன்	... 53
கோமதியின் கனவு	சண்முகம்	... 60
மூன்று சகோதரர்கள்	அசோகன்	... 72
இலங்கை கடிதம்	ராஜன்	... 88

'உமா'வில் வெளியாகும் கதைகளில் உள்ள பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்களே; சம்பவங்களும் கற்பனையே.

வாழ்க்கைத் துணை நூல்!

[கு. சா. கிருஷ்ணமூர்த்தி]

பல்லவி

வள்ளுவன் தந்த வான் மறையே எங்கள்
வாழ்க்கைத் துணை நூலாம்—உயர்திரு (வள்ளு)

அனுபல்லவி

உள்ளத் தெளிவும் உலகியல் பலவும்
தெள்ளத் தெளிய செப்பிடும் உயர்திரு (வள்ளு)

சரணம்

அன்பும் அறமும் சொல்லும்—நல்ல
ஆட்சி முறை வகுத்துச் சொல்லும்
துன்பங்கள் நீங்கி மாந்தர் நலம் பெறத்
தூய்மையும் வாய்மையும் துணையெனச் சொல்லும் (வள்ளு)

கடமையும் அன்பும் ஒன்று கலந்து
களிப்புடன் உவந்து கருணை மிகுந்து
மடமை கடிந்து மானம் விழைந்து
[illegible] [illegible]ந்து வாழப் பொருந்தும் (வள்ளு)

197260

கல்வியில் புரட்சி!

இந்தியர்களிடையே அடிமை மனப்பான்மையை வளர்ப்பதற்காக தமது ஆட்சிக் காலத்தில் ஆங்கிலேயர் ஒரு சூட்சிகரமான கல்வித் திட்டத்தை வகுத்து செயலுக்குக் கொண்டு வந்தனர். அந்தக் கல்வி முறை வெற்றிகரமாக அமுலாகியதன் காரணமாக இந்தியரிடையே அடிமை மனப்பான்மை நன்றாகத் தலையெடுத்தது; லஞ்சம் வாங்கும் புதுப் பழக்கம் வழக்கத்தில் வந்தது; தேசத் துரோகிகள் மலிந்தனர்; படித்தவன்தான் புத்தியுள்ளவன் படிக்காத உழைப்பாளி முட்டாள் என்ற மனோபாவம் எங்கும் வளர்ந்தது; உழைத்து உண்ணுவது கேவலமாகக் கருதப்பட்டது. உழைக்காமல் ஊரை ஏமாற்றி உல்லாச வாழ்வு வாழ்வது போற்றப்பட்டது.

காந்தியடிகள் சுதந்திரப் போராட்டம் நடத்திய போது இந்த உண்மையைத் தெளிவாகக் கண்டார். வெள்ளையரை விரட்ட வேண்டுமானால் ஆயுதம் தூக்கிப் பயனில்லை. அப்படிச் செய்தால் நமக்குப் பின்னால் நிற்கும் நமது மக்களிலேயே சிலரான தேசத் துரோகிகள்தான் நமது முதுகில் குத்துவார்கள். வெள்ளையனை எதிர்ப்பதற்கு உள்ள வழி ஒன்றே ஒன்றுதான். அது இந்தியா இழந்துவிட்ட தனது பண்பைப் பெறவேண்டும். இதைக் கருதித்தான் காந்தியடிகள் இந்தியர்களின் ஒழுக்கத்தை வளர்க்கும் பணியையே தேசீயப் போராட்டத்தின் முக்கிய ஆயுதமாகக் கொண்டார்.

ஆங்கிலக் கல்வி முறையின் சிறு சின்னம் இங்கு இருந்தாலும் அது தேசீய விரோதிகளை சிருஷ்டிக்கத் தவறாது. ஆகவே அக்கல்வி முறையை அறவே ஒழித்து நமது பண்புக்கு ஏற்ப ஒரு கல்வித் திட்டத்தை வகுத்துக்கொள்ள வேண்டும் என்று காந்தியடிகள் கருதினார். அதன் வழி 'ஆதாரக் கல்வி' என்ற புதுமுறைக் கல்வித் திட்டத்தை உருவாக்கினார். புத்தகப் படிப்புக்குள்ள முக்கியத்துவத்தைக் குறைத்து தொழிலுக்கு அக்கல்வி முதலிடம் தந்தது. சிறையிலடைப்பது போன்று நீண்ட நேரம் இளம் சிறுவர்களை வகுப்பு அறைகளில் அடைப்பதை அத்திட்டம் வெறுத்தது. விளையாட்டுப் பருவமான இளம் வயதில் விளையாட்டாகவே தொழிலைக் கற்பிப்பதால் சிறுவர்கள் உற்சாகமடைகிறார்கள் என்ற உண்மையை பல இடங்களில் காந்தியடிகள் செயலில் காண்பித்தார். புத்தகப் படிப்பாளிகளைவிட தொழில்

பயிற்சி பெறும் சிறுவர்கள் பேரறிவாளர்களாகவும், தேசபக்தியும், மன உறுதியும் உள்ளவர்களாகவும் விளங்குவதை அவர் பிரத்தியட்சமாக விளக்கினர். உடனடியாக இந்தக்கல்வித் திட்டம் வளர்ந்தால் இந்தியர்களின் மறத்துப்போன சுதந்திர உணர்ச்சி மீளும். அப்போதுதான் வெள்ளையரை உண்மையாக எதிர்க்கும் மன எழுச்சி இங்கு பரவும் என்று நிச்சயமாக நம்பினர். சுதந்திரம் எதிர்பாராமல் விரைவில் கிடைத்துவிட்டாலும் பின்னர் ஆங்கிலக் கல்வி முறையைப் பின்பற்றியே நாம் நடந்தால் கிடைத்த சுதந்திரம் நிலைப்பது கடினம் என்று அவர் கருதினர். ஆகவே எவ்வளவு விரைவில் முடியுமோ அவ்வளவு விரைவில் ஆதாரக் கல்வியை பரப்ப வேண்டும் என்று அவர் தேசீயத் தொண்டர்களைக் கேட்டுக்கொண்டார்.

ஆனல் துரதிருஷ்டவசமாக இந்தியா தன்னரசு பெற்று நீண்ட காலமாகிவிட்ட பிறகு கூட ஆதாரக் கல்வித் திட்டத்திற்கு அரசாங்கம் பெரிய அளவில் உற்சாகம் தரவில்லை. பழைய கல்வி முறையே நீடித்து வந்தது. இதனல் நாட்டில் ஏற்பட்ட தொல்லைகள் பலவற்றை சமீப காலமாகத்தான் மத்திய அரசாங்கம் உணர்ந்து வருகிறது.

இந்த சமயத்தில் கல்வித் துறையில் காந்திய அடிப்படையில் ஒரு துணிகரப் புரட்சி செய்ய முன்வந்துள்ளார் நமது முதலமைச்சர் ராஜாஜி. காந்திய தத்துவத்துக்கு மதிப்பளிப்பதில், அதன் வழி நின்று ஒழுகுவதில் எப்பொழுதுமே முதலிடம் பெறும் தமிழகத்தின் புகழை இக்கல்வித் திட்டத்தின் மூலம் சிகரத்தில் ஏற்றி வைக்கிருர் ராஜாஜி. நல்ல விஷயங்கள் எதுவும் தமிழகத்திலிருந்துதான் ஆரம்பமாகும் என்ற வழி வழி நியதியை உறுதிப்படுத்திய ராஜாஜியைப் பாராட்டுகின்ருேம்.

ஆனல் இக்கல்வித் திட்டம் முழுமையடைந்துவிட்டதாக நாம் நினைக்கவில்லை. மூன்று மணி நேரமே புத்தகக் கல்வி போதிக்கப்படும் என்று தீர்மானம் செய்யப்பட்டுவிட்ட பிறகு, மற்ற நேரங்களை மாணவர்கள் எப்படிக் கழிப்பது என்பதற்கான தெளிவான விளக்கத்தைக் காணேம். தந்தையின் தொழிலுக்கு மகன் உதவி செய்யலாம் என்று கூறப்படுகிறது. தமிழகத்தில் பெரும்பாலான தந்தைகளுக்கு ஒழுங்கான தொழிலோ, வேறு நிலையானவேலையோ தற்சமயம் இருக்கவில்லை. மாணவர்கள் தொழிற் துறையில் பயிற்சி பெறவேண்டும் என்பது அரசாங்கத்தின் விருப்பமாயின் அதற்கு பள்ளியிலேயே ஏதாவது ஏற்பாடு செய்தாக வேண்டும்.

இத்துடன் இன்னென்றையும் நினைவுபடுத்துகிருேம். மூன்று மணி நேரம் பள்ளியில் படிக்கும் மாணவன் இந்தக் குறைந்த நேரத்தில் தான் பெரும் கல்வியை தன் வாழ்வுக்குப் பயன்படுத்திக்கொள்ள வேண்டுமாயின், தமிழ் அரசாங்க மொழியாக வேண்டும். தமிழிலேயே அரசாங்க அலுவல்கள் அவ்வளவும் நடைபெற வேண்டும். பள்ளியில் தமிழ் மொழிதான் முதலிடம் பெற்று விளங்க வேண்டும். இந்த நிலை ஏற்பட்டால் பள்ளியில் மாணவன் ஒரு மணி நேரம் படித்தால்கூட அது அவன் வாழ்வுக்குப் பயனளிக்கும் என்பதை ராஜாஜி அரசாங்கத்துக்கு தெரிவித்துக் கொள்ளுகிருேம்.

நாமும் நீங்களும்

தனி இலாக்கா அமைத்தாலொழிய நமக்கு வரும் பாராட்டுகளை, ஆலோசனைகளைக் கவனிக்க இயலாது என்ற அளவில் நம்மைத் திணர அடிக்கும் 'உமா' அன்பர்களுக்கு மீண்டும் எங்கள் நன்றி கலந்த வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

"உமா" தங்கள் சொந்தப் பத்திரிகை என்ற உரிமை உணர்ச்சியோடு இந்தத் தடவை வாசகர்கள் ஒரு பெரும் ஆட்சேபனையைக் கிளப்பியுள்ளனர் 'உமா'வில் வெளிவரும் பொன் மொழிகள் துணுக்குக்கள் மேனாட்டு அறிஞர்கள் கூறியவையாகவே உள்ளனவே. சுயாட்சித் தமிழகத்தை விரும்பும் நாம் தமிழ் நாட்டு அறிஞர்களின் பொன் மொழிகளை ஏன் வெளியிடக் கூடாது? என்று நூற்றுக் கணக்கில் வந்துள்ள கடிதங்கள் நம்மை அன்புடன் கண்டித்திருக்கின்றன. இது ஜனநாயக யுகமல்லவா! ஆகவே உடனடியாகப் பணிந்து விட்டோம். இந்த இதழில் வாசகர்கள் மனம் மகிழும்படியான மாற்றத்தைக் காண்பார்கள்: இந்த நிலை தொடரும். அஞ்ச வேண்டியதில்லை.

"எனக்கு அதிகாரம் கிடைத்தால்" பகுதிக்கு எதிர்பார்த்ததைவிட அதிகமான ஆலோசனைகள் குவிந்துவிட்டன. ஆலோசனையின் முடிவு தேதியை ஒரு மாதம் தள்ளிப் போடும்படி பலர் எழுதியுள்ளனர். ஆயிரக் கணக்கான ஆலோசனைகளைப் பரிசீலனை செய்வதற்கு நமக்கும் கொஞ்சம் அவகாசம் தேவையெனக் கருதுவதால் ஆலோசனைகள் அனுப்புபவர்கள் ஜுலை 20-ம் தேதி வரை அனுப்பலாம். முடிவு அடுத்த இதழில் வெளியாகும் என அறிவிக்கிறோம்.

"உலக இலக்கியம்" என்ற தொடர்ப் பகுதியை பலர் பாராட்டியுள்ளனர். இப்பகுதி தொடர்ந்து வரவேண்டும் என்று எல்லோரும் வேண்டுகோள் விடுத்துள்ளனர். பிற நாட்டு நல்லறிஞர் சாத்திரங்களை தகுந்த அறிஞர்களைக் கொண்டு தொடர்ந்து தமிழில் வெளியிட வேண்டும் என்பது நமது கனவுகளில் ஒன்று. இந்த இதழில் 'சீன இலக்கியம்' ஒன்று வெளியாகியுள்ளது.

'உமா'வின் மேலட்டை தமிழக ஓவியக் கலையின் சின்னமாகத் திகழுவதாக பெரிய பெரிய அறிஞர்கள் முதல் சாதாரண வாசகர்வரை நம்மைப் பாராட்டியுள்ளனர். பெருமையடைகிறோம். இந்தப் பெருமைக்கு இலக்காக என்றும் நடந்து கொள்ள முயற்சிப்போம்.

இந்த இதழில் பெரும்பாலும் இளம் எழுத்தாளர்கட்கே இடமளித்திருப்பதை கவனிக்கவும். முதல் இதழில் தெளிவாக்கிய எங்கள் கொள்கையை நடைமுறையில் கூடியவரை கடைப்பிடிக்க முயற்சிக்கிறோம் என்பதை அறிவிக்கவே இதைக் குறிப்பிடுகிறோம்.

வணக்கம்

ஆசிரியர்.

எதிரொலி

புதுமைப்பித்தன் நினைவு

புதுமைப் பித்தன் நம்மை விட்டுப் பிரிந்து ஐந்தாண்டுகள் கழிந்துவிட்டன. ஆரம்ப சூரத்தனமாக அவர் மறைந்தவுடன் கொஞ்ச காலம் அவர் புகழைப் பாடிய இலக்கிய உலகம் சமீப காலமாக மௌனத்தில் ஆழ்ந்துவிட்டது வருந்தத் தக்கதாகும்.

புதுமைப் பித்தனைப் பற்றி நினைக்கும் போது அவர் தன் வாழ்நாளில் ஒரு எழுத்தாளர் என்ற அளவோடு நின்றுவிடவில்லை. தமிழ் இலக்கியப் பாதையில் ஒரு புதுமைக் கல் நாட்டியவர், தமிழ் வசனத் துறையில் ஒரு மறுமலர்ச்சி கண்டவர், என்றுதான் அவரைக் குறிப்பிடத் தோன்றுகிறது.

அவர் எழுத்தைக் கொண்டு வாழ எண்ணவில்லை. தன் கருத்துக்களை பிறருக்கு அஞ்சாமல் எடுத்துக் கூறி அதன் பயனை தன் வாழ்வை சித்திரவதை செய்துக் கொண்டவர். தனக்கென தனி வழி அமைத்துக் கொண்டு, அந்த வழியில் தன்னந்தனியாக அல்லாமல் ஒரு கூட்டத்தையும் இணைத்துக் கொண்டு நடந்தவர். புதுமைப் பித்தனின் கதைகள், கட்டுரைகள், புதுமைக் கவிதைகள் தமிழ் இலக்கியக் களஞ்சியத்தில் புதிதாக சேர்ந்த நவமணிகள் என்பதில் கருத்து வேறுபாடே இருக்க முடியாது. ஆகவே அவர் மறக்க முடியாதவர்: மறக்கக் கூடாதவர்.

நெல்லை முற்போக்கு எழுத்தாளர் சங்கத்தார், ஜூன் மாதம் 30-ம் தேதி யன்று புதுமைப் பித்தன் நினைவு நாளை மறக்காமல் கொண்டாடி தமிழ் இலக்கிய உலகத்தின் பழியைப் போக்கினர். எந்த மூலையில் எந்த எழுத்தாளர் குழுவினர் புதுமைப் பித்தனை நினைவு கொண்டாலும் அது தமிழக எழுத்தாளர் அனைவருடைய ஏகோபித்த எண்ணம் என்றே நாம் கொள்ளலாம். ஆகவே இவ்வருடம் அப்பொறுப்பை நெல்லை முற்போக்கு எழுத்தாளர் சங்கத்தார் ஏற்றுக்கொண்டமைக்கு தமிழக எழுத்தாளர்கள் மகிழ்ச்சி அடைவர் என்றே கருதுகின்றோம். அடுத்த வருடம் இப்பொறுப்பை சென்னைத் தமிழ் எழுத்தாளர் சங்கம் நிச்சயம் ஏற்று நடத்தும் என்று எதிர்பார்க்கிறோம். புதுமைப் பித்தனைப் பற்றிக் குறிப்பிடும் இந்த விஷயங்கள் எல்லாம் மற்ற, மறைந்துவிட்ட தமிழக எழுத்தாளர்கள் அனைவருக்கும் பொருந்தும். தமிழகத்தில் வாழ்ந்து தமிழுக்காக உழைத்து மறைந்த எல்லா எழுத்தாளர்களின் பெயரையும், மறைந்த தினத்தையும் தொகுத்து அந்தந்த சமயத்தில் கொண்டாட ஏற்பாடு செய்ய வேண்டும். எழுத்தாளர்கள் கட்சி, இன மத வேற்றுமையின்றி இம்மாதிரி கொண்டாட்டங்களில் பங்கு கொள்ள வேண்டும்.

மத்திய அரசினரின் முடிவு என்ன?

அண்மையில் திருத்தணிகையில் பம்பாய் எக்ஸ்பிரஸை சித்தூர் தமிழர்கள் சாத்விக முறையில் சில மணி நேரங்கள் தடுத்து நிறுத்தினர். ரயிலுக்கோ, பிரயாணிகளுக்கோ, ரயில் பாதைக்கோ சிறிதும் சேதம் ஏற்படா வண்ணம் தண்டவாளங்களின் மீது படுத்து ரயிலை நிறுத்தியுள்ளனர். சித்தூர் தமிழ்ப் பகுதி பற்றிய தமிழர் கிளர்ச்சியை மத்திய அரசாங்கம் அலட்சியப் படுத்துவதற்கு, தங்கள் அதிருப்தியை தெரிவிக்கும் நோக்கத்திலேயே மேற்படி செயலில் சித்தூர் தமிழர்கள் இறங்கினர். இது தவிர்க்க முடியாதது என்பதை எல்லோரும் உணர வேண்டும். இம்மாதிரி நிகழ்ச்சிகள் அடிக்கடி நடைபெற்றாலும் வியப்படைவதற்கில்லை.

எல்லைக்கமிஷன் வரும்போது சித்தூர் தமிழ்ப் பகுதிகள் சம்பந்தமாக கவனம் எடுத்துக் கொள்வதாக ஒரு உறுதிமொழியைத்தான் தமிழர்கள் மத்திய அரசாங்கத்திடம் எதிர்பார்க்கின்றனர். இந்த உறுதிமொழியை அளிப்பதற்கு மத்திய அரசாங்கம் ஏன் தயங்க வேண்டும் என்பது நமக்குப் புரியவில்லை. அவர்களுடைய நிலை என்ன என்பது தெளிவாகிவிடவேண்டும். மத்திய அரசினர் தங்கள் கொள்கையில் பெருங் குழப்பமடைந்து திண்டாடுகின்றனரா? அல்லது மாகாணங்களை அடக்கி, ஒடுக்கி, சர்வாதிகார ஆட்சி நடத்த வேண்டுமென்ற மனோபாவம் அங்கே உருவாகி வருகிறதா? இந்தப் போக்கில் மத்திய அரசு போய்க்கொண்டிருந்தால் இந்தியக் கூட்டாட்சியிலிருந்து மாகாணங்களை அறவே துண்டிக்க விரும்புவோரின் செல்வாக்குதான் நாட்டில் பரவும். அந்த நிலை ஏற்படுவது எவ்வளவு அபாயகரமானது என்பதை மத்திய அரசினர் உணர வேண்டும்.

பயனுள்ள தீர்மானங்கள்!

சென்னை எழுத்தாளர் சங்கத்தினர் சென்ற 21-6-53-ல் கூடிய சங்க ஆலோசனைக் கூட்டத்தில் சில பயனுள்ள தீர்மானங்கள் செய்துள்ளனர். கூட்டுறவு முறையில் பிரசுர நிலையம் அமைக்கவும், தவிர்க்க முடியாத கஷ்ட சூழ்நிலையிலுள்ள எழுத்தாளர் குடும்பங்களுக்கு உதவ ஒரு சகாய நிதி சேர்க்கவும். "யார் யார்"? என்ற தலைப்பில் தமிழக எழுத்தாளர்களின் வரலாற்றை புத்தக உருவில் தயாரிக்கவும் எழுத்தாளர் சங்கத்தினர் தீர்மானித்துள்ளனர். மேற்கண்ட தீர்மானங்களுக்கு மேற்படி கூட்டத்திலேயே நல்ல வரவேற்புமட்டுமின்றி ஆதரவும் இருந்தது குறிப்பிடத்தக்கது. சகாய நிதிக்கு எடுத்த எடுப்பில் 1250 ரூபாய் சேர்ந்திருப்பதாக தலைவர் கி. சந்திரசேகரன் மகிழ்ச்சி ஆரவாரத்தினிடையே அறிவித்தார். "யார் யார்?" புத்தகத்தை சிறப்பாக வெளியிடும் முழுப் பொறுப்பையும் 'உமா' ஆசிரியர் ஜி. உமாபதி ஏற்றுக்கொண்டார்.

தன்னம்பிக்கை

பகீ

அன்புள்ள தம்பி,

என் முதற் கடிதம் உன்னை சிந்திக்க வைத்திருக்கிறது என்பதறிந்து மகிழ்ச்சியடைந்தேன.

எனது முந்திய கடிதம் வாழ்க்கையின் முன்னேற்றத்திற்கான முதற்படிதான். மேற்சொன்ன அந்த பண்புகளை மட்டும் விடாது கடைப்பிடிப்பதால் வெற்றி கிட்டிவிடாது. வெற்றியின் சிகரத்தை எட்டுவதற்கான இன்னொரு ரகசியம் தன்னம்பிக்கையே யாகும்.

வாழ்க்கைப் பாதையில் முன்னேற நினைக்கும் நீ முதலில் உனது லட்சியம் என்ன என்பதை தெளிவுபடுத்திக் கொள்ள வேண்டும். அந்த லட்சியம் வெறும் ஆகாசக்கோட்டையாக இருந்துவிடக் கூடாது. உனது மனப்பண்புக்கு, உனது சக்திக்கு, அந்த லட்சியம் ஏற்கப்படக் கூடியதா என்பதை முதலில் தீர்மானித்துக்கொள்ள வேண்டும். தீர்மானிக்கும் வரையில் உன் மனதில் சலனமிருக்கலாம். அப்புறம் அந்த லட்சியத்தையடைய தன்னைத்தானே நம்பவேண்டும். தனது சக்தியை நன்ருக உணரவேண்டும். உணர்ந்தபின் தாமதியாமல் தன் சக்தியை செயற்படுத்த வேண்டும். படிப்படியாக லட்சியத்தையடைய முயற்சியெடுக்க வேண்டும். செயற்படுத்தும்போது மனதிலே சஞ்சலம் தோன்றக்கூடாது. தன்னல் முடியுமோ, முடியாதோ என்ற ஐயப்பாடு எழக்கூடாது. அறைகுறையாகக் கிடைக்கும் வெற்றியையோ தோல்வியையோ கண்டு ஏமாந்துவிடக் கூடாது. ''எனக்கு சக்தியிருக்கிறது. நான் நிச்சயம் வெற்றியடைய முடியும்'' என்ற பிடிவாதம் உன் செயலில் நிலைக்க வேண்டும்.

ஊரில் பலர் உன் செயலை போற்றலாம், அனேகர் இகழலாம், எள்ளி நகையாடலாம், உன்னைப் பைத்தியக்காரனுகக் கருதலாம், உனக்கு தொந்தரவுகள் விளைவிக்கலாம்: இவற்றிற்கெல்லாம் கவலைப்படாதே. நீ பிறரை நம்புவதற்குப் பதில் உன்னையே நம்பு, உன் சக்தியை நம்பு, உன் மனச்சாட்சியை நம்பு. உனக்குச் சரி யென்று பட்டு, அது பிறருக்கு தொல்லை தராமல் இருப்பின் அந்த முறை சரியானதுதான். இதற்குப் பிறரிடம் ஆலோசனை கேட்கத் தேவையில்லை.

ஆனல் ஒரு எச்சரிக்கை. நீ தன்னம்பிக்கை கொள்ள வேண்டும் என்று குறிப்பிட்டேனே தவிர, அகம்பாவம் கொள்ளக் கூடாது. உன் சக்தியை நம்பு. நீ மற்றவர்களை முட்டாள்கள் என்று கருதாதே. பிறரது ஆலோசனைகளுக்கு செவி சாய்ப்பது தவறல்ல. ஆனல் அதற்கு அடிமைப்படுவதுதான் தவருகும்.

ஆகவே உனது சக்தியை நம்பு, பிறரது ஆலோசனைகளை ஆராய்ந்து, தன்னம்பிக்கையுடன் நடக்க முயற்சி செய்.

அடுத்த கடிதத்தில் உனக்குப் பயனுள்ள வேறு பல விஷயங்களைச் சொல்லுகின்றேன்.

அன்பு மறவாத,

தமையன்.

அட்டைப்படக் கட்டுரை :

குழந்தை இன்பம்

சாமிபழனியப்பன்

குழந்தைகள் என்றாலே யாருக்கும் ஒரு தனி இன்பந்தான். கோதையரின் குழைவு மிக்க கனிமொழியைக் காட்டிலும் இனிமையான—ஏன்? குழலையும் யாழையும் கூடத் தோல்வியுறச் செய்யும்படியான அத்துணை இன்பந் தோய்ந்து பொலிவுறும் மழலையும், தொட்டபோதெல்லாம் சுவையூறும் நல்லின்பச் சுரங்கமென விளங்கும் மாந்தளிர் மேனியும் எள்ளத்தனையும் மாசு படியாத வனப்பிதயமும் எவரைத்தான் இன்பலாகிரியில் ஆழ்த்தமாட்டா? குழந்தையைப் பெற்றெடுக்க தாய் அனுபவிக்கும் துயரம் கொஞ்சமா? அவ்வளவு துன்பத்திற்கும், துயரத்திற்கும் ஆளாகிற தாயும் அந்தக் குழந்தையின் முகத்தைக் கண்டதும் எவ்வளவு சீக்கிரத்தில் தான்பட்ட துன்பத்தையும், துயரத்தையும் மறந்து, பேரின்பமுறுகிறாள்!

குழந்தைகள் இல்லாத இடம் சூனியம்தான். குழந்தைகள் இல்லாத வீடு அரும்பு மலர்; காய்கனியற்ற சோலை; தாமரை பூத்து அழகு செய்யாத குளம்; தண்ணொளி பரப்பி அழகு செய்யும் திங்கள் இல்லாத மாலைக் காலம் என்கிறது 'சூளாமணி'. இதோ அந்தப் பாடல்,

'தொக்கின மலர் துதை
விலாத சோலையும்
புக்கிளந் தாமரை
நகாத பொய்கையும்
மிக்கிளம் பிறைவிரி
விலாத வந்தியும்
மக்களை யிலாதோர்
மனையு மொக்குமே'

அடுத்தபடியாக,

கல்லா மழலைக் கனியுறல் கலந்து
கொஞ்சும்
சொல்லா லுருக்கி அழுதோடித்
தொடர்ந்து பற்றி
மல்லார் புயத்தில் விளையாடு மகிழ்ச்சி
மைந்தர்
இல்லா தவர்க்கு மனைவாழ்வின்
இனிமை என்னும்?

என்ற பாடலின் மூலம் குழந்தைகளில்லாதவரின் மனை வாழ்வில் இனிமை இல்லை என்று உணர்த்துகிறார் **வில்லிபுத்தூரார்.**

விளக்கை ஏற்றியதும் இருள் பறப்பது போல—சூரியனைக் கண்டதும் பனி விலகுவது போல குழந்தைகளைக் கண்டதும் கவலை மறைகிறது. இன்னும் சற்று விளக்கமாகக் கூற வேண்டுமானல், நரை, திரை, மூப்பை விலக்கி, இளமை உணர்வை, எழுப்பி இன்பம் பயப்பது குழந்தை என்றே கூறிவிடலாம். ஆம், நரை, திரை, மூப்பை உண்டாக்குவது கவலை. அந்தப் பொல்லாத கவலையை போக்கிவிடுகிறது குழந்தை. இதனைத்தான்,

'யாண்டு பலவாக நரையில ஆகுதல்
யாங்காகி யரென வினவுதி ராயின்
மாண்டவென் மனைவியொடு மக்களும்
நிரம்பினர்'

என்ற புலவர் பிசிராந்தையின் புறப்பாட்டு உணர்த்துகிறது.

நாம் எவ்வளவுதான் கோபமாக இருந்தாலும், காதல் வாழ்வின் அழகு தத்துவமான குழந்தையைக் கண்ணுறும்போது நமது கோபம் சுக்கு நூருகி விடுகிறதல்லவா.

'காதறுந்த ஊசியும் வாராது காண் கடை வழிக்கே' என்ற பட்டினத்தடிகள் கூட,

'**சேய்போல்** இருப்பர் கண்டீர் உண்மை ஞானம் தெளிந்தவரே' என்று கூறுகிருர்.

குழந்தைகள் உயிரோவியங்கள்—ஆம் பேசும் பொற் சித்திரங்கள். 'கண்ணம்மா என் குழந்தை' என்ற பாடலில் உயிர்க்கவி பாரதியார், குழந்தைகளை உயிரோவியமாக்கி, நம்மையும் அந்த ஓவியத்தின் பேரழகிலே—உயரிய இன்பத்திலே இலயிக்கச் செய்து விடுகிருர்.

குழந்தையின்பம் பற்றிக் கவிதை மழை கொட்டுகிருர் புரட்சிக் கவிஞர் பாரதிதாசன். நாமும் சிறிது நேரம் அந்த மழையை அனுபவிப்போம்.

இளகிய பொன் உருக்கின்
சிற்றுடல், இரு நீலக்கண்
ஒளிபடும் பவளச் செவ்வாய்
ஒருபிடிக் கரும்பின் கைகால்
அளிதமிழ் உயிர்பெற் ருங்கே
அழகொடும் அசையும் பச்சைக்
கிளியினைக் காணப் பெற்ருன்
கிடைப்பரும் செல்வம் பெற்ருன்.

கரும்பட்டு மென்மயிர் போய்க்
காற்ருேடும் ஆடக் கண்டோர்
விரும்பட்டும் என்று சின்ன
மின் நெற்றி கீழ்இரண்டு
சுரும்பிட்ட கருங்கண் காட்டி
எரும்புகொள் தொடர்ச்சி போலும்
அரும்பிட்ட புருவம் காட்டி
அழகு காட்டும் குழந்தை.

எள்ளிளஞ் சிறிய பூவை
எடுத்து வைத்திட்ட மூக்கும்
வள்ளச் செந்தாமரைப் பூ
இதழ்கவிந் திருந்த வாய்ப்பின்
அள் இரண்டும் சிவப்பு
மாதுளை சிதறச் சிந்தும்
ஒள்ளிய மணிச்சி ரிப்பும்
உவப்பூட்டும் பெண் குழந்தை.

அடுத்தபடியாக, கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை அவர்கள் அளிக்கும் குழந்தை இன்

பத்தைச் சிறிது அனுபவிப் போம் :

'' மாமணியோ முத்தோ
மரகதமோ மன்னவர்தம்
தாம முடிமீது
தயங்கும் வயிரமதோ !
முல்லை நறுமலரோ
முருகவிழ்க்கும் தாமரையோ !
மல்லிகைப் பூவோ
மருக் கொழுந்தோ சண்பகமோ?''

''கண்ணே மணியே முத்தந்தா
கட்டிக் கரும்பே முத்தந்தா
வண்ணக் கிளியே முத்தந்தா
வாசக் கொழுந்தே முத்தந்தா
தேனே பாலே முத்தந்தா
தெவிட்டாக் கனியே முத்தந்தா
மானே மயிலே முத்தந்தா
மடியில் வந்து முத்தந்தா ''

கவிமணி 'தேவி' அவர்களின் கற்பனைக் குழந்தை மானாக— மயிலாக, தேனாக வந்து நமக்கு முத்தமழை பொழியவில்லையா!

இனி கவிஞர் ச. து. சு. யோகி யார் காட்டும் குழந்தையைச் சற்று பார்ப்போம்.

' மாம்பழத்தின் மேனி
மதிஉறிஞ்சும் வட்டமுகம்
பூம்பருத்தி ஆடை
புனையாத தோகைமயில்.'

' சோதி உயிர் பாய்ந்து
துள்ளும் சிறிய உடல்
மோது இன்பமாய் வளர்த்த
மோகச் சிறு குழந்தை '

' பூப்போலக் கண்கள்
பூப்போலப் புன்சிரிப்பு
பூப்போலக் கைவிரல்கள்
பூப்போலப் பாதங்கள் '.

பெ. தூரன் அவர்களின் 'பச்சைக் குழந்தை'யைக் கண்டு இன்புறலாம் :

' பச்சைக் குழந்தை என்றால்—
எனக்கொரு
பாசம் பிறக்குதம்மா—அதன்
கொச்சை மழலையிலே — உளந்தான்
கொஞ்சிக் களிக்குதம்மா .'

' சின்னஞ்சிறு சிரிப்பால்—கவலைகள்
. தேய்ந்து மடியுதம்மா—அதன்
மின்னும் உடல்வளைவில்—அமுதின்
விண்சுவை ஏறுதம்மா '.

உலகப் பொது நூலாய திருக்குறளை இயற்றி அருளிய திருவள்ளுவர், தம் திருக்குற ளில் 'புதல்வரைப் பெறுதல்' என்ற ஒரு தனி அதிகாரத் தையே வைத்துள்ளார். குழந்தையின்பம் பற்றியும், மக்கட் பேறு பற்றியும் அவ் வதிகாரத்தில் மிகத் தெளி வாகச் சித்தரிக்கப்பட்டிருக் கிறது. 'ஒருவன் தான் பெற வேண்டிய பேறுகள் பலவற் றுள்ளும், அறிய வேண்டியன வற்றை அறியுந்திறனுடைய சிறந்த மக்களைப் பெறுவதே சிறப்புடையது—மதிக்கத்தக் கது' என்ற கருத்துடைய,

'பெறுமவற்றுள் யாமறிவ தில்லை யறிவறிந்த
மக்கட்பே றல்ல பிற'

என்ற குறளும், 'பெற்றோர்க் குத் தம் மக்கள் தங்கள் பிஞ்சு விரல்களால் அளைந்த-பிசைந்த சோறு அமிழ்தினும் இனிமை யுடையதாக்கப்படும்' என்ற கருத்தினையுடைய,

' அமிழ்தினு மாற்ற வினிதே தம் மக்கள்
சிறுகை யளாவிய கூழ் '

என்ற குறளும், 'ஒருவனது உடலுக்கு இன்பமளிப்பது, தான் பெற்ற இன்பக் குழந்தை யின் மெல்லுடலை வாரியள்ளி மாரோடணைத்துக் கொள்ளுத லும்; செவிக்கு இன்பம் பயப் பது அந்தக் குழந்தையின் மழ

லைச் சொற்களைக் கேட்டலு மாம்' என்ற கருத்துடைய,

'மக்கள் மெய்தீண்டல் உடற்கின்பம் மற்று அவர்
சொற்கேட்டல் இன்பம் செவிக்கு'

என்ற குறளும், 'தம் மக்களின் மழலைச் சொற்களைக் கேட்டறி யாதவரே குழலும், யாழும் இனிதெனப் பாராட்டுவர்' என்ற கருத்துடைய,

'குழலினிது யாழினிது என்பவர் தம் மக்கள்
மழலைச்சொற் கேளா தவர்'

என்ற குறளும் எவ்வளவு சிறப்பாக அமைந்திருக்கின்றன பாருங்கள்.

மக்கட் பேறு பற்றியும், குழந்தையின்பம் ப்ற்றியும் மிக அழகாகச் சித்திரித்துக் காட்டும் அருமையான பாடல் ஒன்றுள்ளது புறநானூற்றிலே :

'தமது குறுகிய கால்களால் குறுகக் குறுக நடை பயின்று கலத்தில் இடப்பெற்ற சோற்றினைப் பிஞ்சுக் கரங்களால் அள்ளித் தரையிலே சிந்தியும், சிறிய—மெல்லிய—அழகிய விரல்களால் பிசைந்து அதனைத் தோண்டியும், வாயிற் கவ்வியும், வாயிற் கவ்வியதை விரல்களால் துளாவியும், நெய்யிட்டுப் பிசையப்பெற்ற அந்தச் சோற்றின் அருமையை உணராது அதனை உடம்பிலே படுமாறு சிதறியும், இம்முறையிலே அறிவை இன்பத்தால் மயக்குகின்ற 'குழந்தைப்பேறு' பெற்றிருந்தால் தான், படைப்புப் பல படைத்துப் பலரோடுண்ணும் உடைப் பெருஞ் செல்வரின் வாழ்வும், நிறைவு பெற்ற பெருவாழ்வாக அமைகிறது' என்கிறார் அவர். இதனை மிகத் தெளிவாகப் படம் பிடித்

பல்பொடி விற்பவர் :— இது அருமையான பல்...பொடி! உயர்ந்த ரக பல்.......பொடி! குணமுள்ள பல்....பொடி!

கூட்டத்தில் ஒருவர் :—இதை உபயோகித்தால் எங்கள் பல்லும் பொடியாகிவிடுமோ?

துக் காட்டும் அந்தப் புறநானூற்றுப் பாடலைப் பாருங்கள்.

"படைப்புப் பலபடைத்துப் பலரோ டுண்ணும்
உடைப் பெருஞ் செல்வ ராயினு மிடைப்படக்
குறுகுறு நடந்து சிறு கை நீட்டி
இட்டுந் தொட்டுங் கவ்வியுந் துழந்தும்
நெய்யுடை யடிசின் மெய்பட விதிர்த்தும்
மயக்குறு மக்களை இல்லோர்க்குப்
பயக்குறை இல்லைத் தாம் வாழுநாளே"

அளவற்ற பற்றும் பாசமும் கொண்டு 'மண வாழ்வு' மேற்கொண்டவர்கள் கூட, ஒரு குழந்தை பெற்றதும் இருவரின் அன்பையும் ஒருங்கே அந்தக் குழந்தையிடங் காட்டத் தலைப்படுகிறார்கள். அந்தக் குழந்தையின் பொருட்டே தங்கள் வாழ்வு என்று கூடக் கருதுகிறார்கள். இன்பப் பெட்டகமாக விளங்கிய தன் இன்ப மனையாளின் மோகன லாகிரியே

ஒன்று திரண்டு அந்தக்குழந்தை யாக உருப்பெற்றுவிட்டதாகத் தலைவன் கருதுகின்றான்; தன் தலைவன் தனக்களித்த சலியாத இன்பமும், அவன் தன்பால் காட்டும் பேரன்புமே இவ்வாறு குழந்தையாக உருப்பெற்று விட்டதாகத்தலைவி கருதுகிறாள். இவ்வாறு இருவரும் எண்ணு வதாலேயே இருவரின் மனமும் பள்ளத்திற் பாயும் சிற்றாறு போல ஒருங்கே குழந்தையிடம் சென்று இலயித்துவிடுகிறது. இவ்வாறிருக்கும்போது, தலைவி தலைவனின் இன்ப வாழ்க் கைக்கு உயிரளிப்பதே 'குழந்தை யின்பம்' தான் என்று கூறுவதில் என்ன தவறு? இதற்குத் தமிழ் இலக் கியங்களிலிருந்து எவ்வளவோ சான்றுகள் காட்ட முடியும்.

தலைவன் வேற்றூர் செல்ல வேண்டிய நிலை ஏற்பட்டுவிடு கிறது. இதனைத் தன் காதலி பால் அறிவித்தால் பெரிதும் துயரடைவாள் என்றெண்ணி மறைத்தே வைத்திருந்தான். எப்படியோ இந்த இரகசி யத்தை அவள் தெரிந்துகொண் டாள். பெரிதும் வருத்தமுறு கிறாள். ஆனால் நீங்கள் என்னைப் பிரிந்து செல்லக் கூடாது; நான் தனித்திருக்கமாட்டேன் என்று அவள் நேரிடையாகக் கூறிவிட வில்லை. என்ன செய்தாள்? வேறு யாரிடமாவது கூறி, பயணத்தைத் தடைப்படுத்தி ளைா? இல்லை. அதற்கு அவள் கையாண்ட முறைதான் அப் பப்பா எவ்வளவு பண்பாடு டையதாக அமைந்திருக்கிறது பாருங்கள்!

கண்களில் நீர் தளும்ப அவள் முன்வந்து நின்றாள். அவள் மட்டுமா? இல்லை. பொங்கி வரும் கண்ணீரை மறைப்பாள் போல அவளது சிறு குழந் தையையும் வாரியணைத்துக் கொண்டு வந்து நின்றாள். குழந்தையின் தலையில், அன்ற லர்ந்து தள தளவென்றிருந்த நறு மலர் சூடப்பெற்றிருந்தது. அவள் குழந்தையை இறுக அணைத்து உச்சிமோந்தாள். அடேயப்பா! அந்த மூச்சிலே தான் எவ்வளவு வெப்பம்! ஆம், குழந்தையின் தலையில் சூடப் பெற்றிருந்த அன்றலர்ந்த அந் தப் புது மலர்கள் அவளது மூச் சுப்பட்ட மாத்திரத்தில் அழ கிழந்து வாடிவிட்டன. தலைவன் இதைக் கண்டான். அவனென்ன ஒன்றுந் தெரியாதவனா? இல் லையே. விஷயத்தைப் புரிந்து கொண்டான். அப்புறமென்ன? பயணம் தடைப்பட்டுவிட்டது. இதனைத் தலைவனே கூறுவதாக உள்ள அகநானூற்றுப்பாடலைப் பாருங்கள்.

"ஒவச் செய்தியின் ஒன்றுநினைந் தேற்றிப்
பாவை மாய்த்த பனிநீர் நோக்கமொ
டாகத் தொடுக்கிய புதல்வன் புன்றலைத்
தூநீர் பயந்த துணையமை பிணையல்
மோயினள் உயிர்த்த காலை மாமலர்
மணியுரு இழந்த அணியழி தோற்றம்
கண்ட கடிந்தனம் செலவே......."

அடுத்த படியாக, குறுந் தொகைப் பாடலொன்று தலைவி—தலைவன் காதலுக்குக் குழந்தை ஜீவனளிப்பதைச் சித்தரிக்கிறது பாருங்கள்.

தலைவன் வேற்றூர் போயிருந் தான். தலைவியிடம், திரும்பி வாராமல் சில காலம் தாமதித்து வருகிறான். காதல் தலைவனின் வருகையை எதிர்பார்த்து எதிர்பார்த்து ஏமாற்றமுற்ற தலைவி பெரிதும் சினமுற்றிருக் கிறாள். திரும்பிவந்த தலை வனோடு முகங்கொடுத்துப் பேசவே அவள் விரும்பவில்லை. அவர்களுக்கிடையே ஏற்பட் டுள்ள ஊடல் தணிந்தபாடில்லை.

அன்று முழு நிலா. வானத்தே வட்டமதி ஊர்ந்து கொண்டிருக்கிறது, எண்ணெயிலே வேகும் அப்பளத்தைப் போல. எங்கும் பசுமையான — வெள்ளிய நில வொளி. அந்த வட்ட முழுமதி அவன் உள்ளத்தே காதல் உணர்ச்சியையே கொப்பளிக்கச் செய்து கொண்டிருக்கிறது. ஏதும் செய்யத் தோன்ருத வனுகி, இறுதியில், பக்கத்திலே கிடந்த ஓர் உயரமில்லாத கட்டிலில் உட்காருகிருன். தலைவியின் மனம் இரங்கிற்றில்லை. அவர்களது கைக்குழந்தை கட்டிலில் அயர்ந்து தூங்கிக்கொண்டிருக்கிறது. அந்தக் குழந்தையின் தலையிலே சூடப் பெற்றிருந்த நறும் பூக்களிற் சில உதிர்ந்து சிதறிக் கிடந்தது. அ∴தோர் மலர்ப் படுக்கையாக தோற்ற மளித்தது. தளர்ந்த உள்ளத்துடன் அந்தக் கட்டிலில் அமர்ந்த தலைவன், படுக்கும் போது யானை பெருமூச்சு விடுமே அதைப்போலப் பெருமூச்சு விட்டானுகிக் குழந்தையை அப்படியே தழுவினுன் — அவ்வளவு தான். நடவாதது நடந்துவிட்டது. இந்த இன்பத்திலே தலைவி எல்லாவற்றையும் மறந்து, தன் காதல் தலைவனை விரைந்து அணைத்துக் கொள்கிருள். இன்ப வெள்ளம் பெருக்கெடுத்து ஓடுகிறது. இதனை, பாணனிடம் தோழி கூறுவது போல அமைந்துள்ள குறுந்தொகைப் பாடலைப் பாருங்கள்:

கண்டிசிற்பாண பண்புடைத்தம்ம !
மாலை விரிந்த பசுவெண் ணிலவிற்
குறுங்காற் கட்டி னறும்பூஞ் சேர்க்கை
பள்ளி யானையி னுயிர்த்தன னசையிற்
புதல்வற் றழீயினன் விறலவன்
புதல்வன் ருயவள் புறங்கவை யினளே !

இப்பொழுது நீங்களே கூறுங்கள் 'குழந்தையின்பம்' எவ்வளவு மகத்தானது என்பதை ! வாழ்க்கையில் ஒப்பற்ற இன்பம் பயக்கும் மிகச் சிறந்த இந்தக் 'குழந்தையின்பம்' வாழ்க ! வாழ்க !

ஸ்ரீ அம்பாள் கம்பெனியின் பார்ட்னர் திரு. கே. சடகோப முதலியாரின் இளைய மகள் திருமதி **கமலா தேவி** அவர்கட்கும், டி. கே. எம், & சன்ஸ் உரிமையாளர் திரு. டி. கே. முனிசாமி முதலியாரின் குமாரர் திரு. **டி. எம். பரமசிவம் பி. இ.** அவர்கட்கும் 21—6—53ல் லாயிட்ஸ் ரோடு 155 எண்ணுள்ள இல்லத்தில் திருமணம் சிறப்பாக நிறைவேறியது. பல பிரபலஸ்தர்கள் நேரில் வந்தும், ஆசிக் கடிதங்கள் அனுப்பியும் மணமக்களை வாழ்த்தினர். மணமக்களுக்கு "உமா"வின் ஆசியும் உரித்தாகுக.

பிராயச்சித்தம்

கி. ரா. கோபாலன்

ஒரு திருட்டுக் குற்றத்திற்கு ஆறு வருடம் சிறைத் தண்டனை அளிக்கப்பட்ட கந்தசாமி அன்று விடுதலை அடைந்தான். சிறையில் அவனுக்கு சகாவாக இருந்த கருப்பண்ணனுக்கும் அன்றே சிறைக் கெடு தீர்ந்துவிட்டதால், கந்தசாமியோடு விடுதலை கிடைத்தது. சிறையில் அவர்கள் ஒழுங்காக நடந்துகொண்டதற்காகவும் கொடுக்கப்பட்ட தொழிலை செவ்வனே செய்ததற்காகவும் சிறை அதிகாரிகளால் சிறு தொகை கடைசியில் கூலியாகக் கொடுக்கப்பட்டது. அது அவர்கள் தங்கள் சொந்த ஊர் போய் சேரப் போதுமானதாக இருந்தது,

வேலூர் ரயில்வே ஸ்டேஷன். கந்தசாமி ஏதோ ஆழ்ந்த யோசனையிலிருந்தான். எட்டு வருடமாக வெளி உலகத்தைப் பாராத கருப்பண்ணன் அன்று விடுதலை செய்யப்பட்ட சந்தோஷத்தில் புது உலகத்திற்கு வந்தவன் போல் வியப்போடு ஒவ்வொன்றையும் பார்த்து ரசித்துக் கொண்டிருந்தான். அப்பொழுது அவர்கள் இருந்த நிலையில் கந்தசாமி, தான் விடுதலையானது குறித்து வருந்துவது போலவும், கருப்பண்ணன் விடுதலை அடைந்தது குறித்துப் பூரிப்படைந்திருப்பது போலவும்தான் தோன்றியது.

திடீரென்று அந்த ரயில்வே ஸ்டேஷனில் டிக்கட் வாங்குகிற இடத்திற்குச் சமீபமாக ஒரு கலவரம். 'பளீர் பளீர்' என்று யாருக்கோ அடி மேல் அடி விழுந்துகொண்டிருந்தது. கருப்பண்ணன் இதைப் பார்த்துவிட்டு ஆவலோடு கலவரம் நடக்கும் இடத்தை நோக்கி ஓடினான். கந்தசாமி அப்பொழுதுதான் சுய உணர்வு பெற்றவன் போல் உட்கார்ந்த இடத்தை விட்டு நகராமல் குழப்பம் நடந்த இடத்தையே பார்த்துக் கொண்டிருந்தான்.

யாரோ ஒரு கனவானின் சட்டைப் பையிலிருந்த பணப் பையை ஒருவன் தளுக்காக எடுத்துவிட முயற்சி செய்திருக்கிறான். பையில் கனம் வைத்திருந்த கனவான் தூங்கிவிடவில்லை. பையில் கை வைக்க நினைத்தவனை கையும் களவுமாகப் பிடித்துவிட்டார், கேட்க வேண்டுமா! களவாட நினைத்

தவனுக்கு அடிமேல் அடி; கடைசியில் போலீஸ்காரன் கையில் அவன் ஒப்படைக்கப் பட்டான்.

கந்தசாமி தூரத்திலிருந்த படியே கலவரத்தின் விபரமெல்லாவற்றையும் தெரிந்து கொண்டுவிட்டான். சமீபத்தில் நெருங்கி வேடிக்கை பார்த்து விட்டு வந்த கருப்பண்ணன் சிரித்துக்கொண்டே கந்தசாமியை நெருங்கி "விஷயம் தெரிஞ்சுக்கிட்டீங்களா அண்ணே" என்றான்.

"எல்லாம் தெரிஞ்சுக்கிட்டேன். இதென்ன புதிசு? ரயில்வே டேஷன்லே இந்த மாதிரி ஜேப்படி சகஜம் தானே...." என்றான் கந்தசாமி.

"ஐயோ பாவம்! முட்டாப் பய! ஆள் நோட்டம் கண்டுக்காமே எங்கோ கொண்டுபோய் கையை வைச்சுப்பிட்டான்; செமந்த அடி அண்ணே!" என்றான் கருப்பண்ணன்.

"இன்னும் அவனுக்கு அனுபவம் பத்தலேன்னுதான் சொல்லணும்.... உன்னைப்போல இருந்தா இப்படிப் பொறியிலே மாட்டிப்பானா?" என்றான் கந்தசாமி.

நூல்களைக் கற்பவன் கற்றதை மறக்க நேர்ந்தாலும் அதனை மறுபடியும் கற்றுக் கொள்ளலாம், தனது ஒழுக்கத்தில் குறைவுபட்டால் அவன் கடைத் தேறவே முடியாது.

—வள்ளுவர் கருத்து

"நாமல்லாம் ஏன் அண்ணே இந்த மாதிரி சின்ன வியவகாரத்துக்கெல்லாம் போறோம். சிக்கிக்கிட்டாலும் எட்டு வருசம் ஒம்பது வருசமாவது ஜெயில்லே இருக்கும்படியான காரியமாச் செய்ய மாட்டோமா? போகட்டும் நாம ரெண்டு பேரும் இன்னிக்கி வெளியிலே வந்துட்டோம். அந்த இடத்துக்கு இன்னும் யாராவது போய்தானே ஆகணும்?"

"மகராசனைப் போகட்டும் ஜெயிலு நமக்குத்தானா சொந்தம்? நாமும் இருக்கிற நாள் வரையிலேதானே இருக்க முடியுது. இன்னொரு நாள் கூட இருக்கேன்னு வைச்சிருப்பாங்களா? ஜெயில் சாப்பாடாயிருந்தாலும் பொசுப்புள்ள வரையிலேதான் கிடைக்கிறேங்குது....".

"அண்ணே நீ பேசற தினுசையும் இருக்கிற தினுசையும் பார்த்தா ஜெயில்லேருந்து விடுதலையானதுக்காக வருத்தப்படராப்பிலேன்னு தெரியுது"

கந்தசாமி எங்கோ பார்த்துக் கொண்டு ஒரு பெருமூச்சு விட்டவாறு, "ஆமாம்! நான் செய்த குற்றம் தெரிஞ்சுபோனதிற்காக ஆறு வருஷம் தண்டிச்சாங்க. தெரியாத செய்த பாவத்துக்கெல்லாம் எப்போ தண்டனை அனுபவிக்கிறது? அதை நினைச்சாத்தான் மனசு நிம்மதியே படல்லே. அதுக்காகவாவது ஆயுள் பரியந்தமும் ஜெயில்லையே இருந்து செத்திருந்தேன்னா மனசுக்கு ஒரு நிம்மதி இருக்கும்...." என்றான் கந்தசாமி அடக்கமான குரலில்.

"நீ சொல்றது வேடிக்கையாகத்தான் இருக்கு அண்ணே! தப்பிச்சுக்கிட்ட குற்றத்துக்

கெல்லாம் தண்டனை கிடைக்கல்லையேன்னு வருத்தப்படுற ஆத்மாவை இப்போதான் நான்பாக்கிறேன்'' என்றான் ஏளனமாகச் சிரித்துக்கொண்டே கருப்பண்ணன்.

''உனக்கு வேடிக்கையாய் இருக்கலாம். ஆனால் எனக்கு செய்த குற்றத்துக்குஏதாவது தண்டனை அனுபவிச்சாத்தான் மன நிம்மதி ஏற்படும் போல் தோணுது. இல்லாவிட்டால் உலகம் அறியாமல் நாம் செய்த இன்னும் எவ்வளவோ குற்றத்துக்கெல்லாம் வேறு இன்னும் ஏதாவது ஒரு வகையில் கடுமையான தண்டனை ஏற்படுமோ என்றுதான் நினைக்க வேண்டியிருக்கிறது....''

''ஆமாம், செய்ததையெல்லாம் நினைச்சுப் பார்த்தா மனசுக்கு ஒரு திகில் ஏற்படத்தான் செய்யுது. அதுகளையெல்லாம் மறக்கவும் முடியல்லே. ஆனால் அதுக்காக நாம் தண்டனை அடையல்லையேன்னு வருத்தப்படறதுதான் வேடிக்கையா இருக்கு....''

''வேடிக்கையாத்தான் இருக்கும், ஆனால் இந்த ஜென்மத்திலே செய்த குற்றத்துக்கு தண்டனையை இந்த ஜென்மத்திலேயே அனுபவிச்சுப்பிடணும். மீதி மிச்சம் வைச்சுக்கக் கூடாது....''

''சரிதான் போ....... ஹூம் உனக்கு அடுத்த ஜன்மத்தைப் பற்றின கவலையெல்லாம் வந்துட்டாப்பிலே இருக்குது.... அது கிடக்குது நீ என்ன அப்படிப் பிரமாதக் குற்றமெல்லாம் செய்துட்டே....?''

''என்ன செய்துப்பிட்டேனா....? நீ செய்த குற்றமெல்லாவற்றையும்விட நான் செய்த குற்றம் கொடுமையானதாகத்தான் இருக்கும்.... நீ கொலை செய்திருக்கிறாயா....?''

''கொலையா....? பல இடத்திலே புகுந்து கொள்ளையடிச்சிருக்கேன். ஆனா இதுவரையிலே அந்த மாதிரி செய்ததில்லை. அவ்வளவு துணிச்சலும் எனக்கு ஏற்பட்டதில்லை''.

''கொள்ளையடிக்கிறது சாதாரணக் குற்றம் தான். ஒருவனுடைய பொருளும் பணமும் அவனுக்கே சாசுவதமானதல்ல. ஆனால் உயிர் அப்படியல்ல. அதை நாம் அபகரிக்கக் கூடாது....நான் ஒரு கொலை செய்திருக்கிறேன்....''

''அப்படியா....?''

''ஆமாம்! கொலை செய்தது கூட பெரிதல்ல. இன்னொரு

பெரிய குற்றமும் செய்திருக்கேன்....''

''என்ன....?''

''திருடனாய் இருந்தாலும் நன்றி மறப்பானா? தன்னை அன்போடு வைத்து ரட்சித்த மனிதனுக்கு துரோகம் செய்வானா....?''

''அண்ணே, திருடறது தான் என் ஆயுசிலேயே பிழைப்பாயிடுச்சு. ஆனா இதுவரையில் ஒரு கொலை கூட செய்ததில்லை. யாராவது என்னைப் பிடிக்க வந்தால் ஓடுவேன். அகப்பட்டுக்கிட்டு அடிபட்டாலும் படுவேன். ஒருத்தரைக் கொலை செய்யறத் துணிவு இன்னும் எனக்கு வரல்லே.... அதே போல நன்றி மறக்கிற குணமும் என்கிட்டே கிடையாது.'' என்றான் உறுதியான குரலில் கருப்பண்ணன்.

கந்தசாமி மெதுவான குரலில் ''உனக்கு அவ்வளவு துணிச்சல் போதாதுன்னு எனக்குத் தெரியும். ஆனால் நான் அப்படி இல்லை. எந்தப் பாதகம் செய்யவும் அஞ்சமாட்டேன். ஒரு கொலை செய்தேன். நான் செய்த அந்தக் கொலையின் பழியை எனக்கு உபகாரம் செய்த ஒரு புண்ணியவான் தலையில் விடியும்படியாச் செய்தேன். ஒன்றும் அறியாத ஒரு நல்ல மனுஷ்யன் தலையில் பழி விழும்படியாய்ச் செய்தது நான் கொலை செய்த பாவத்தைவிட பெரிய பாவமில்லையா....?'' இந்த வார்த்தைகளைச் சொல்லி நிறுத்தும்போது அவன் இதயமே பொறுமி வெடித்துவிடும் போலிருந்தது.

கருப்பண்ணன் ஆச்சர்யத்தோடு கந்தசாமியின் முகத்தை பார்த்துக்கொண்டே ''அப்படியா...?'' என்று ஒரு பெருமூச்சு விட்டான்.

இந்த சமயத்தில் ஏதோ வண்டி வருவதற்கு அடையாளமாக மணி அடிக்கப்பட்டது. ரயில்வே ஸ்டேஷனிலிருந்த ஜனங்களிடையே ஒரு பரபரப்பும் ஏற்பட்டது. ''நம்ம வண்டிதான் வரப்போகுது போலிருக்குது. எழுந்திருங்க அண்ணே!'' என்றான் கருப்பண்ணன் பரபரப்போடு.

கந்தசாமி மெதுவாக எழுந்தான். இருவரும் நடந்தனர்.

வண்டி வந்து நின்றது. கருப்பண்ணன் சுறுசுறுப்பாக தாங்கள் சௌகர்யமாக உட்காருவதற்கு வேண்டிய இடத்தைத் தேடிப் பிடித்தான். அவர்கள் இருவரும் அமர்ந்தனர். அவர்கள் ஏறி இருந்த பெட்டியில் அதிக ஜனக்கூட்டம் இல்லை. அதிலிருந்த மூன்று நான்கு மனிதர்களும் கிராமவாசிகள். அவர்கள் ஏதோ மழை பெய்யாத அக்கிரமத்தைப் பற்றிப் பேசிக் கொண்டிருந்தனர்.

வண்டி புறப்பட்டது. கருப்பண்ணனின் முகம் தெளிவாக இருந்தது. ஜெயிலிலிருந்து விடுதலை அடைந்து தன்னுடைய சொந்த ஊரை நோக்கி இப்படி ரயில் பிரயாணம் செய்வது அவனுக்கு எல்லையற்ற ஆனந்தத்தையும் நிம்மதியையும் கொடுத்தது. அதற்கு நேர் மாறாகக் கந்தசாமியின் முகத்தில் தெளிவுக்குறியே தென்படவில்லை. சிந்தனையும் குழப்பமும் தான் தேங்கிக் கிடந்தது. மனதில் அடிக்கடி ஏற்படும் திகிலில் மருண்டவன் போல்தான் தென்பட்டான்.

சிறிது நேரம் மௌனம் சூழ்ந்தது. கருப்பண்ணன்தான் முதலில் பேசத் தொடங்கினான், ''என்ன அண்ணே இப்படி இருக்கீங்க. ஏதோ முன்னாலே செய்த பிசகையெல்லாம்

நினைச்சு வருத்தப்படறதிலே என்ன புண்ணியம். இத்தனை நாள் ஜெயில்லே கிடந்து வாடியாச்சு. இனிமேயாச்சும் கண்ணியமா ஏதாச்சும் செய்து உலகத்திலே பிழைக்கப் பாக்கலாமல்லவா?''

கந்தசாமி 'ஹூம்' என்று முனகிக்கொண்டே ''நீ இனிமேல் ஏதாச்சும் செய்து பிழைக்கிறதாத் தீர்மானம் செய்துட்டே போலிருக்குது....'' என்ருன்.

''ஆமாம்'' என்ருன் தீர்மானமான குரலில் கருப்பண்ணன்.

''நல்லதுதான்.... கண்ணியமாப் பிழைக்கிறத்துக்கு ஏதாவது பிழைப்புக் கிடைக்கணுமே....? ஆனல் எனக்கு இந்த உலகத்திலேயே கண்ணியமா உயிர் பிழைக்க ஜெயில்தான் சரியான இடமாப்படுது. வெளியிலே இருந்தா இன்னும் யாரையாவது கொலை செய்யச் சொல்லும். அந்தப் பழியை எந்த அப்பாவி தலையிலாவது வைக்கத் தோணும். இதெல்லாம் ஜெயில்லே சுலபமா நடக்காது பாரு....?'' என்ருன் கந்தசாமி.

''அண்ணே நீங்க செய்த ஏதோ ஒரு பிசகான காரியத்தையே நினைச்சு மனசை வாட்டிக்கிறீங்க. ஒரு தடவை பிசகு செய்தா அதுமாதிரியே எப்போதுமே செய்திருவோம்னு நினைக்க முடியுமா?''

''ஒரு தடவை கொலை செய்யத் துணிச்சல் ஏற்பட்டுட்டா அப்புறம் நூறு கொலை செய்தாலும் அது சகஜமாத்தான் போயிடும். அதுக்காகத்தான் கொலை செய்தவங்களுக்கெல்லாம் மரண தண்டனை கொடுத்துடறாங்கோன்னு கூட நினைக்கிறேன் - அவனை உயிரோடே வெளியிலே வைச்சிருந்தா தினம் மூணு கொலைகூட சகஜமாச் செய்துடுவான்....''

இதற்கு மேல் கருப்பண்ணனுல் கந்தசாமிக்குச் சமாதான வார்த்தை சொல்லுவது கடினமாகப் பட்டது. அவன் ஒன்றும் பேசவில்லை. ஒரு ஸ்டேஷனில் வண்டி நின்றது. ஆர்வத்தோடு வெளியே வேடிக்கை பார்க்க ஆரம்பித்தான் கருப்பண்ணன்.

கந்தசாமிக்கு வயது அறுபதிற்கு மேலிருக்கும்; கருப்பண்ணனுக்கு வயது முப்பத்தைந்துதான் இருக்கும். அவன் திருடுவதையே ஆரம்பத்திலிருந்து தொழிலாகக் கொண்டிருந்தாலும் உலகத்தில் சந்தோஷத்தை அனுபவித்து வாழ வேண்டும் என்ற ஆவலும் ஆசையும் உள்ளவனுகத்தான் தோன்றினுன். தான் விடுதலை அடைந்ததும் தன் உறவினளாகிய ஒரு பெண்ணைக் கல்யாணம் செய்துக்கொள்ளப்போவதாகவும் சொல்லி இருக்கிருன். இதிலிருந்து வாழ்க்கையில் கருப்பண்ணன் அனுபவிக்க வேண்டியவைகள் எவ்வளவோ இருக்கிறது என்பதைக் கந்தசாமி உணர்ந்துகொண்டான். ஆனுல் கந்தசாமிக்கு அப்படி இல்லை. அவனுக்கு வயது அறுபதிற்கு மேலாகிவிட்டது, இனிமேல் உலகத்தில் அனுபவிக்க வேண்டியது அவனைப் பொறுத்த வரையில் எதுவும் இருப்பதாக அவனுக்குத் தோன்றவில்லை. அவனுக்கு சொந்த வீடோ பெண்டாட்டி பிள்ளையோ எதுவும் இல்லை. அவனுக்கு ஜெயிலில் இருப்பதைவிட வெளியுலகில் இருப்பது வெறுப்பாகவும், அலுப்பாகவும், ஒரு புறத்தில் பயங்கரமும் வெட்கக்கேடு நிறைந்ததாகவும் கூடத் தோன்றியது.

கந்தசாமி மெதுவாகப் பேச ஆரம்பித்தான். ''ஜெயில்லே போன வருஷம் ஒரு சாமியார் இருந்து இறந்து போனரே உனக்குத் தெரியுமா....?'' என்ருன்.

''தெரியும், அவரு ஏதோ கொலைக்குற்றம் செய்ததினுலே தான் ஜெயிலுக்கு வந்தாருன்னு கேள்விப்பட்டேன். இந்த மாதிரிக் கொலைகாரனெல்லாம் சாமியார் வேஷம் போட்டுக்கிட்டிருந்தா ஏன் உலகம் கெட்டுப் போகாது....?'' என்ருன் கருப்பண்ணன்.

''அந்தச் சாமியாரின் முகத்தைப் பார்த்தா அவரு துணிஞ்சு கொலை செய்யக்கூடியவரா உனக்குத் தெரிஞ்சுதா?''

''அப்படித் தோணல்லே. ஆனுல் ஒருத்தர் குணத்தை, முகத்தைப் பார்த்தே சொல்லறது கொஞ்சம் கஷ்டம்தான். நல்லவங்க போல பார்வைக்கு இருப்பாங்க. ஆனுல் குணமும் மனசும் அதற்கு நேர்மாருகத் தானிருக்கும். இதோ பாரு அண்ணே உன் முகத்தைப் பார்த்து கொலை செய்யக்கூடியவன்னு எவனுவது சொல்லிடுவானு? ஆனுல் நீயோ கொலை செய்திருக்கேங்கிறே....!''

''நீ சொல்றதும் உண்மைதான். ஆனுல் அந்தச் சாமியாரைப் பற்றி அப்படிச் சொல்லிட முடியாது''.

''அதை யாரு கண்டா....? இப்படிச் சாமியாராய் இருந்து எத்தனை பேரு கொலை பாதகக் காரியமெல்லாம் செய்யருங்க தெரியுமா?''

''ஆனுல் அந்தச் சாமியார் அப்படிப்பட்டவரு அல்ல....''

''சரிதான்....'' என்று சொல்லிவிட்டு அடுத்த ஸ்டேஷன் வந்துவிட்டதால் வெளியே கவனத்தைச் செலுத்தலானுன் கருப்பண்ணன்.

அந்த ஸ்டேஷனிலிருந்து வண்டி கிளம்பியது.

சிந்தனையில் ஆழ்ந்திருந்த கந்தசாமி மறுபடியும் பேச ஆரம்பித்தான். ''அந்தச் சாமியாரு எந்த ஊருன்னு உனக்குத் தெரியுமா?'' என்ருன்.

"எனக்குத் தெரியாது" என்றான் கருப்பண்ணன்.

"எங்க ஊரு...."

"சிதம்பரமா....?"

"ஆமாம்...."

"உனக்கும் அவருக்கும் பழக்கமுண்டுன்னு சொல்லு...."

"நெடுநாளாப் பழக்கமுண்டு. ஜெயில்லேகூட அவரோடு நான் நெருங்கிப் பழகிக்கிட்டிருந்ததை நீ பார்த்திருக்கலாமே?"

"பார்த்திருக்கேன். ஆனல் ஏற்கனவேயே நீங்க தெரிஞ்சவங்கன்னு நினைக்கல்லே, அவரு நெடுநாளா ஜெயில்லேயே இருந்தாரு போலிருக்கே...."

"ஆமாம்! அவருக்கு ஜன்ம தண்டனை கொடுத்திருந்தாங்க கொலை செய்த குற்றத்துக்காக. நான் ஜெயிலுக்கு வரத்துக்கு நாலு வருஷம் முன்னலேயே அவரு ஜெயிலுக்கு வந்துட்டாரு...."

"சரிதான்; அப்படி அவரு யாரைக் கொலை செய்தாரு....?" என்றான் கருப்பண்ணன்.

"அவரு ஒருத்தரையும் கொலை செய்யல்லே...." என்று சொல்லிவிட்டு மௌனம் சாதித்தான் கந்தசாமி.

"அவரு கொலை செய்யல்லேன்னு நீ எப்படி நிச்சயமாய் சொல்லமுடியும். அண்ணே....?" என்றான் கருப்பண்ணன்.

"நிச்சயமாய் அவரு அந்தக் கொலையைச் செய்யலேன்னு எனக்குத் தெரியும். பழிதான் அவர்மேலே விழுந்தது. அந்தக் கொலையைச் செய்தவன் நான் தான்...." என்றான் மெதுவான குரலில் கந்தசாமி.

இதைக் கேட்டதும் கருப்பண்ணன் வியப்படைந்து "என்ன நீ தானு..?" என்று துள்ளிக் குதித்தான்.

"ஆமாம் நானேதான். பழி அந்த உத்தமன் தலையில் விழுந்தது. பழி அவர்மேல் ஏற்படும் படிச் செய்ததும் நான்தான். பாவம்! அநியாயமாக அந்த மனிதன் சிறையில் கிடந்து வாடி உயிரை விட்டாரு. இந்தப் பாவம் நான் எத்தனை ஜென்மம் எடுத்தாலும் தொலையாது...." என்று சொல்லி ஒரு பெருமூச்சு விட்டான் கந்தசாமி.

சில நிமிஷ நேரம் மௌனம் நிலவியது. "இந்தக் கதைதான் எப்படி நடந்தது?" என்றான் சில வினடிகள் பொறுத்துக் கருப்பண்ணன்.

சிந்தனையில் குழம்பி நின்ற கந்தசாமி சிறிது நிமிர்ந்து உட்கார்ந்து, "எப்படி நடந்ததா.... இது நடந்து பத்துவருஷத்துக்கு மேலாயிடுத்து. இந்தச் சாமியாருக்கு ஆதியிலே சாமிநாத பிள்ளைன்னு பேரு. அவரு சாமியாரானவுடனே தன் பெயரை சாது யோகானந்தருன்னு மாத்திக்கிட்டாரு.... சாது யோகானந்தருன்னு, சிதம்பரத்திலே அனேகம் பேரு நல்லதும் சொல்லுவாங்க-அனேகம் பேரு கெட்டதும் சொல்லுவாங்க. ஏன்னு அவரு நடத்தை அப்படி இருந்தது...."

"அப்படின்னு கொஞ்சம் கெட்ட நடத்தையும் உள்ளவருதான் போலிருக்குது....?"

"அப்படியெல்லாம் எந்தக் கெட்ட நடத்தையும் உள்ளவரு அல்ல. அவரு வித்தியாசமில்லாமே யதார்த்தமாச் செய்யும் காரியங்களேயும் கெடுதலா மதிச்சு ஜனங்க கயிறு திரிக்க ஆரம்பிச்சாங்க. தவிற அவரு

சாமியாரா ஆகிறதுக்கு முன்னலே நல்ல பண வசதியுள்ள மனிதராயிருந்ததினலே கொஞ்சம் ஆடம்பரமா வாழ்ந்திருக்காரு. என்னதான் மனது வெறுத்து சாமியாராப் போனலும் முன்னலே செய்த கூத்தையெல்லாம் ஜனங்க மறந்துடுவாங்களா? ரொம்பப் பேரு அவரு போலித்தனமா வேஷம் போடறதாத்தான் பிரசாரம் செய்து வந்தாங்க....''

''ஏன் பிரசாரம் செய்யமாட்டாங்க. பணத்திமிரு இருந்த போதெல்லாம் அட்டகாசமாய் இருந்துட்டு, பணம் வரண்டு போனவுடனே பெயரை மாத்திக்கிட்டுச் சாமியாராய் போயிட்டா, போலித்தனமா வேஷம் போடருருன்னு சொல்லாமே என்ன செய்வாங்க....?''

''ஜனங்க ஏதாவது சொல்லிக்கிட்டுப் போகட்டும். ஆன அவரு சாமியாராய்ப் போறத்துக்கு முன்னடியும் அவரோடு கூட நான் இருந்திருக்கிறேன். பிற்பாடும். அவரு பக்கத்திலேயே நான் இருந்திருக்கிறேன். அவரு வேஷம் போட்டு ஊரை ஏமாற்றச் சாமியாராஞருன்னு யார் சொன்னலும் நம்ப மாட்டேன் நான்....''

> மனிதன் நல்லவன்தான். தன்னை உண்டாக்கின கடவுளிடம் அறிவை ஒப்படைத்திருந்தால் புத்திசாலியாக வாழ்ந்திருக்க முடியும். அப்போது அது தன்னிடமிருந்ததாக அவனுக்குத் தெரியாது. இப்பொழுது அறிவாளியாக அல்லல் படுகிருன்.
>
> — புதுமைப் பித்தன்

''சரிதான். அப்படின்னு உனக்கும் அவருக்கும் ரொம்ப நெருங்கின பழக்கம் இருந்ததாத் தெரியுது....''

''ஆமாம் அதிலே என்ன சந்தேகம்? நெடு நாளா அவர் வீட்டிலே நான் வேலை பார்த்தேன். அவரு குடும்பத்திலே உள்ளவங்களெல்லாம் எங்கிட்டே ரொம்ப விசுவாசம் உள்ளவங்க. வாலிபப் பருவத்திலேயிருந்து அவங்க வீட்டோடு இருந்துட்டதினலே எனக்கு அவங்க வீடே சொந்த வீடுமாதிரி ஆயிடுச்சு. நானும் எல்லோருகிட்டேயும் அன்பாயும் விசுவாசமாயும் தான் நடந்துகிட்டேன். சாமிஞத பிள்ளையினுடைய தகப்பனரு இருந்த வரையில் வீட்டுலே எல்லாம் ஒழுங்காத்தான் நடந்து வந்தது. ஊரிலேயே பெருத்த பணக்காரக் குடும்பம். சாமிஞத பிள்ளை தகப்பனருக்கு ஒரே மகன்—வேறு சந்ததியே கிடையாது. மிகவும் செல்லமாக வளத்து வந்தாங்க. தகப்பனர் இருந்த வரையிலே சாமிஞத பிள்ளையும் மிகவும் குணமாகவும் புத்திசாலியாகவும், அடக்கமாகவும் தான் இருந்து வந்தார். அவருடைய தகப்பனரு உயர்ந்த படிப்புக்கெல்லாம் அனுப்பிப் படிக்கவைத்தாரு. பிள்ளையும் நன்ருகப் படித்து அறிவாளியாகத்தானிருந்தாரு; ஆனல் தகப்பனர் இறந்தவுடனே சேர்ந்த சகவாசத்தினலே குணம் கெட்டுத் திரிந்தாரு. தகாத ஆசையும், மோகமும் ஏற்பட்டு பணத்தைச் செலவு செய்தாரு. உலகத்திலே எத்தனை கெட்ட பழக்கம் உண்டோ அத்தனையும் அவருகிட்டே இருந்தது. ஏராளமான பணத்தை வகை வழி தெரியாமல் வாரி இறைத்தாரு,

பாவம்! அவருடைய சம்சாரம் மகா உத்தமி. புருசனை நல்ல வழிக்குத் திருப்ப எவ்வளவோ முயற்சி செய்தாள். ஒன்றும் பலிக்கவில்லை. கடைசியில் மனசுநொந்து இறந்துபோனள். பெண்டாட்டி இறந்தத்திலே இருந்து அவருக்குக் கஷ்ட காலம் பிடித்தது. திடீரென்று ஒரு நாள் கைப் பொருளெல் லாம் செலவானதோடு பெருத்த கடனாளியாகி விட் டதையும் அவர் உணர்ந்தாரு. கடன்காரர்கள் சொத்தையெல் லாம் பறித்துக்கொண்டார்கள். உறவுக்காரங்க, சினேகிதருங்க எல்லோரும் கைவிட்டுட்டாங்க. அந்த சமயத்திலே யாரு அவ ரைக் கைவிட்டாலும் நாம் விடக் கூடாதுன்னு அவரோடு இருந் தேன். ஊருக்கு எல்லையிலே ஒரு சிறு தோப்பு. அவருக்கு இருந்த சொத்திலே அது ஒன்றுதான் பாக்கி. அந்தத் தோப்பிலே ஒரு சிறு குடிசை யைப் போட்டுக்கிட்டு இருந்து வந்தாரு. திடீர்னு அவருக்கு ஒரு நாள் ஏதோ மனதிலே தோணவே தலையை மொட்டை அடிச்சுக்கிட்டு காவி வேட்டியும் கட்டிக்கிட்டாரு. நல்லா படிச்ச வரானதினலே 'யோகானந் தர்'ன்னு பெயரை வைச்சுக் கிட்டு ஜனங்களுக்கெல்லாம் ஏதேதோ உபதேசம் செய்ய ஆரம்பிச்சுட்டாரு....'' கந்தசாமி இந்த இடத்தில் ஒரு பெரு மூச்சு விட்டுவிட்டுக் கொஞ்சம் நிறுத்தினன்.

''சரிதான், அப்போ எல்லாம் நீ அவருகிட்டயே தானி ருந்தே....?''

''ஆமாம்! அவரு இருந்த தோப்பைக் காவல் காத்துக் கவனிச்சுக்கிட்டிருந்திடுவோ மேன்னு இருந்தேன். அந்தத் தோப்புலே நிறைய மாமரங் களும் தென்னை மரங்களும் இருந்தன. அதிலேயிருந்து கிடைச்ச வருமானம் அவருக் கும் எனக்கும் செலவுக்குப் போதுமானதாயிருந்தது. அவரு எதையுமே கவனிக்க மாட்டாரு. எல்லாம் என் இஷ் டம்தான். உள்ளபடியே அவ ருக்கு உலகத்திலே எதிலுமே கவலை இருந்ததாத் தெரி யல்லே. சிலநாளைக்கு ஏதாவது பால் பழம் சாப்பிடுவாரு. சில நாளைக்கு எதுவுமே சாப்பிட மாட்டாரு. சில நாளைக்குப் பேசு வாரு; சில நாளைக்கு வாய் திறந்தே பேசமாட்டாரு. நாள் கணக்கா கண்ணை மூடிக்கிட்டே நிஷ்டையிலே இருந்துடுவாரு.... அனேகம் பேர் அவரை தரி சிக்க வருவாங்க. அந்தத் தோப்பே ஒரு ஆசிரமம் மாதிரி தான் இருந்தது. அவரைப் போலவே நானும் தலையை மொட்டை அடிச்சுக்கிட்டு காவி வேட்டி உடுத்திக்கிட்டேன். உள்ளபடியே எனக்கு அதி லெல்லாம் இஷ்டமில்லாட்டியும் அவருகிட்டே இருக்கும்போது அப்படி வேஷம் போடறது தான் நல்லதுன்னு தெரிஞ்சுக் கிட்டேன். அந்த ஆசிரமத்திலே, எல்லாம் என் அதிகாரத்திலே தான் இருந்தது...''

''பாவம்! அப்படியெல்லாம் இருந்தபோது நீயேன் இப்படி யெல்லாம் ஜெயில்லே வந்து அவஸ்தைப்படணும். அவரு மேலே ஏன் கொலைக் குற்றம் ஏற்படணும்....? என்ருன் கருப் பண்ணன் ஆச்சரியத்தோடு.

''எல்லாம் தலைவிதிதான்-கரு மம்தான். உலகத்திலே எல் லாரும் நல்லவங்களா இருந் துட்டா ஜெயில்னு ஒண்ணு இருக்கவே வேண்டாம். மனி தனுக்குக் கர்வம், பேராசை, பொருமை, அகங்காரம் இதெல்

லாம் ஏற்பட்டுப் போகுது. அதனாலே தீச்செயலெல்லாம் செய்யறான். என் மனசிலே கர்வம் ஏற்பட்டுது, பொறாமையும் பேராசையும் தலை தூக்கிச்சு. நான் தகாத காரியங்களெல்லாம் செய்யத் தலைப்பட்டேன். ஆனால் சாமியாருக்கு அதெல்லாம் ஏற்படலல்லே. என்னாலே பழி அவர் மேலே விழுந்தது. அவர் எல்லாரையும் சமமா நினைச்சாரு, எல்லாருகிட்டேயும் சகஜமாப் பழகினாரு, எல்லாருகிட்டேயும் வித்தியாசமில்லாமல் அன்பு செலுத்தினாரு. இதுதான் அவரு செய்த பிசகு. இதனாலே ஊர்லே அவருக்குக் கெட்ட பேரு ஏற்பட்டதும் தவிர கொலை செய்தாருன்னு வீண் அபவாதமும், தண்டனையும் கிடைத்தது....'' என்றான் கந்தசாமி.

''பொதுவா உலகத்திலே மனுஷன் ரொம்ப நல்லவனாக்வும் இருக்க முடியல்லே....'' என்றான் கருப்பண்ணன்.

''அவரு ரொம்ப நல்லவரா இருந்தத் தொட்டுத்தான் நான் செய்த கொடுமையை அவர் மீது சுலபமாக சுமத்த முடிந்தது....! எனக்குப் பிள்ளை குட்டி இல்லாட்டியும் யாருக்கோ சேர்த்து வைக்கணும் போல காசாசை பிடித்தது. சாமியாருக்கு சொந்தமான அந்தத் தோப்பை நான் எப்படியாவது எனக்குச் சொந்தமாக்கிக்க நினைச்சேன். அவரு இறந்து போனாலும்கூட அந்தச் சொத்துச் சுலபமா எனக்குக் கிடைக்கக்கூடியதாய் இல்லை. அதுக்கு வாரிசாப் பங்காளிக்காரங்களெல்லாம் இருந்தாங்க. இந்த ஆசை ஏற்பட்டதிலேயிருந்து என் மனசே சரியாயில்லை. எப்படி சூழ்ச்சி செய்து அந்த சொத்தை அபகரிக்கலாமென்ற யோசனையே பெரிதாகப்

தகப்பனார்:— ஏண்டா கழுதை. இவ்வளவு நேரமா எங்கேடா போயிருந்தே.

பையன்:— சலவைத் துணி வாங்க வண்ணாரத் தெருவுக்கு போயிருந்தேம்ப்பா.

போச்சு. சாமியார் உயிரோடு இருக்கும் வரையில் யாரும் அங்கே பாத்தியம் கொண்டாடிக் கொண்டு வருவதற்கு வழியில்லை. சாமியார் உள்ள வரையில் அந்தத் தோப்பின் வரும்படியை அனுபவித்துக்கொண்டு சுகமாய் இருக்கலாம். ஆனால் அதோடு மாத்திரம் எனக்குத் திருப்தி ஏற்படவில்லை. அந்தத் தோப்பு எனக்கு சொந்தமாகி விட்டால் உலகத்தில் எவ்வளவோ ஆசைகளை நிறைவேற்றிக் கொள்ளலாம் என்று தோன்றியது. இந்த ஆசை ஏன் ஏற்பட்டதுன்னும் எனக்குத் தெரியாது. இதை எப்படி அடக்குவது என்றும் எனக்குத் தெரியவில்லை. சாமியாரைக் கொலை செய்து விடலாமா என்றுகூட அனேகம் தடவை யோசனை செய்தேன். அவரைக் கொல்லுவதினால் என்ன

லாபம்? அவரிடம் அந்தத் தோட்டத்தை என் பெயருக்கு எழுதி வைக்கும்படிக் கேட்கவும் வழியில்லாமல் இருந்தது. ஏனென்றால் அந்த இடத்தில் அவர் ஏதோ நிழலுக்கு ஒதுங்குவது போலிருந்தாரே தவிர தனக்கு உலகத்தில் எவ்வித சொத்து சுதந்திரமும் இல்லை என்று சொல்லி வந்தார். மேலும் மண்ணாசை, பெண்ணாசை, பொன்னாசையெல்லாம் கூடாது என்று எனக்கு வேறு உபதேசம் செய்து வந்தார். அவருக்கு சீடன் மாதிரி காவி கட்டி வேஷம் போட்டுக்கொண்டிருக்கும் நான் என் மனதிலுள்ள ஆசையையே வெளியே காட்டிக்கொள்ள முடியாமல் இருந்தது. இந்த தர்மசங்கட மான நிலைமையில் என்ன செய்வதென்று தெரியாமல் தடுமாறிக் கொண்டிருந்தேன்.

''ஆசிரமத்துக்கு அடிக்கடி 'காமு அம்மா'ன்னு ஒரு பெண் பிள்ளை வந்துக்கிட்டிருந்தா. அவளுக்கு வயசு நாற்பது இருக்கும். விதவை. அவளுக்கு சாமியாரிடம் ரொம்ப பக்தி. அந்த அம்மாவுக்குக் கணக்கு வழக்கில்லாத சொத்து இருக்குது, அதை அனுபவிக்க வாரிசு இல்லைன்னுகூடச் சொல்லிக்கிட்டாங்க. அந்த அம்மா சாமியாரு எந்த வழியிலே தன் பணத்தைச் செலவு செய்யச் சொல்கிறாரோ அந்த வழியில் செலவு செய்யத் தயாராய் இருந்தாள். சாமியார் வேண்டுமானால் அவளிடமிருந்து எவ்வளவு வேண்டுமானாலும் பணம் வாங்கிக் கொள்ளலாம். ஆனால் அவருக்குத்தான் பணம் என்றாலே விஷமாயிருந்ததே! அந்த அம்மாள் தன் மனதிற்குத் தோன்றியபடி நல்ல வழியில் அந்தப் பணத்தைச் செலவு செய்யலாம் என்று சொன்னாரே தவிர தன் உத்திரவாக எதுவும் சொல்லவே இல்லை. காமு அம்மாளும் தன் மனதிற்குத் தோன்றியபடி கொஞ்சம் கொஞ்சம் தருமம் செய்துக் கொண்டுதான் வந்தாள். ஆனால் மிஞ்சியுள்ள ஏராளமான சொத்துக்களை என்ன செய்யப் போகிறாள் என்று மாத்திரம் தெரியவே யில்லை. நான் ஆரம்பத்திலேயே அவளிடமிருந்து பணம் பறிக்கும் வழி ஒன்றைத் தெரிந்து கொண்டேன்.

(அடுத்த இதழில் முடியும்)

தமிழ் மணத்துக்கு மாறாகத் தமிழ்ச் சிறுகதைகளில் பிரெஞ்சு மணமும், ரஷ்ய மணமும், ஆங்கில மணமும் வீசுகின்றன. ஹாஸ்ய உலகிலோ ஜெரோம் கே. ஜெரோம், 'விட்ஹவுஸ்' முதலானவர்கள் தங்களுக்கு இயல்பான முகக்களையை இழந்தவர்களாய் உட்குழிந்த கண்களும், ஒட்டியுலர்ந்த கன்னமுமாய் தமிழுடையில் நடமாடுகிறார்கள். இதுமட்டுமா? மேலை நாட்டு நன்மக்கள் கழித்துத் தள்ளும் குப்பை கூளங்களும், நம் கதையுலகிலும் ஹாஸ்ய உலகிலும் ஏறி விடுகின்றன.

—பி. ஸ்ரீ.

யார் குற்றவாளி?

எஸ். கிருஷ்ணன்

அன்று ஞாயிற்றுக்கிழமை. மணி பதினொன்று இருக்கும். மாரிக்காலம் முடிந்து கோடைக் காலத்தின் ஆரம்பமாதலால் வெய்யில் சிறிது உக்கிரமாகத் தானிருந்தது. இருப்பினும் என் ஆப்த நண்பன் பாலு கல்கத்தா விலிருந்து வந்திருப்பதாகக் கேள்விப்பட்டேன். அவனைப் பார்க்க வேண்டுமென்ற துடிப் பில் கொடிய வெய்யிலையும் லட் சியம் செய்யாமல் அவன் வீட் டிற்குச் சென்றேன்.

பாலு வீட்டில்தான் இருந் தான். என்னைக் கண்டதும் முக மலர்ச்சியோடு வரவேற்ருன். சிறிது நேரம் குடும்ப க்ஷேம லாபங்களைப் பற்றி பேசிக் கொண்டிருந்தேன். பேச்சுக் கிடையில் பாலு, ஒரு வெற் றிலைப் பெட்டியைத் திறந்து வெற்றிலை போட ஆரம்பித் தான். நான் பேசாமல் உட் கார்ந்திருந்தேன். அவன் என் னைப் பார்த்து "என் இப்படி உட்கார்ந்திருக்கிருய். வெற் றிலை போடு" என்ருன்.

நான் "இல்லை.... வேண் டாம்...." என்றேன். அவனுக்கு இந்த பதில் ஆச்சரியத்தைய யளித்துவிட்டது. ஒரு நாளில் ஒரு மணிக்குக் குறைந்தது பத்து தடவையாவது வெற்றி லைப் பாக்கு போட்டுக் குதப்பிக் கொண்டிருக்கும் நான் வெற் றிலைப்பாக்கு போட்டுக் கொள்ள இணங்காதது அவ னுக்கு பெருத்த வியப்பை கொடுத்திருந்தால் அது அதி சயமாகாது. அவன் ஆச்சரி யத்தோடு என்னைப் பார்த்துக் கொண்டு "வேண்டாமா....! நீ கூடவா வெற்றிலை வேண்டா மென்கிருய்?" என்ருன்.

"ஆமாம்.... அது உனக்கு அதிசயமாகத்தானிருக்கும். அந்த பழக்கத்தை நிறுத்தி இரண்டு வருடமாகிவிட்டது" என்றேன் நான்.

"இரண்டு வருடமாகி விட் டதா.... எப்படி உன்ஞல் நிறுத்த முடிந்தது....? ஒருநாளைக்கு ஆறு கௌளி வெற்றிலையும், ஒரு வீசைச் சீவலையும், பத்துப் பலம் புகையிலையையும் துவம்சம் செய்துகொண்டிருந்த நீ, இவ்வ ளவு சுலபமாக இந்தப் பழக் கத்தை விட்டுவிட்டாய் என் பதை நம்பமுடியவில்லை" என் ருன் பாலு.

எத்தகைய பழக்கத்தை வேண்டுமானுலும் விட்டு விட லாம். எல்லாவற்றுக்கும் மனந் தான் காரணம். வெற்றிலைப் பாக்கென்ருல் போதும், அமிர்த மாயிருந்தாலும் அலட்சியம் செய்துவிடுவேன் என்று உனக்குத் தெரியும். ஆனுல் இப் போது வெற்றிலைப் பாக்கென் ருல் விஷத்தை விடக் கொடிய தாக நினைக்கிறேன். இதற்கும் ஒரு காரணமுண்டு".

"நீ வெற்றிலை பாக்கு போடு வதை விட்டதற்கு ஒரு காரண மிருக்க வேண்டுமென்ருல் அந்

தக் காரணம் மிகவும் அதிசய மான காரணமாகத்தானிருக்க வேண்டும்'' என்ருன் பாலு வியப்போடு என்னைப் பார்த்துக்கொண்டே.

நண்பன் காரணம் கேட்டான். ஆனல் நண்பனுக்குச் சட்டென்று பதில் சொல்லாமல் அந்த இடத்தில் சிறிது தயக்கம் காட்ட வேண்டியதாய்த்தானிருந்தது. அந்த ரகசியம் எனக்குத்தான் தெரியும். நான் வெற்றிலே போடும் வழக்கத்தை நிறுத்திவிட்ட காரணத்தைப் பற்றி என்னைக் கிளறிக் கேட்டவர்கள் எத்தனையோ பேர் உண்டு. ஆனல் என் மனதில் புதைந்து கிடந்த அந்த ரகசியத்தை எவரிடமும் சொல்ல கூச்சமடைந்தேன். என் மனே அபிப்பிராயத்தை கேட்ட சிலர் நான் வீணுக மிரண்டு போய்த்தான் இந்த பழக்கத்தை விட்டுவிட்டேன் என்று சொல்லலாம். மனேதத்வத்தில் தீரத் தெளிந்தவர்கள் நான் வெற்றிலே பாக்குப் போடுவதை நிறுத்த நேர்ந்தது சரியான காரணத்தோடு கூடியதுதான் என்றும் முடிவு கட்டலாம். நான் என் மனதில் இயற்கையாகவோ, அனுவசியமாகவோ வளர்ந்திருக்கும் பீதி நிறைந்த ரகசியத்தை இதுவரையில் வெளியிட விரும்பியதே இல்லை. இப்போது பாலு கேட்கிருன். இந்த சமயத்தில் அவனுக்கும் சரியான பதில் சொல்லாமல் வேறு ஏதாவது சொல்லி தப்பிவிடலாம். ஆனல் அவனிடமாவது அந்த ரகசியத்தை அந்தரங்கமாகக் கூறி வைப்போம் என்று எனக்குத் தோன்றியது. அதைச் சொல்ல மனதைச் சிறிது திடப்படுத்திக் கொள்ளத்தான் வேண்டியிருந்தது.

''பாலு, வாழ்க்கையில் ஏதேனும் ஒரு நிகழ்ச்சி, மனதிலுள்ளதையே மாற்றி, அவனுடைய பழக்க வழக்கத்தையே மாறுதலடையும்படிச் செய்துவிடலாம் என்பதை நீ ஒப்புக்கொள்கிருயல்லவா'' என்றேன்.

''அதை நான் ஒப்புக்கொள்கிறேன்.... உன்னை வெற்றிலேப் பாக்கு போடுவதை விடும்படி செய்த நிகழ்ச்சி எதுவாயிருப்பினும் அது கொஞ்சம் அதிசயமான நிகழ்ச்சியாகத்தானிருக்க வேண்டும். அப்படி என்ன, நடந்துவிட்டது. ஜன்மாந்திரத்தோடு பிறந்த இந்த பழக்கத்தை விடும்படி....?''

''உன்னிடந்தான் உண்மையைச் சொல்லிவிடுகிறேனே. என் மனதில் ஏற்படும் எண்ணம், சரியானதா தவருனதா என்பதை என் மனதாலேயே தீர்மானமாக முடிவுகட்ட முடியவில்லை'' என்றேன்.

இதைக் கேட்டதும் ''அட பைத்தியக்காரா....இவ்வளவுதான....? இதற்காகவா வெற்றிலே போடும் பழக்கத்தை நிறுத்திவிட்டாய்.... என்று நீ பரிகாசம் செய்யலாம் ஆனல் இந்த மனது இருக்கிறதே அங்கே கிளம்பும் சந்தேகங்களுக்கு சமாதானம் சொல்வது மிகக் கஷ்டமாக இருக்கிறது. ஒரு குற்றமேற்பட்டது. அது என் குற்றமாக இருக்கலாம்; இல்லாமலிருக்கலாம். என்னுடைய குற்றமாகவேயிருந்தாலும், நேர் முகமாக என் மீது சாட்டக் கூடிய குற்றமாகாது, இடையே ஏற்பட்ட தவறினல் நிகழ்ந்திருக்கலாம். ஆனல் இடையே ஏற்பட்ட அந்த தவறுதலுக்கும் மூல காரணமாக இருந்தவன் நான்தான் என்ற சந்தேகம் என் மனதில் தோன்றிவிட்டால்....? அதை எப்படி எந்த வகையில்

சமாதானம் செய்ய முடியும்? வெற்றிலைப் பாக்குப் போடும் வழக்கத்தை விட்டுவிட்டேன், அதை விட்டதினால் கூட என் மனதிற்குச் சமாதானம் ஏற்படவில்லை'' என்று சொல்லி விட்டு ஒரு பெரு மூச்சுவிட்டு நிறுத்தினேன்.

பாலுவிற்கு என்னுடைய வார்த்தைகள் சிக்கலான புதிராகத்தானிருக்க வேண்டும். ''என்னடா.... பெரிய தத்வ ஞானி போல்.... பேச ஆரம்பிக்கிறாயே'' என்று கேட்டான்.

''என் மனதிலுள்ளதை சொல்லிவிட்டுப் போக வேண்டுமென்றால் இத்தகைய பூர்வ பீடிகை போட்டுதான் ஆரம்பிக்க வேண்டியிருக்கிறது. இது ஒரு பெரிய கதையல்ல....சிறு நிகழ்ச்சி....ஒரு சிறு நிகழ்ச்சியாயிருந்தாலும் அன்றோடு மறந்து விடக் கூடியதுமல்ல....

ஒரு நாள் என் மனைவி, என்னிடம் ''என் வீட்டிற்குப் பக்கத்து, வீட்டில் குடியிருந்தவர்களின் மூன்று வயது குழந்தை 'ரமணி' திடீரென்று இறந்து விட்டதாக ஒரு துக்கச் செய்தியை சொன்னாள். இதைக் கேட்டதும் எனக்கும் துக்கமாய்த்தானிருந்தது. மூன்று வயதுக் குழந்தை; எப்பொழுதும் என்னுடைய வீட்டில் வந்து விளையாடிக் கொண்டிருக்கும் அழகான உருவம்; மழலைச் சொல்; இந்தச் சிறு வயதிலேயே எதிர்காலத்தில் புத்திசாலியாக விளங்கக் கூடியவன் என்பதற்கான அறிகுறிகள் பொருந்திய குழந்தை. இதை நினைக்கும்போது எனக்கு துக்கமேற்படாமல் எப்படியிருக்கும்? நான் துடிப்போடு திடீரென்று

''நேற்று காலையில் கூட விளையாடிக் கொண்டிருந்தானே.... ஐயோ பாவம்.... இந்த மாதிரி குழந்தைகளுக்குத்தான் கடவு

மாயா..

ளும் அல்பாயுஸைக் கொடுத்திருக்கிருர்'' என்று மிகவும் வருத்தத்தோடு சொன்னேன்.

''குழந்தைகளுக்குத்தான் எப்போது என்ன வருமென்று தெரிவதில்லே.... நேற்று சாயந்திரம் வரையில் நன்ருகத்தான் பேசிக் கொண்டிருந்தானும். ஆனல் சாயந்திரம் அம்மாவிடம் வாயைக் காட்டி ''ஊவா.... ஊவா....'' என்று சொல்லிக் கொண்டிருந்தான். அவனுடைய தாயார் அவனுடைய வாயைப் பார்த்தபோது வாய் முழுதும் வெந்திருப்பதுபோல் தோன்றியதாம். அதற்கேதோ மருந்து போட்டாளாம். ஆனல் நடுராத்திரியில் அவன் இரண்டு தடவை வாந்தியெடுத்தானும். அவ்வளவுதான். அந்த உயிரை எமன் கொண்டுபோய் விட்டான்'' என்று கண்களில் கண்ணீருடன் சொல்லி முடித்தாள் என் மனேவி மங்களம்.

அப்போதுதான் என் வீட்டிற்குள்ளே வந்த தயிர்க்காரி ''ஐயோ.... இதென்ன அநியாயமம்மா.... அடுத்த வீட்டு அம்மா தங்க விக்ரஹம் மாதிரி ஒரு குழந்தையை எடுத்து....எமன் கையில் கொடுத்துவிட்டு தவிக்கிருங்களே.... அந்தக்குழந்தைதான் என்ன அழகு....? என்ன சமத்து? நேத்துக் காலேயிலே கூட உங்கவீட்டு வாசல்லே விளே

யாடிக்கிட்டிருந்துது. நம்ப வீட்டு ஐயா சுண்ணும்புக் 'கரண்டவ'த்தை வெற்றிலைப் பொட்டியிலிருந்து எடுத்துது.... அதிலிருந்த சுண்ணும்பை வெண்ணை மாதிரி வழிச்சிக்கிட்டிருந்துது. நான் அந்த கையிலே இருந்த சுண்ணும்புக் 'கரண்டவ'த்தைப் பிடுங்கி வீட்டுக்குள்ளாரே போட்டுட்டு அதன் கையிலே இருந்த சுண்ணும்பையும் வாங்கித் தூற எறிஞ்சேன். குழந்தை என்னத்தைக் கண்டுது? யாருக்குத் தெரியும் குழந்தை சுண்ணும்பைத் தின்னூட்டு சாகப்போறதூன்னு....'' என்று சொல்லிவிட்டு ஆயாசத்தோடு வெளியே போனுள்.

எனக்கு தயிர்க்காரி சொன்ன வார்த்தைகள் சுளீரென்று தைத்து மனதைக் கிளறிவிட்டது. எனக்குக்கூட நன்ருக ஞாபகத்துக்கு வந்தது; முதல் நாள் ரமணி வந்திருந்தான். அவனேடு நெடுநேரம் வாசற் பக்கத்துத் திண்ணையில் பேசிக்கொண்டிருந்துவிட்டு குளித்து, சாப்பிடுவதற்கு உள்ளே வந்தேன். ஆனுல் நான் வரும்போது வாசற்பக்கத்துத் திண்ணையில் வெற்றிலைப் பெட்டியைத் திறந்தபடியே வைத்துவிட்டு வந்திருந்தேன்.

அன்று மாத்திரமில்லை.... எப்பொழுதுமே அவசரத்தில் நான் பெட்டியை அப்படியே போட்டுவிடுவதுதான் வழக்கம். நான் குளித்து சாப்பிட்டுவிட்டு வெளியே வந்து வெற்றிலைப் போட்டுக்கொண்டு, சுண்ணும்பைத் தேடியபோது சுண்ணும்புக் 'கரண்டவம்' காணவில்லை!.... அதைத் தேடினேன்.

அது ஜன்னலுக்குச் சமீபமாகக் கிடந்தது. வெற்றிலைப் பெட்டியில் கிடந்த சுண்ணும்புக் 'கரண்டவம்' ஜன்னலுக்குச் சமீபமாக எப்படிப் போயிற்று என்பதை சிந்திக்க எனக்கு நேரமில்லை. 'கரண்டவத்தை' திறந்து பார்த்தேன், அதில் அடைக்கப்பட்டிருந்த சுண்ணும்பைக் காணும். அப்போதும் அதிலிருந்த சுண்ணும்பு எங்கே போயிற்று என்பதைப் பற்றிக் கவலைப்படவில்லை. மறுபடியும் உள்ளேயிருந்து ''கரண்டவத்'' தில் சுண்ணும்பை எடுத்துக் கொண்டு வந்து வெற்றிலைப் போட்டுக்கொண்டேன். ஆனுல் அதுபற்றி அவ்வளவு நேரமும் சிந்திக்காத எனக்கு தயிர்க்காரியின் வார்த்தையைக் கேட்டபிறகு ஒவ்வொன்றையும் சிந்திக்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது. அதை நினைக்கவே எனக்குத் திகிலாக இருந்தது. அடுத்த வீட்டுக் குழந்தை என் வீட்டிற்கு வந்து விளையாடுவது சகஜமாக இருந்தது. என் வீட்டுப் பண்டங்களை அது யதேச்சையாக தொடுவதற்கோ, எடுத்து விளையாடுவதற்கோ ப்ரீதியின் காரணமாக நானும் என் மனைவியும் பூரண சுதந்திரம் கொடுத்திருந்தோம். தயிர்க்காரி 'சுண்ணும்புக் ''கரண்ட''வத்தை குழந்தைக் கையில் பார்த்தேன்' என்ருள் - என் மனைவி மங்களம், குழந்தை வாயில் புண்ணுக இருந்தது.... அவளும் அதைப் பார்த்ததாகக் கூறுகிருள். இதற்குமேல் நான் விளக்கிச் சொல்வதற்கு என்ன வேண்டும். வெற்றிலைப் பெட்டியிலிருந்த சுண்ணும்புக் கரண்டாம் ஜன்னலுக்குச் சமீபமாகக் கிடந்தது எனக்குத் தெரியும். இதையெல்லாம் அப்போது சிந்திக்க முடியாவிட்டாலும் இப்போது சிந்திக்க வேண்டிய நிலைமை ஏற்பட்டு விட்டதல்லவா? வெற்றிலைப் பெட்டியிலிருந்து சுண்ணும்புக் 'கரண்ட'வத்தை அந்தக் குழந்தைதான் எடுத்திருக்க வேண்டும் என்று

நிச்சயமாகத் தெரிகிறது. ஏன் அதிலிருந்த சுண்ணாம்பையும் அவன் தின்றிருக்கக்கூடாது! குழந்தையின் கையிலிருந்த சுண்ணாம்பை வாங்கித் தூர எறிந்ததாகத் தயிர்க்காரி கூறுகிறாள். அந்த குழந்தை சாப்பிட்டிருக்காது என்பதற்கு அது ஒரு சமாதானமாக இருந்தாலும், அவள் பார்ப்பதற்கு முன்னால், அல்லது அவள் சென்ற பிறகு அவளால் பிடுங்கி எறியப்பட்ட சுண்ணாம்பை மறுபடியும் ஏன் குழந்தை எடுத்துச் சாப்பிட்டிருக்கக்கூடாது?

இந்த எண்ணம் என்னை சித்ரவதை செய்தது. இதற்கு குற்றவாளி யார்....? என் அஜாக்கிரதையால் தானே ஒன்றும் அறியாத, பொருளுக்குப் பொருள் வித்தியாசம் தெரியாத, களங்கமற்ற இருதயத்தோடு கூடிய அந்தக் குழந்தை 'சுண்ணாம்பு' எடுத்து சாப்பிட்டு உயிர் விடும்படியாக நேர்ந்தது. என் மனதை சமாதானம் செய்து கொள்ளவே முடியவில்லை. இன்றுவரை அந்தக் குழந்தை சுண்ணாம்பு சாப்பிட்டதினால் தான் இறந்துவிட்டதென்று நிச்சயமாக முடிவு கட்ட முடியாவிட்டாலும் 'ஏன் அப்படியிருக்கக் கூடாது?' என் மனச்சாட்சி என்னை "நீ குற்றவாளி" என்று குத்திக் காட்டுகிறது. இன்று வரை குத்திக் கூறி சித்ரவதை செய்து கொண்டுதானிருக்கிறது. அன்றிலிருந்து இன்று வரை எனக்கு 'வெற்றிலை பாக்கு' என்றாலே ஒரு திகிலும் குழப்பமும் ஏற்படும். இறந்து போன குழந்தை 'ரமணி'யின் களங்கமற்ற முகம்தான் என் கண்ணெதிரில் தோன்றும். இது நானாக என்னைப் பற்றி அனாவசியமாக கற்பித்துக் கொண்ட பைத்தியக்கார முடிவாக இருந்தாலும் இருக்கலாம். ஆனால் 'நீ குற்றவாளி' என்று என் மனது மாத்திரம் இடித்துக் காட்டிக் கொண்டேயிருக்கிறது. இதைப் பற்றி உன் அபிப்பிராயம் எப்படி இருக்கும் என்பது எனக்குத் தெரியாது." என்று சொல்லி நிறுத்தி விட்டு பாலுவின் முகத்தைப் பார்த்தேன்.

அவன் பச்சாதாபத்தோடு என்னைப் பார்த்து சிறிது நேரம் மௌனமாக இருந்துவிட்டு "நீ குற்றவாளியா? இல்லையா என்பதை நான் முடிவாகச் சொல்ல முடியாது. ஆனால் இந்த நிகழ்ச்சி உன் நெடு நாள் பழக்கத்தை ஒரு நொடியில் உதறிவிடும்படி செய்திருந்தால் அதைப் பற்றி நான் ஆச்சர்யப்படுவ

திற்கில்லை. நான் கல்கத்தா சென்ற பிறகு கூட என்னால் இந்த வெற்றிலை போடும் வழக்கத்தை விட முடியவில்லை. வெற்றிலை சரசமாக கிடைக்காத இடத்தில் கூட, நான் எப்படியேனும் சிரமப்பட்டு வெற்றிலை வாங்கிப் போடுவது ஒரு கெட்ட பழக்கமாகி விட்டது. இந்த கெட்ட பழக்கத்தை நிறுத்த வேண்டுமென்று வெற்றிலையே அகப்படாத ஒருதிவாந்திரத்தில் கொண்டு போய்விட்டால் கூட அங்கும் எப்படியாவது சிரமப்பட்டு வெற்றிலை வரவழைத்து போடத்தான் தோன்றும் போலிருக்கிறது. இந்தக் கெட்டப் பழக்கத்தை நிறுத்த வேண்டுமென்றே உனக்கேற்பட்டது போல் ஏதேனும் மனதை உறுத்தும் நிகழ்ச்சிகள் நடந்தால் தான் முடியுமென்பதை நான் இப்போது பரிபூர்ணமாக உணர்ந்து கொண்டேன்" என்றான் கோபு.

நெடு நாளாக என் மனதில் அடைந்து கிடந்த ஒரு இரகசியத்தை துணிவோடு பாலுவிடம் சொன்னது எனக்குச் சிறிது மன ஆறுதலைத் தந்தது. அவன் என்னைப் பைத்தியக்காரனென்று நினைக்காமல் என் மனோ தர்மத்தை உணர்ந்து பேசியதில் ஒரு திருப்தியும் ஏற்பட்டது.

ஈ. சிவமும், எறும்பு சிவமும்!

புதுமைப்பித்தன் நினைவாக, அவருடன் பழகிய என் நண்பர் வே. தில்லை நாயகத்துடன் பேசிக் கொண்டிருந்த சமயம் புதுமைப் பித்தனைப் பற்றிய ஒரு விபரம் சொன்னார்.

புதுமைப் பித்தன் பத்திரிகை உலகில் சேவை செய்ய முன்வந்த புதில் வ. ரா. அவர்களைக் கண்டு தன் திறமைக்கு ஏற்ற இடம் பார்த்துத் தரும்படி கேட்டுக் கொண்டாராம்.

வ. ரா. அது சமயம் செட்டி நாட்டு எல்லைக்குள் ஏடு ஒன்றை நடத்தி வந்த **ஈ. சிவம்** என்பவருக்கு சிபாரிசு கடிதம் கொடுத்து அனுப்பி வைத்தாராம்.

போன மச்சான் திரும்பி வந்தான் என்பது,போல் போன வேகத்துடன் திரும்பி வந்து வ. ரா. முன்பு நின்றாராம் புதுமைப் பித்தன்.

"என்ன சொ. வி. வந்துவிட்டாய்! ஈ. சிவம் நல்லவராயிற்றே?" என வ. ரா. விசாரிக்கவும்,

"அந்த ஈ. சிவம், எறும்பு சிவமாக மாறி என்னை பிச்சுப் பிடுங்கிவிட்டார் போங்கள்" என்றாராம் புதுமைப் பித்தன் சலிப்போடு.

வ. ரா. வயிறு வலிக்க சிரித்து ஓய்ந்துவிட்டு, சொ. வி. நீ எழுதுவதில் மட்டுமல்ல, சமயத்தில் ஹாஸ்யமாகவும் பேசுகிறாயப்பா! என்று பாராட்டினாராம்.

—பக்தன்.

"ஏன் இன்று சிவானந்தத்தை இன்னும் காணோம்?" என்றார் ராமலிங்கம்.

"இன்னிக்கு எதானும் அதிசயமான 'நியூஸ்' அகப்பட்டிருக்காது. தேடிக்கொண்டிருப்பார்." என்று நான் கூறி முடிப்பதற்கும், "ஆமாம்ப்பா, இன்னிக்கு உண்மையிலேயே ஒரு முக்கியமான 'நியூஸ்' கொண்டு வந்திருக்கேன்" என்று கூறிக்கொண்டே கையில் பிரித்த பத்திரிகையுடன் சிவானந்தம் உள்ளே நுழைவதற்கும் சரியாக இருந்தது.

"சரிதான்! ஏதோ ஒரு கொலை கேஸ் போலேயிருக்கு" என்றார் ராமகிருஷ்ணு.

நண்பர் சிவானந்தம் ஒரு 'ரிடையர்டு' ஸப்-இன்ஸ்பெக்டர். இது மாதிரிதான் தினமும் ஒரு அதிசய செய்தியுடன் வருவார். தனக்குத் தெரிந்து நடந்த அதே மாதிரி நிகழ்ச்சியையோ, அல்லது தன்னுடைய சொந்த அனுபவம் பற்றியோ (மிகவும் பயங்கரமாகவே இருக்கும்) கூறுவார். அவர் கூறுவது உண்மையோ அல்லது வெறும் கட்டுக் கதையோ; மொத்தத்தில் எங்களுக்கு இருக்கும் ஆவலில் அவர் கூறுவதை நன்கு ரசித்துக் கேட்போம். நண்பர் ராமலிங்கம் சென்ற வருடம் தேர்தலில் தோற்றுப் போனவர். என்னைப் பற்றியோ, ராமகிருஷ்ணுவைப் பற்றியோ கூறுவதைவிடக் கூறுமல் இருப்பதே மேல். மாலை நேரத்தில் பொழுதைக் கழிப்பதற்குக் 'கிளப்'பில் கூடுவது வழக்கம். அங்குதான் மேற்கூறிய சம்பவங்கள் சுவாரஸ்யமாக நடப்பதும் வழக்கம்.

சிவானந்தம் விஷயத்தைப் படித்தார்:—

இரட்டைக் கொலை!

இவ்வூரில் நேற்று மாலை இரண்டு படுகொலைகள் நடந்துள்ளன. இரண்டு கொலைகளைச் செய்தவனும் தங்கவேலு

என்னும் வாலிபன். வாலிபன் கொலை செய்த அதிர்ச்சியினாலே, பைத்தியம் பிடித்தவனாகிவிட்டான். கொலை செய்யப்பட்ட இருவருள் ஒருத்தி இளம் வயதுப் பெண். மற்றொருவன் ஓர் வாலிபன். மேற்படி கொலையாளி, கொலை செய்யப்பட்ட பெண்ணின் காதலன் எனத் தெரிய வருகிறது. தான் காதலித்த பெண்ணையே தங்கவேலு எப்படிக் கொலை செய்யத் துணிந்தான் என்பது மர்மமாகவிருக்கிறது. போலீஸார் தங்கவேலுவைக் கைது செய்துள்ளனர். மேலும் புலன் விசாரித்து வருகின்றனர்.''

படித்து முடித்த சிவானந்தம் தன் அனுபவமடைந்த கண்களால் ஒருமுறை எங்களைச் சுற்றிப் பார்த்தார்.

''இது மாதிரி விஷயங்கள் எத்தனையோ வருகின்றனவே. இது என்ன அதிசயம்?'' என்றேன் நான்.

''ஆனால், சுமார் இருபது வருடத்திற்கு முன்னால் என் அனுபவ பூர்வத்திலே நடந்த ஒரு கேஸைப் பற்றிதான் இப்பொழுது சொல்லப் போகிறேன். அதே மாதிரி கேஸ்தான் நாம் இப்பொழுது பேப்பரில் பார்த்ததும். ஆனால் அந்தக் கேஸை ஆராய்ந்து அதிலிருந்த சிக்கலை விடுவிக்க நானும் ஸி. ஐ. டிபார்ட்மெண்ட் சங்கரனும் பாடுபட்ட மாதிரி, ஒரு பயலாலே இந்தக் கேஸை சமாளிக்க நிச்சயம் முடியாது'' என்று மேஜை மேல் அடித்துப் பேசினார் சிவானந்தம்.

''அப்படியானால், அந்தக் கேஸைப் பற்றித்தான் சொல்லுமே, கதை கேட்ட மாதிரியாகவும் இருக்கும்'' என்றார் ராமகிருஷ்ணா.

''இதோ பாருங்க நீங்க என்ன வேண்டுமானாலும் நினைச்சுக்கங்க. நடந்த விஷயத்தைச் சொல்ல ஆரம்பிச்சேன்னு, அப்புறம் நீங்க அசந்து போயிடுவீங்க'' என்றார் சிவானந்தம் விடாமல்.

''ஸார்! நீங்க ஆரம்பிக்கலாம். ராமகிருஷ்ணா சொல்வதை லட்சியம் பண்ணாதீங்க'' என்றார் ராமலிங்கம்.

இதற்குள் எங்களுக்குச் சற்று தூரத்தில் ஒரு நாற்காலியில் தனியே அமர்ந்திருந்த ஓர் ஒல்லியான 'கோட்' அணிந்திருந்த பேர்வழி எங்கள் அருகில் காலியாயிருந்த நாற்காலியில் உட்கார்ந்து கொண்டார். அவருக்கு வயது சுமார் நாற்பது இருக்கலாம். எங்கள் 'கிளப்'பில் அன்று தான் சேர்ந்தவர் போல் காணப்பட்டார்.

''உங்கள் பெயர்....'' என்று இழுத்தார் சிவானந்தம்.

''கிருஷ்ணமூர்த்தி. இந்தக் 'கிளப்'பிலே நானும் மெம்பராகச் சேர்ந்திருக்கிறேன். கதைகள் கேட்பதென்றால் எனக்கு ரொம்ப ஆவல் ஸார்!'' என்றார் அந்தப் புதியவர்.

சிவானந்தம் எங்களையெல்லாம் அவருக்கு அறிமுகம் செய்து வைத்தார். நாங்கள் எல்லாம் சிவானந்தத்தைப் பற்றி இரண்டு வரிகள் அதிகமாகவே கிருஷ்ணமூர்த்திக்கு எடுத்துக் கூறினோம். கிருஷ்ணமூர்த்தி மிகவும் ஹாஸ்ய ரசனை உள்ளவர் என்பது அவருடைய பேச்சிலிருந்தே தெரியவந்தது. சிவானந்தத்தைப் பற்றிக் கிருஷ்ண மூர்த்தியிடம் அதிகமாகக் கூறியதாலோ என்னவோ, சிவானந்தத்தின் முகத்தில் அசட்டுக்களை வழிந்தது.

"சரி, சரி! கதையைக் கேளுங்கள்" என்று கூறி விஷயத்திற்கு வந்தார் சிவானந்தம்.

தொண்டையைக் கனைத்துக் கொண்டு, கதையை ஆரம்பித்தார்:—

"நல்லூர் ஒரு கிராமம். செழிப்புள்ளது. அவ்வூர் மணியக்காரர் சின்னப்பா கவுண்டர் என்ருல் ஊரே மரியாதை செய்யும். இத்தனைக்கும் அவர் அப்படி ஒன்றும் பணக்காரர் அல்ல. நல்ல குணவான். அவருக்குப் பிள்ளையே கிடையாது. ஒரே ஒரு பெண்தான். பெயர் கனகம். நல்ல எடுப்பான முகம். கருமையும் சுருட்டையும் நிறைந்த தலைமயிர். நல்ல அழகு வாய்ந்தவள் கனகம். தன் அக்காளின் மகன் சதாசிவத்திற்குக் கனகத்தைக் கட்டிக் கொடுக்கத் தீர்மானித்தார் கவுண்டர். சதாசிவம் நல்ல பலசாலி. அவ்வளவு அழகுள்ளவன் இல்லை என்ருலும் வசீகரமான தோற்றமுடையவன். வயல் வேலை, வீட்டு வேலை செய்யச் சளைக்கவே மாட்டான். நல்ல உழைப்பாளி அவனுக்கும், கனகத்திற்கும் பரஸ்பரம் ஏற்கனவேயே காதல் உண்டு. கவுண்டரின் தீர்மானம் அவர்களுடைய காதலுக்கு ஓர் நம்பிக்கையை உண்டு பண்ணியது. ஆனல் கவுண்டர் மனைவி ராக்ஷஸி. பணப் பித்து பிடித்தவள். சூதாட்டம், குடி இதிலெல்லாம் பெயர் போன தன்னுடைய தம்பி மருதப்பனுக்குக் கனகத்தைக் கல்யாணம் செய்ய வேண்டும் என்று அவள் தீர்மானம் செய்திருந்தாள். ஏனெனில் சதாசிவத்தைவிட அழகு வாய்ந்தவன் மருதப்பன். மேலும் சிங்கப்பூருக்குப் போய் கொழுத்த பணத்துடன் அப்பொழுதுதான் ஊர் திரும்பி வந்திருந்தான் அவன். அவனுடைய கெட்ட பழக்கங்கள் இப்பொழுது இன்னும் அதிகமாகியிருந்தன. இப்பொழுதெல்லாம் அவன் உயர்ரகச் சாராயத்தை நாடினன். தம்பி பணக்காரனனதும் அக்காளுக்குத் தலைகால் தெரியவில்லை. இயற்கையிலேயே ஒரு சின்ன விஷயத்தைக் கேட்டால் கூட மனம் மாறிவிடும் கவுண்டர், மனைவியின் தூபத்தில் மயங்கிவிட்டார். அவருடைய வெற்றிலை பெட்டியை எடுத்துக் கொடுப்பதற்குக் கூட 'மருதை'யைக் கூப்பிட்டுக் கொண்டிருந்தது அவர் வாய். அவனும் 'மாமா' முறை கொண்டாடிக் கவுண்டரைக் காக்காய் பிடித்த வண்ணம் இருந்தான்.

ஆனி மாதம் நெருங்கிக் கொண்டிருந்தது. அந்த மாதம் கனகத்திற்கு எப்படியும் கல்யாணத்தை முடித்துவிட வேண்டும் என்று கவுண்டர் ஒற்றைக் காலால் நின்று கொண்டிருந்தார். அன்று அமாவாசை. சாயந்திரம் நாலு மணிக்கே அடுத்திருந்த டவுனுக்குப்போய் கனகத்திற்கென புடவை, நகையெல்லாம் வாங்கிக் கொண்டு இருட்டும் நேரத்தில் திரும்பிக் கொண்டிருந்தான் மருதப்பன். வரும் பொழுது, அவன் தலைவிதியோ என்னவோ, குறுக்குப் பாதை வழியாக வந்துக்கொண்டிருந்த மருதப்பன் ஆற்றங்கரையில் தனித்துப் பேசிக் கொண்டிருந்த சதாசிவத்தையும், கனகத்தையும் பார்த்துவிட்டான். அவனுடைய மனதில் ஆத்திரம் பொங்கியது. அதை வெளியில் காட்டிக் கொள்ளாமல் அவர்களைச் சமீபித்தான்.

"என்ன கனகம்? தாபத்தையெல்லாம் காதலன் கிட்டே வெளியிடறியா? கவலைப்

படாதே! உனக்குப் பரிசம் போட, எல்லாம் இதோ கையோடே வாங்கிட்டுவந்திருக்கேன்'' என்ருன் மருதப்பன்.

திடுக்கிட்ட கனகம், ''மாமா! என் விஷயத்திலே தலையிடாதீங்க. என் அத்தானைத் தவிர நான் யாரையும் நினைக்க மாட்டேன். பேசாமெ போங்க, புண்ணியமுண்டு'' என்று துணிவுடன் கூறினுள்.

''உன் அத்தான் என்ன இரும்புப் பெட்டி நிறைய பணம் வச்சிருக்கானு, சீர் செனத்தியொடெ வந்து உன்னைக் கட்டிக்க! காலணுவுக்கு வக்கில்லாத பயல்...,'' என்று இழுத்தான் மருதப்பன்.

''டேய் மருதை! வாயை அடக்கிப் பேசு. நானும் ஒரு மனுசன். எனக்கும் மானம் மரியாதையெல்லாம் உண்டு. ஜாக்கிரதையாயிரு'' என்று கூறினுன் சதாசிவம் வேகமாக.

''பெரிய சீமையிலிருந்த வந்தவன் மாதிரியல்ல பேசருன் கழுதை'' என்ருன் மருதப்பன்.

''கழுதை இப்படித்தான் உதைக்கும் தெரிஞ்சுக்க'' ஆத்திரத்தில் மருதப்பனின் விலாவில் தன் பலங்கொண்டமட்டும் ஒரு உதை கொடுத்தான் சதாசிவம்.

நிலை தடுமாறி விழுந்த மருதப்பன் சமாளித்துக் கொண்டு எழுந்து சதாசிவத்தின் மேல் பாய்ந்தான். அவன் கழுத்தை பலம் கொண்டவரை நெறித்தான். சதாசிவத்திற்கு மூச்சுத் திணறியது. இருந்தாலும் தைரியத்தை இழக்கவில்லை. வயலில் வேலை செய்துவிட்டு அரிவாளை இடுப்பில் சொருகியிருந்தான் அவன்.

''நாளையிலிருந்து காப்பி குடிப்பது, புகை பிடிப்பது, வெற்றிலை பாக்கு போடுவது போன்ற கெட்ட பழக்கங்களையெல்லாம் நிறுத்தி விடப் போகிறேன்.''

''ஓ..... டாக்டர் அப்படி ஆலோசனை கூறினுரா?''

'இல்லை.... இல்லை' கடைக்காரர்கள் இனி எனக்குக் கடன் கொடுப்பதில்லை என்று தீர்மானித்துவிட்டார்கள்.''

அதைக் கையில் எடுத்துக் கொண்டான். காலால் மருதப்பனைப் பிரயாசைப்பட்டு இடறிவிட்டான். கையில் அரிவாளுடன் மருதப்பன் மேல் பாய்ந்தான் சதாசிவம். இந்தச் சமயத்தில் தான் எதிர் பாராத விதமாய் கனகத்திற்கு எமன் வந்து சேர்ந்தான்...'' நிறுத்தினுர் சிவானந்தம்.

அதுவரையில் கதையில் லயித்திருந்த நாங்கள் அப்பொழுதுதான் பழைய நிலையை அடைந்தோம். நான் கிருஷ்ணமூர்த்தியைப் பார்த்தேன். அவர் முகம் ஆச்சரியத்தில் ஆழ்ந்திருந்தது. அவர் வாய்

புன்னகை பூத்தது. 'இதுதானே அவர் சிவானந்தத்திடம் கேட்கும் முதல் கதை! போகப் போக அவர் இன்னும் அதிசயமடையப் போகிறார்' என்று நான் மனதிற்குள் நினைத்துக் கொண்டேன்.

இதற்குள் ராமகிருஷ்ண பொறுமையை இழந்துவிட்டார்.

''அப்புறம் என்னய்யா? கதையைச் சீக்கிரம் சொல்லுங்கள்,'' என்றார்.

''ஆமாம், இது வரை அவர்கள் பேசிய சம்பாஷணை கூட உங்களுக்கு எப்படித் தெரியும்?' என்றேன் நான்.

''அது உங்களுக்குத் தெரிய வேண்டும் என்பதற்காக நானாக அனுமானமாகக் கூறியது'' என்று சொல்லி, சிவானந்தம் தொடர்ந்தார் :—

சதாசிவமும், மருதப்பனும் கோரமாகச் சண்டை போட்டுக் கொண்டிருந்தனர். அவர்களை விலக்கும் முயற்சியில் கனகம் ஈடுபடப் போக ஆத்திர வேகத்தில் மருதப்பன் மேல் பாய்ந்து கொண்டிருந்த சதாசிவத்தின் அரிவாள் கனகத்தின் மேல் பாய்ந்தது. அந்த க்ஷணமே அவள் உயிரை எமன் பறித்துக் கொண்டான். சதாசிவம், மருதப்பன் இருவரும் ஒரு நிமிஷம் ஒரேயடியாகப் பிரமித்து நின்று விட்டனர். சதாசிவத்தின் ரத்தம் கொதித்தது. திடீரென மருதப்பன் மேல் பாய்ந்தான். இந்த திடீர்த் தாக்குதலை மருதப்பன் எதிர் பார்க்கவில்லையாதலால் ஏமாந்து விட்டான். இரண்டாவது பேர்வழியாக எமனுடைய பாசக்கயிற்றில் சிக்கினான் மருதப்பன்.

இதற்குள் விஷயமறிந்து ஜனங்கள் கூடிவிட்டனர். சின்னப்பக் கவுண்டர் பரக்கப் பரக்க ஓடி வந்தார். மகளைக் கட்டிக்கொண்டு அழுதார். ஆத்திரத்துடன் சதாசிவத்தின் மேல் பாய்ந்தார் கவுண்டர். ஆனால் ஜனங்கள் அவரை வெகு பிரயாசையுடன் பிடித்து நிறுத்தினர். இரண்டு கொலையைச் செய்த சதாசிவத்தின் மூளை குழம்பி விட்டது. ஏன்! பைத்தியமே பிடித்து விட்டது. அவன் கண்கள் குத்திட்டு நின்றன. அவன் வாய் 'கனகம் கனகம்' என முணு முணுத்த வண்ணமிருந்தன. இந்தச் சமயத்தில் தான் நான் ஸ்தலத்திற்கு விரைந்து சென்று சதாசிவத்தைக் கைது செய்தேன். பிறகு தான் முன்னரே கூறியபடி நானும் என் நண்பன் சங்கரனும் இந்தக் கேஸில் தீவிர பங்கு எடுத்துக் கொண்டு சதாசிவத்தின் தண்டனையைக் குறைக்க முயற்சித்தோம்....'' மீண்டும் நிறுத்தினார் சிவானந்தம்.

''அப்புறம்? சதாசிவத்திற்கு என்ன தண்டனை கிடைத்தது? அவன் பைத்தியம் தெளிந்ததா?'' என்றெல்லாம் அடுக்காகக் கேள்விகளைக் கேட்டார் கிருஷ்ணமூர்த்தி உற்சாகத்துடன்.

''பார்த்தீர்களா, அவசரப் படுகிறீர்களே! சிவானந்தம் சொல்ற கதையின் 'டைப்பே' வேறு. முடிவைக் கொஞ்சம் தாமதித்துத் தான் சொல்வார்'' என்றேன்.

இதற்குள் சிவானந்தம் தொடர்ந்து சொல்ல ஆரம்பித்தார் :—

நானும், என் நண்பர் சங்கரனும் முயற்சியைக் கைவிடவில்லை. சதாசிவம் உண்மையில் இரண்டு கொலைகள் செய்யவில்லை. கனகத்தைக் கொலை

செய்தது தற்செயலாய் ஏற்பட்டது என்பதை தக்க ஆதாரங்களுடன் நிரூபித்து, அதனுல் சதாசிவத்திற்கு தண்டனையைக் குறைக்க வேண்டுமென்று நானும், சங்கரனும் மேலதிகாரிகளுக்கு விண்ணப்பம் செய்துக்கொண்டோம். ஆனுல் பிரயோசனம் ஒன்றுமில்லை. கொலை, கொலைதான் என்று கூறி விட்டனர். கடைசியில் என்ன.... எமனுடைய பாசக் கயிற்றில் மூன்ருவது பேர்வழியாகச் சிக்கினுன் சதாசிவம் ஆம்;.... சதாசிவத்திற்குத் தூக்கு தண்டனைத்தான் கிடைத்தது"— கதையை முடித்தார் சிவானந்தம்.

நாங்களெல்லோரும் ஒரு அருமையான நிகழ்ச்சியைத் தெரிந்துகொண்ட சந்தோஷத்தில் ஆழ்ந்திருந்தோம். நான் கிருஷ்ண மூர்த்தியைப் பார்த்தேன். அவர் கட கடவென்று சிரித்துக்கொண்டே, "உண்மையில் உங்கள் சிவானந்தம் சரியாகக் கதை அளப்பவர் என்பதில் சந்தேகமேயில்லை" என்று கூறியவாறே 'கோட்டு'ப் பையில் கையை விட்டார். கையை வெளியில் எடுத்த போது அவர் கையில் அந்த வாரத்திய "அழுகை" காட்சி அளித்தது. அதில் ஒரு பக்கத்தைப் புரட்டி எங்கள் முன் வைத்தார். நாங்கள் எல்லோரும் அந்தப் பக்கத்தைப் பார்த்தோம். அதில் 'அசடு' என்ற புனைப் பெயரில் "இரட்டைக் கொலை" என்ற கதை காணப்பட்டது. நாங்கள் ஒன்றும் புரியாமல் கிருஷ்ண மூர்த்தியைப் பார்த்தோம். அவர் கம்பீரமாக ஆரம்பித்தார்.....

"ஆமாம்! நான்தான் இந்த 'அசடு'. உங்களுக்கு ஆச்சரியமாகத்தானிருக்கும். அதைவிட ஆச்சரியம் என்னவென்ருல்,

> அறிவற்றவர்கள் தாமே தமக்குச் செய்துக் கொள்ளும் துன்பத்தை அவர்களுடைய எதிரிகளும் அவர்களுக்குச் செய்ய முடியாது.
>
> — திருவள்ளுவர்

நான் எழுதியுள்ள இந்த "இரட்டைக்கொலை" என்ற கதையை நண்பர் சிவானந்தம் இவ்வளவு உருக்கமாக எப்படிச் சொன்ஞர் என்பதுதான். இன்னுமா புரியவில்லை?...நான் எழுதின இந்த "இரட்டைக் கொலை" என்ற கதையைத்தான் இப்பொழுது சிவானந்தம் கூறிஞர்" என்று கூறிக்கொண்டே எழுந்தார் புதிய நண்பர் கிருஷ்ண மூர்த்தி.

நாங்கள் எல்லோரும் எங்கள் ஆசனத்திலிருந்து துள்ளிக் குதித்தோம். சிவானந்தம் உட்கார்ந்திருந்த இடம் காலியாய் இருந்தது. சிவானந்தம் கம்பி நீட்டிவிட்டார். எங்கள் எழுத்தாள நண்பரைப் பற்றி எங்கள் மனதில் உவகை நிரம்பியது.

"வணக்கம். நானே வருகின்றேன்" என்று கூறிக் கொண்டே கிளம்பிஞர் கிருஷ்ண மூர்த்தி.

போகும் பொழுது "நான் எழுதின கதையென்று அளந்து விட்டேன். அதை அப்படியே நம்பிவிட்டதுகள். எல்லாம் சுத்த அசடுகள்" என்று அவர் கூறிய வார்த்தைகள் அரை குறையாக என் காதில் விழுந்தது.

ஆர்க்கும் அலை கடல்!

(நெற்குப்பை. ராம சுப்பிரமணியன்)

ராகம்—கீரவாணி] [தாளம்—ஆதி

பல்லவி

ஆர்க்கும் அலை கடலே!—உன்னை
அன்புடன் போற்றுவோம்; இன்பத்தின் எல்லையே (ஆர்க்)

அநுபல்லவி

பார்க்கும் பொழுதெலாம் பரந்தஉன் மேனியில்
பசுமையைக் காணுவோம், விசும்பினில் உள்ளபோல் (ஆர்க்)

சரணம்

காற்றினை வீசிக் கவலையை ஓட்டுவாய்!
கற்பனை உலகினில் உலவிடச் செய்குவாய்!
நாற்றிசை சென்றிட எங்களுக் குதவுவாய்!
நல்லஉன் குணங்களை நாங்களும் போற்றுவோம்! (ஆர்க்)

நிலவினல் வருகையால் நீயுமே பொங்குவாய்
நித்திலம் முதலான பொருள்களும் நல்குவாய்
குலவிடும் அழகினைக் கொண்டநற் கடலேநீ
குபேரனைப் போலவே கொள்கையில் சிறந்தனை (ஆர்க்)

அலைக்கரத் தோடுநீ அன்புடன் தழுவுவாய்!
அல்லலை வென்றிடும் ஆவேச மூட்டுவாய்!
கலைக்கண்கள் கொண்டுமே காண்பவர் உள்ளத்தில்
கவினுறு சித்திரம் ஆகினை கடலேநீ (ஆர்க்)



பக்தன்

திருவல்லிக்கேணி கடற்கரையில் குவீன் மேரிஸுக்கு எதிரே ரஸ்தாவை ஒட்டிய பிளாட் பாரத்தில் இருந்த சிமெண்டு பெஞ்சு ஒன்றில் அமர்ந்து இருந்தேன். பகல் பொழுது தேய்ந்து இருளின் ஆட்சி வரப்போகும் இரண்டும் கெட்டான் நேரம். கடற்காற்று இதமாகவே வீசிக் கொண்டிருந்தது. பிளாட்பாரத்திலும், காதலர் பாதையிலும், மணற் பரப்பிலும், நடை போடும் பலரைக் கவனித்தபடி இருந்தேன். எனக்கு சிறிது தூரத்தில் பிளாட் பாரத்தை ஒட்டி ஒரு இரு கார்கள் நின்று கொண்டிருந்தன.

இருள் கவியவும், மெர்குரி விளக்குகள் பிரகாசித்தன. ''வந்து நேரமாயிற்றே போகலாம்'' என்று எனக்குள்ளே நினைத்தபோது கோழி முட்டை போல் உருண்டு என் பக்கமாக வந்து நின்றது ஒரு தற்கால புது மோஸ்தரான கார்! அந்த புது வண்டியின் அழகு, அமைப்பான தோற்றத்தை மெர்குரி விளக்கின் வெளிச்சம் சற்று மிகைப் படுத்திக் காட்டியது! அதைக் கவனித்தேன். அதிலிருந்து ஸ்தூல சரீரமான ஒருவர் இறங்கினார். அவரேதான் காரை ஓட்டிவந்தார்.

சில்க் ஜிப்பா, வெண்பட்டு வேஷ்டி, பட்டு அங்கவஸ்திரம், போதாதற்கு அவரின் காது கடுக்கன், மற்றும் கை விரல்களில் உள்ள மோதிரங்களில் உள்ள கற்கள்-இல்லை வைரங்கள்.... டால் அடித்துப் பிரகாசித்தன! ''யாரோ தனவந்தர் போலும்!'' என அவரை எடை போட்டேன்.

பிளாட்பாரத்தில் உலாவினார். ஏதோ நினைத்தவராய் சட்டென தன் கைக் கடியாரத்தைப் பார்த்துக் கொண்டு தலையாட்டியபடி மறுபடியும் காரில் வந்து ஏறினார்.

அந்தப் பணக்கார நபரைக் கண்டதும் ஒரு பிச்சைக்கார சிறுவன் மோப்பம் பிடித்து வந்துவிட்டான்! அவனுக்கு பத்து வயது இருக்கும். காரைச் சுற்றி தனது பிச்சைக்கார ஓலத்துடன் வளைய வந்தான்.

''சாமி.... ஐயா.... பசிக்குது சாமி.... சாப்பிட்டு ரெண்டு நாளாச்சு....! ஒரு காலணா கொடுங்கய்யா.... உங்களுக்கு புண்ணியம் சாமி....'' என்று கத்தினான்.

அந்த தனவந்தர் காரின் ஸ்விச்சை அழுத்தியபடி ''போடா....போ....!'' என கத்தினார்.

"ஐயா தருமவானே சாப்பிட்டு ரெண்டு நாளாச்சு, ஒரு காலணு தருமம் போடுங்க சாமி....!" என வயிற்றில் அடித்துக் கொண்டு கத்தினன்.

"சொன்னுல் கேட்கமாட்டாய்....?"

"சாமி.... உங்க பிள்ளை மாதிரி சாமி....பசி சாமி.... ஒரு காலணு தருமம்.... உங்க குழந்தை குட்டி எல்லாம் நல்லா இருக்கணும்....!"

தனவந்தர் என்ன நினைத்தாரோ.... "இந்தா போய்த் தொலே....!" என ஒரு காலணுவை எடுத்து பிளாட்பாரத்தில் விட்டெறிந்தார். உருண்டு வந்து என் காலருகில் விழுந்த அந்தப் புது காலணு நாணயம் தங்கம் போல் பிரகாசித்தது !

பிச்சைக்கார சிறுவன் ஓடி வந்து அந்த காலணுவை எடுத்துக்கொண்டான். தனவந்தரின் கார் ஒரு முறை உறுமிவிட்டு ரஸ்தாவில் உருண்டு ஓடி மறைந்தது. சிறுவன் தூரத்தில் நின்ற அடுத்த காரைப் பார்க்க நடந்தான் !

நான் அந்த சிறுவனைக் கவனித்தபடி "பாவம், இந்தச் சமூகத்தில் இந்தப் பிச்சைக்காரர்களின் பிழைப்பு தீராப் பிரச்சனையாக இருக்கிறதே! கடவுளே....! இதற்கு ஒரு விமோசனம் கிடையாதா?" என எனக்குள் முனகினேன்.

"பக்தா! லேசில் தீர்த்து வைக்கக் கூடிய பிரச்சனையா இது....?" என்ற குரல் கேட்கவே திரும்பிப் பார்த்தேன்.

"நிமிஷ நேரத்துக்கு முன்பு என் அருகில் யாரும் இல்லை! திடீரென்று இது யார்....?" அங்கு நின்று கொண்டிருந்தவரை விழித்துப் பார்த்தேன்.

சிவப் பழமென ஆண்டிக் கோலத்தில் நின்ற அந்த 'பரதேசி' என்னைப் பார்த்து புன்முறுவலுடன் "என்ன அப்பனே திகைக்கின்ருய்....? கொஞ்ச நேரத்துக்கு முன்பு நீ தானே என்னைக் கூப்பிட்டாய்!" என்ருர்.

"என்னது....? உங்களையா....? நான்....யாரையும் கூப்பிடவில்லையே....!"

"பக்தா! ஏன் பொய் சொல்கின்ருய்? இப்படி காற்று வாக்கில் வந்து ஒரு வேடிக்கையை பார்த்துக் கொண்டிருந்தேன். கடவுளே! பிச்சைக்காரப் பிரச்சனை தீராப் பிரச்சனையாக இருக்கிறதே! இதற்கு விமோசனமே கிடையாதா....? என்று என்னிடம் முறையிட்டாய். அதனுல்தான் உடனே உன்னிடம் வந்தேன்!"

...இருக்கும் உலகத்தை அழித்து விட்டு புது உலகம் சமைப்பேன், அதில் எதைப் படைத்தாலும், இந்த மனிதனை மட்டும் படைக்கவே மாட்டேன்... படைத்து விட்டு அனுபவிக்கிறேனே போதாதா?...

—கடவுள் பயங்கரமாகச் சிரித்தார்

"என்னடா இது! இந்த நபரின் பேச்சு புதுமையாக இருக்கின்றது!" என நினைத்தவனாய் அந்தப் பரதேசியைக் கவனித்தேன்.

"எல்லாம் உனக்கு புதுமையாகத்தான் இருக்கும்!"

"நீங்கள் வந்து....!"

"ஆமாம்....! நான் தான் கடவுள்....!"

எனக்கு தூக்கி வாரிப் போட்டது! அத்துடன் முன்பின் பார்த்திராத அந்த நபர் என்னைப் பெயர் சொல்லி அழைத்தது டன் நில்லாமல் மேற்கொண்டு "நான் தான் கடவுள்!" என்றால் எப்படி இருக்கும்....?

நான் வியப்புடன் "என்ன கடவுளா....?" என்று கேட்டு வைத்தேன்!

"ஆமாம்...." என்று சொன்னபடி நான் உட்கார்ந்திருந்த பெஞ்சின் மறு கோடியில் உட்கார்ந்தார். நான் பொங்கி வந்த சிரிப்பை அடக்கியவனாய் அவரைக் கவனித்தேன்.

அந்த பரதேசி என்னைப் பார்த்து சொன்னார் "நம்பாமல்....அவநம்பிக்கைப் படுகிறாய். இல்லையா....? அதோ பார்! நான் சிருஷ்டி செய்த மனிதன் உற்பத்தி செய்த இயந்திர வாகனம் வருகின்றது அதைக் கவனி!" என்றார்.

அவர் சொன்னபடி தூரத்தில் வந்த காரைக் கவனித்தேன். அவரையும் பார்த்தேன்.

பரதேசி அந்த காரைப் பார்த்து சிரித்தார்! அது எங்களுக்கு நேராக வந்ததும் செயலிழந்து நின்றுவிட்டது! அதில் இருந்தவர்கள் திடீரென்று நின்றுவிட்டதின் காரணம் புரியாமல் விழித்தனர்! என் பக்கமிருந்த பரதேசியைக் கவனித்தேன்! அவர் சிரித்தார்! எந்த வேகத்தில் கார் வந்ததோ அதே வேகத்தில் உறுமிவிட்டு முன்னேறியது!

"இது என்ன ஜாலம்!" என நினைத்தேன்.

"ஜாலமில்லை. மந்திர மாயமுமில்லை. இன்னுமா அவநம்பிக்கை! இதோ பார், கடற்காற்று வீசுவதை உணர்கின்றாய் அல்லவா....?"

"ஆமாம்...."

"இப்போது....?"

"காற்றே இல்லாத சூன்யம்.... அப்பப்பா.... மூச்சு முட்டுகின்றதே! போதும்....! போதும்....!"

பம்பாய் மாகாணத்திற்கு

பத்திரிகை விற்பனை செய்வதற்கும், 'உமா'வுக்கு விளம்பரம் சேகரிப்பதற்கும் திரு. எஸ். கோவிந்தன் அவர்களை எமது பிரதிநிதியாக நியமித்திருக்கிறோம். 'உமா' ஆதரவாளர்கள் அவருடன் தொடர்பு கொள்ளும்படி அறிவிக்கிறோம்.

நிர்வாகி.

பிரதிநிதியின் முகவரி

S. கோவிந்தன்,

8/70 பாவுதாஜி ரோடு.

மாதுங்கா P.O.

பம்பாய்–19.

"போதுமா....?" என்று பரதேசி சிரித்தார்!

மறுபடி சுகமான கடற்காற்று வீசியது!

"கட்டுப்பாடற்ற காற்றைக் கூட நிறுத்தும் சக்தியா இவருக்கு!" என்று மனதுள் எண்ணி வியந்தேன்.

"காற்று மட்டுமல்ல. ஐம் பூதங்களும் என் கைக்கு அடக்கம் தெரிகின்றதா....?"

"சுவாமி நான் தங்களின் சொல்லில் அவநம்பிக்கைப் பட்டேன். என்னை மன்னியுங்கள்" என்று எழுந்து கரம் கூப்பினேன்.

"பரவாயில்லை அது உன் சந்ததி வழிவந்த குணம்! ஆதி மனிதன் என் வார்த்தையில் அவநம்பிக்கைப் படப் போய் தான் கெட்டான்! அவன் வழிப் பிறவியான நீ எப்படியப்பா விலக்காக இருப்பாய்....? உட்காரு பேசலாம். உன் பிச்சைக் காரப் பிரச்சனைப் பற்றி....!" என்று சொன்னபடி என்னைப் பார்த்து புன்னகை புரிந்தார் கடவுள்.

"சுவாமி தங்கள் அருகில் அமர நான் அருகதையற்றவன் இப்படி நின்று கொள்ளுகின்றேன்".

"அந்த அருகதை அந்தஸ்தை நான் உனக்கு தருகின்றேன். பரவாயில்லை இப்படி பக்கம் அமருவாய்" என்றார்.

நான் பயபக்தியுடன் அவர் அருகில் அமர்ந்தேன்.

"பிச்சைக்காரர்களைப் பற்றி நீ ஒருவன்தான் இது சமயம் நினைத்து அனுதாபப் பட்டாய். அத்துடன் நீ என்னை வேறு கூப்பிடவும் உடனே உன்னிடம் வந்தேன்! அப்பனே இருக்க இடமின்றி இரந்துண்ணும் இப் பிச்சைக்காரர்கள் யார்....?" என்று கேட்டார்.

"என் போன்ற மனிதர்கள் தான் சுவாமி"

"மனிதர்கள் என்றுவது ஒப்புக் கொண்டாயே சந்தோஷம்! போகட்டும், கொஞ்ச நேரத்துக்கு முன்பு இங்கு வந்திருந்த ஒரு தனவந்தனையும், மற்றொரு பிச்சைக்காரச் சிறுவனையும் பார்த்தாயல்லவா....?"

"ஆமாம் சுவாமி பார்த்தேன்....!"

"அவர்கள் யார் தெரியுமா....?"

"எனக்கு எப்படி சுவாமி தெரிய முடியும். திரிகால ஞானியான தாங்கள்தான் அறியக் கூடும்!"

"சரி, சொல்கின்றேன் கவனித்து கேள்".

"அந்த தனவந்தன். இந்த நகரத்தில் பிரபல வைர வியாபாரி! உங்களுக்குள் அவன் கோடீஸ்வரன் என்று மதிக்கப் படுகின்றவன். நிறைய தனக்கு

> முத்துச் சிப்பி சிணைப்படும் போதும், மூங்கில் முத்தை உண்டாக்கும் போதும், வாழை குலை தள்ளும் போதும் அழிவிற்கு ஆயத்தமாகின்றன. ஆண்களோ, பிற பெண்கள் மீது மனம் வைக்கும்போதுதான் அழிய ஆயத்தமாகிறார்கள்
>
> (நல்வழிச் சாரம்.)

உடமைகள் சம்பாதித்து வைத்திருக்கின்றான். கடல் கடந்து அக்கரை சீமை எல்லாம் சென்று வியாபாரம் செய்து திரும்பியவன். அவனைப் பற்றி இவ்வளவு தெரிந்தது போதும்! இனி அந்த பிச்சைக்கார சிறுவனை கவனிக்கலாம். அந்தச் சிறுவன் யார் தெரியுமா....?''

''தெரியாது'' என்ற பாவனைக்கு தலையை ஆட்டினேன்.

''நான் சிறிது முன்பு சொன்ன அந்த தனவந்தனுடைய ஏக புதல்வன் தான் அந்தப் பிச்சைக்காரச் சிறுவன்!''

வியப்பு மேலிட ''அந்த பிச்சைக்காரனா....'' என்று கேட்டேன்.

''அந்தப் பிச்சைக்காரன் மனிதப் பிறவிதானே! சற்று முன்பு நீ தானே பிச்சைக்காரர்களும் மனிதர்கள்தான் என்று ஒப்புக்கொண்டாய். உள்ள விஷயத்தைக் கேள்விப்படவும் வியப்படைகின்றாய்'' என்றார் கடவுள்.

''இந்த தனவந்தன் அக்கரையில் சென்று வியாபாரம் செய்து வந்த சமயம் குடும்பத்துடன் தனது மனைவி மற்றும் தன் ஏக புதல்வனுடன் வாழ்க்கையை நடத்தி வந்தான். சந்தோஷமாக சிறிது காலம் கழித்து வந்த சமயம், மக்களிடையே போர் மூண்டது! அந்தத் தீ இவன் இருந்த இடத்துக்கும் பரவியது. உடனே இவன் தன் சொத்துக்களைச் சேகரித்துக் கொண்டு தாய் நாடான இந்த எல்லைக்கு வர ஆயத்தமானான்! சண்டை கலவரங்களுக்கு இடையே தன் மகனை வழி தப்ப விட்டுவிட்டான். அந்த கலவரத்தில் தேடிக் கண்டு பிடிக்க வகையின்றி கொஞ்ச நேரம் அழுது ஓய்ந்துவிட்டு தன் மனைவியுடன் கப்பல் ஏறி வந்துவிட்டான்.

வழி தப்பிய இவனின் புதல்வன் அனாதையாக கப்பல் ஏற வசதியற்றவர்களின் இடையே போய்ச் சேர்ந்தான். அவர்களால் ஆதரிக்கப்பட்டு கால் நடையாக, ஒரு திக்கற்ற அனாதைச் சிறுவனாக தன் தந்தை வந்து சுகபோகமாய் வாழும் இந்த எல்லையில் வந்து சேர்ந்தான்.

உயிர் வாழ வழி? யாசகம்! சொத்து சுகமற்ற பிச்சைக்காரக் கும்பலுடன் சேர்ந்து விட்டான்! கையேந்தி தெருவோடு அலைந்து எப்படியோ அவனும் வளர்ந்தான்!

இன்று தந்தையும், தனயனும் ஒருவர்க்கு ஒருவர் அறிந்து கொள்ளாத நிலையில் சந்திப்பதைக் கவனித்துக் கொண்டிருந்தேன். அது சமயம் நீ கூப்பிட்டுவிடவும் வந்தேன்'' என்றார் கடவுள்.

கடவுள் சொன்னதைக் கேட்டபடி வாயடைத்துப் பேசாமல் உட்கார்ந்திருந்தேன்.

''என்னப்பா பேசமாட்டேன் என்கிறாய்?''

''இல்லை சுவாமி அப்பனும் பிள்ளையும் சந்தித்ததை நினைக்கவும்....''

''உண்மையை அறியவும் வியப்படைகின்றாய்....! இது மாதிரி ஆயிரக் கணக்கில் நித்யம் நடக்கிறதப்பா....? அந்த தனவந்தன் நினைவில் 'தன் மகன் தவறிவிட்டானே.... இப்படி பிச்சை எடுத்து திரியும் சிறுவர்கள் தன் பிள்ளை போல்

அனாதையாய் விடப்பட்டிருக்க லாமோ....! என நினைத்து ஏதாவது தான தருமங்கள் செய்கின்றனா? அதுதான் இல்லை! கொஞ்ச நேரத்துக்கு முன்பு நீ தான் பார்த்தாயே....! அவன் பெற்ற பிறவி. ''ஐயா.... சாமி.... பசி.... பசி....'' என கத்திக் கதற ஒரு செப்பு நாணயத்தை எடுத்து ''தரித்திரம்'' என வீசிவிட்டுப் போனான்.

''சாமி உங்க பிள்ளை மாதிரி சாமி....'' என்று கூட அவனுள் புகுந்து கத்திப் பார்த்துவிட்டேன்! அவன் தன் பிறவி, தான் பெற்ற செல்வ வாரிசு, தன் எதிரில் வந்து நிற்கின்றது என்பதைத் தெரிந்து கொள்ளாமல் போய்விட்டான்! போகட்டும்! அவனுடைய கண் இன்றுபோல் என்றும் குருடாகவே இருக்கட்டும்! எழுந்து வா, சற்று தூரம் போய்விட்டு வரலாம்!'' என் கடவுள் நடந்தார். நான் அவரைத் தொடர்ந்தேன்.

மறு வினாடி!

கடவுளும் நானும் மவுண்ட் ரோட் ரவுண்ட்டானாவின் அருகில் பிளாட் பாரதத்தில் நடந்து கொண்டிருந்தோம்! ''எப்படி வந்தோம்....?'' என்ற சிந்தனை எனக்கு! எனக்கு முன்பு சென்ற கடவுள் சட்டென நின்றார். நானும் நின்று அவரைக் கவனித்தேன். அவர் பார்வை பிளாட்பாரத்தின் சுவர் ஓரத்தில் பசி பட்டினியுடன் செத்துக் கொண்டிருக்கும் பிச்சைக்காரன் மேல் பதிந்திருந்தது!

அந்தப் பிச்சைக்காரனை நானும் கவனித்தேன்! எலும்புக் கூடென கிடந்த அவனைக் காண அருவருப்பாக இருந்தது. முகத்தை என்னை யறியாமல் சுளித்துக் கொண்டேன்.

கடவுள் என்னைப் பார்த்து ''என்ன அருவருப்பாக இருக்கின்றதா? இப்போது பார்....?'' என்றார்.

வேண்டா வெறுப்பாகப் பார்த்தேன்.

என்ன ஆச்சர்யம்....!

கண்ணைக் கசக்கிக் கொண்டு பார்த்தேன்!

அழகிய வாலிப மிடுக்குள்ள ஒரு யுவனாக காட்சியளித்தான் அந்தப் பிச்சைக்காரன்! சில வினாடிகளே தான். பின்பு.... ஐயோ.... பார்க்க சகிக்காத எலும்புக் கூட்டின் தோற்றம்!

''ஹூம்'' என தலையாட்டியபடி அவரை தொடர்ந்தேன்.

மறு நிமிஷம்!

நாங்கள் அரண்மனை போன்ற ஒரு பெரிய பங்களாவின் ஹாலில் நின்று கொண்டிருந்தோம்! அந்த சுவற்றில் எத்தனை விதமான புகைப்படங்கள், சித்திரங்கள்! ''இங்கு எப்படி வந்தோம்....?'' என நினைத்தவனாய் ஹாலின் தோற்றத்தைக் கவனித்தேன்.

''தெரியவில்லையா....? இந்த மாளிகை பாராளு மன்றத் தலைவனுடையது!'' என்று கூறி

பொறுமையுடையவனிடம் எப்படி செல்வம் உயராதோ, அது போல ஒழுக்கம் இல்லாதவன் வாழ்விலும் உயர்வு ஏற்படாது.

— வள்ளுவர் கருத்து

"அதோ அந்த படத்தைப் பார்!" என சுட்டிக் காட்டினர்.

அதில்! அந்த பிச்சைக்காரன் வாலிபனுக தோன்றினனே, அவன் இருந்தான்! அவனுடன் மற்றெரு யுவன் தோற்றத்தில் அவனைப் போல், ஆனல் சற்று மூத்தவன். சற்றேறக்குறைய ஒரே மாதிரி இருக்கின்றூர்களே....!

"சகோதரர்களப்பா.... இவர்கள்....! பெரிய குடும்பத்தில் தோன்றியவர்கள். மூத்தவன் தகப்பன் சொத்துக்களை தான் அனுபவிக்க வேண்டும்' என்ற கெட்ட எண்ணத்துடன், படிக்கும் தன் சகோதரனுக்கு மருந்திட்டு புத்தி தடுமாறச் செய்துவிட்டான்! மதி தடுமாறிய அவனை 'அதிகம் படித்ததால் மூளை கெட்டுப் போனன்!' என ஊரார் பேசிக்கொண்டனர்! அவனை பைத்தியக்கார விடுதியில் சேர்த்தார்கள்! பின்பு அங்கிருந்து தப்பி வெளியே வந்தவன் ஒரு அனதையாக, பிச்சைக்காரனக இரந்து உண்டு தெருவோடு அலைந்தான். பத்து வருஷங்களுக்கு முன்பு நடந்த சம்பவம்.

இதோ தற்சமயம் படத்தில் இருக்கும் மூத்தவனல் வஞ்சிக்கப்பட்ட அந்த இளையவன்தான் சற்று முன்பு நாம் நடைபாதையில் பார்த்த செத்துக் கொண்டிருக்கும் பிச்சைக்காரன்! இந்த மூத்தவன் யார் என்று உனக்கு முன்பே சொல்லிவிட்டேன்! நகர பாராளு மன்றத் தலைவன்!

இரண்டு பிச்சைக்காரர்களின் ஆதி ஆரம்பகால நிலையையும் தற்போதைய வாழ்க்கையையும் கவனித்தாய் அல்லவா....? பிச்சைக்காரர்கள் எங்கிருந்தப்பா வந்துவிட்டார்கள்....? உனது சமூகத்திலிருந்து ஏமாற்றப்பட்டு, வஞ்சிக்கப்பட்டு, ஒதுங்கியவர்கள்தான் பிச்சைக்காரர்கள்! கரம் ஏந்தி நடைபாதையில் விழுந்து கிடக்கின்றனர் அந்த மனித ஜன்மங்கள். அதைப் பற்றி சிந்திக்காமல் தன் போக்கில் நடந்து செல்கின்றனர் அவர்களிடையே பிறந்த மனிதப் பிறவிகள்! வா சாவகாசமாக கடற்கரையில் உட்கார்ந்து பேசலாம்!" என்றூர்.

மறு நிமிஷம்.

கடவுளும், நானும் பழைய அதே சிமெண்டு பெஞ்சியில் அமர்ந்துக் கொண்டிருந்தோம்!

கடவுள் பேசினர்:

"ஆதியில் இந்த மண்ணில் மனிதனை தவிர மற்ற சகலத்தையும் படைத்தேன்! எனக்கு திருப்தி இல்லை! என் பிரதிபிம்பம்போல் மனிதனைப் படைத்து

கட்டுரையாளர்களுக்கு

வாழ்க்கையின் உண்மைகளைச் சித்தரிக்கும் சிறுகதைகள், சிறந்த கட்டுரைகள், நகைச் சுவைச் சித்திரங்கள், கருத்து நிறைந்த கவிதைகள் 'உமா'வில் பிரசுரத்துக்கு எடுத்துக் கொள்ளப்படும். பிரசுரிக்கப்படும் விஷயங்களுக்கு அவசியம் அன்பளிப்பு அனுப்பப்படும்.

★

உமா

4/32, தாதா முத்தியப்பன் தெரு, த. பெ. 1377. சென்னை-1.

உலவவிட்டேன்! மனிதனும்—மிருகம் போல் உலவுவதைக் கண்டு பின்னும் திருப்தியில்லாமல் ''மனிதன் நம்மையும் புரிந்து கொள்ளட்டும்'' என்று பகுத்தறிவையும் கொடுத்து வைத்தேன்! மிருகம் போல் நடந்தவன் 'மனிதன்' ஆகிவிட்டான்!

என்னை நினைத்து வழிபட்டான்!

சகல சம்பத்தும் கிடைக்கும்படி ஆசீர்வதித்தேன்! சந்ததி பல பெற்று வாழ்ந்தான்....!

மனிதனைப் படைத்துப் பார்த்த பெருமையில் திளைத்த சிக்கிரமே அவ்வளவுக்கவ்வளவு மனக் கசப்படைந்தேன்!

மனிதன் என்னை மறந்து எல்லாம் நான் என்று மார்தட்டிக் கொண்டான்!

மனிதனை சிருஷ்டித்ததற்கு வருந்தினேன். ''மனம் திரும்ப மாட்டானா?'' எனப் பார்த்தேன்.

பலன் இல்லை! அக்கிரமமும் அநீதியும் தான் வளர்ந்ததைக் கண்டேன்....!

அவர்களிடையே அறிவாளிகளை என் பிரதிபிம்பமாகச் சமைத்து என் ஆக்க சக்தியினால் உலவச் செய்து 'நல்வழி' போதிக்க வைத்தேன்! என் பிரதிநிதிகளான அவர்களின் உபதேசங்களுக்கு செவிசாய்க்காமல் இந்த பாவிகள் அவர்களைக் கொன்றுவிட்டனர்.

நான் சிருஷ்டித்து உலவவிட்ட, மனிதனைத் தவிர மற்ற ஜந்துக்கள் எல்லாம் அன்று போல் இன்றுவரை சுகவாசிகள் போல் பிறவிப்பய[illegible] அனுபவிக்கின்றன. [illegible] இந்த மனிதன்....!''

கடவுள் பல்லைக் கடித்துக் கொண்டதை உணர்ந்து நடுங்கினேன். அவர் மேலும் பேசலானார்....!

''மனிதனுக்கு சொர்க்க வாழ்வைக் கொடுக்க நினைத்தேன். அப்படியே தந்தேன். அதை நரக வாழ்க்கையாக்கிக் கொண்டு அடித்துப் பிடித்துக் கொண்டு, அழுது அரற்றிக்கொண்டு மனுஷனை மனுஷன் தின்று கொண்டு மிருகத்துக்கும் கேவலமான வாழ்க்கை வாழ்கின்றான்!—பக்தா! கொஞ்ச நேரத்துக்கு முன்பு பிச்சைக்காரர்களுக்கு விமோசனம் கிடையாதா? என்று என்னைக் கேட்டாய் அல்லவா....? அந்த ஒரு பிரச்னைக்கு மட்டுமல்ல மனிதனின் நீச குணங்களால் உண்டாக்கப்பட்ட எல்லாப் பிரச்சனைகளுக்கும் சேர்த்து கூடியசிக்கிரம் ஒரு முடிவு செய்யப் போகிறேன்!'' என்றார். அவரின் பேச்சில் அனல் கனன்றது! நான் பய பக்தியுடன் அவரைப் பார்த்தேன்.

''நீ எப்படி எழுதும் சித்திரத்தையோ அல்லது செய்யும் பொருள்களையோ உனக்கு பிடித்தமில்லாத ரீதியில் உருவாக்கி விட்டால் அதை அழித்துவிட்டு மறுபடி வேறு ஒன்றை சமைக்கின்றாயோ.... அதைப் போல்.... நான் என்றைக்காவது ஒரு நாள்—உங்களின் அக்கிரமச் செயலைக் கண்டு என் பொறுமை எல்லை மீறிப் போய்விடும் போது—நான் படைத்த படைப்பை எல்லாம் அழித்துவிடுவேன்.

என்றைக்கு என் சாபத்தை இந்த மனிதர்கள் வாங்கிக் கொள்ளப் போகின்றார்களோ [illegible]தெரியவில்லை! அன்றைக்கு.... [illegible]யின் அடியில் உள்ள [illegible] குழம்பு வெளிப்பட்டு

எரிமலை என தீக் குழம்பைக் கக்கும்! வானத்து நட்சத்திரங் கள், கிரஹங்கள் நெருப்புக் கோளங்கள் அதன் எல்லைக் கோட்டைவிட்டு திசை மாறி வந்து மோதிச் சிதறும். அதன் விளைவால் நெருப்பு மழை எனப் பெய்யும்! சமுத்திர நீர் கொதித்து பூமிப் பரப்பை விழுங்கி பூமியில் உள்ள சகலத்தையும் கபளீகரம் செய்து விடும்! பிறகு ஒன்றும் இருக் காது....! ஒரு அணு கூட உயிர் வாழாது....! எல்லாம் தீய்ந்து தீர்ந்துவிடும்! ஆமாம்....!

பிறகு வேறு ஒரு புது உலகம் சமைப்பேன்....!

அதில் எதைப் படைத்தாலும் படைத்து அழகு பார்ப்பேன்! இந்த மனிதனை மட்டும் படைக் கவே மாட்டேன்! இது மட்டும் நிச்சயம்! இதோ படைத்து விட்டு அனுபவிக்கின்றேனே போதாதா...?'' என சொல்லி விட்டுபயங்கரமாகச் சிரித்தார்'

என் உடல் பயத்தால் உதறி யது. அவரை பார்க்காமல் தலை கவிழ்ந்தேன்!

''பக்தா நிமிர்ந்து பார்....!'' என்றார்.

ஏறிட்டுப் பார்த்தேன்....''

அழிவுத்தொழிலின் கர்த்தா வான சிவன் திரிசூலத்துடன் நின்றுகொண்டிருந்தார்!

''சுவாமி எங்களை மன்னியுங் கள்!'' என தரையில் விழுந்து வணக்கம் செலுத்தினேன்.

''திருந்தினால் மன்னிப்பு நிச்சயம் கிடைக்கும். என் நெற்றிக் கண்ணுக்கும் வேலை யில்லை!'' என்றார். அவரின் பயங்கரச் சிரிப்பு ஓய்ந்தது!

''ஏய் யாரப்பா அது! நடு ராத்திரியில் பிளாட்பாரத்தில் படுத்துக்கொண்டு; என்ன, வீடு வாசல் கிடையாதா....?'' என்ற குரல் கேட்டு நிமிர்ந்து பார்த் தேன். கடவுளைக் காணவில்லை! அங்கே ஒரு போலீஸ் ஜவான் தான் நின்றுகொண்டிருந்தான்!

''இங்கே....கடவுள்....!''

''ஆமாம்....! இதுதான் பூலோகம்....! போய்யா எழுந் திருந்து. கையிலிருப்பதை எவ னும் பறித்துக்கொண்டு போகப் போறான்.''

''கொஞ்ச நேரத்துக்கு முன்பு கடவுளைப் பார்த்தேன்....!'' என்றேன்.

''ஏது ஆசாமி கீழ்பாக் கத்தி (பைத்தியக்கார விடுதியி) லிருந்து தப்பி வந்துவிட் டாயா....?'' என்றான் போலீஸ் காரன்.

''அவ்வளவு தான்! இனி இவனுடனோ மற்றவர்களிடமோ சொன்னால் நிச்சயம் கீழ்பாக் கத்துக்குத்தான் போவோம்!'' என்று நினைத்தவனாய் எழுந்து வீட்டைப் பார்க்க நடந்தேன்!

எழுத்தாளன் என்றால் உங்கள் வீட்டுக் கொத்தடிமை என நினைத்துக் கொண்டீர்களோ? இது ஜனநாயக உலகம். எழுத்துக்கும் எழுதுகிறவனுக்கும் எங்கும் மதிப்பு உண்டு.

—புதுமைப் பித்தன்

சுந்தரத்தைக் கரம் பிடித்த நாளிலிருந்தே லலிதாவின் வாழ்க்கை சாரமற்றுப் போய் விட்டது. மணமாவதற்குமுன் அவள் கட்டிவந்த மனக் கோட்டைகளெல்லாம் புக்ககம் புகுந்த நாளன்றே புல்முளைத்துப் போய்விட்டது. அன்று, அதுதான் லலிதாவை சுந்தரம் பார்க்கவந்த அன்று, அவன் அழகிலும் புன் சிரிப்பிலும் மனதைப் பறிகொடுத்த லலிதா இன்று பொன் கூட்டில் அடைக்கப்பட்ட கிளியைப் போன்ற நிலையில் இருந்தாள். பாவம்! லலிதா சுந்தரத்தின் மனதை அறிய முடியாத பேதையாய் விட்டாள். அவன் உள்ளத்தில் வட்டமிடும் சோகத்தின் காரணத்தை அறிய சக்தியற்றவளாய் இருந்தாள். அவள் படித்த படிப்பு வாழ்க்கைப் பாதையை சிர் செய்ய பயன் படவில்லை.

கல்யாணமான புதிது. மனதில் கட்டுக்கடங்காமல் பொங்கிக் கொண்டிருந்த இன்ப எண்ணங்களை எல்லாம் ஒருங்கே ஒரு கடிதத்தில் வரைந்து தள்ளினாள். ஆனால் சுந்தரத்தினிடமிருந்து வந்த பதிலைப் பார்த்ததும் அவள் அடைந்த ஏமாற்றம் கொஞ்ச நஞ்சமல்ல. ஏதோ உலகை உய்விக்க வந்த அவதார புருஷன் போல் வேதாந்த பரமாய் அவன் எழுதிய கடிதம் அவள் இருதயத்தில் ஆயிரம் ஈட்டிகளைக் கொண்டு தாக்குவதுபோல் இருந்தது. அதோடு அவள் கணவனுக்குப் பதில் எழுதுவதையே விட்டுவிட்டாள்.

லலிதாவைக் கொண்டுவந்து விடுவதாய் சம்பந்திக்குக் கடிதம் போட்டிருந்தார் அவள் தகப்பனார். ஸ்டேஷனுக்கு சுந்தரமே காரை எடுத்துக் கொண்டு வந்திருந்தான். ரயில், ஸ்டேஷனுக்கு வந்து கொண்டிருக்கும் போதே, மோட்டாரின் சாவியை விரலில் சுழற்றியவாறே பிளாட்பாரத்தில் நின்றுகொண்டிருந்த சுந்தரத்தை கவனித்து விட்டாள் லலிதா.

"என்ன லலிதா? ஒரேயடியாய் கறுத்துப்போய் இருக்கிறாயே? உடம்பு இப்படி எலும்பும் தோலுமாய் விட்டதே?....உம்" என்று சுந்தரம் நாலு பேர்கள் முன்பு இப்படிப் பேசினதைக் கேட்டதும் லலிதாவின் முகம் நாணத்தால் சிவந்தது. ஆனாலும் சுந்தரத்தின் வார்த்தைகள் அவள் காதில் இன்பத்தேன் வந்து பாய்வது போலிருந்தது. அவனைப் பற்றி அவள் கொண்டிருந்த தப்பபிப்பிராயமெல்லாம் ஒரு நொடியில் பறந்து போய்விட்டது.

லலிதா புக்ககம் வந்து மாதம் இரண்டிற்கு மேல் ஆகிவிட்டது. ஆனால் சுந்தரம் லலிதாவிற்கு விளங்காத ஒரு புதிராகவே இருந்தான். அவன் மனப்போக்கை அறிய அவள் செய்த முயற்சிகளெல்லாம் வியர்த்தமாயின. எதையும் சிரித்து மழுப்பும் தன்மை கொண்ட சுந்தரத்தின்முன் லலிதா ஒரு சிறு குழந்தை போல் விளங்கினாள். அவனும் அவளை அவ்விதம் தான் நடத்தினான். தாமரை இலை நீரைப்போல் எதிலும் பற்றில்லாமல் அவன் நடந்து கொள்ளும் விதம் அவள் மனதை என்னவோ செய்தது. அவன் எதையும் லலிதாவின் திருப்திக்காகவே செய்தான். அவள் மனம் கோணாமல் இருக்க அவன் எதையும் செய்யத் தயாராய் இருந்தான். அவள் இன்பம்தான் தன் வாழ்க்கையின் லட்சியம் என்கிற ரீதியில் அவன் செய்யும் காரியங்கள் இருந்தன.

நாள் தவறாமல் ஆபீஸிலிருந்து வரும் போது புஷ்பம் வாங்கி வருவான். அதை அவனே அவள் தலையில் சூட்டி மகிழ்வான். வாரம் தவறினாலும் தவறும், லலிதாவை சினிமாவிற்கு அழைத்துப் போவது தவறாது. சுந்தரம் லலிதாவை எவ்வளவோ உயர்வாகத்தான் வைத்துக் கொண்டிருந்தான். ஆனால் அவனுடைய செய்கைகளெல்லாம் "வெறும் பாசாங்கு" "ஆஷாட பூதித்தனம்" என்ற எண்ணம் தான் லலிதாவின் உள்ளத்தில் வேரூன்றி இருந்தது. அவள் நினைத்ததிலும் ஓரளவு உண்மை இருக்கத்தான் செய்தது. சுந்தரம் என்னதான் அன்போடு பழகியும் அந்த அன்பில் ஒரு ஆழம் இருக்கவில்லை தான். அவனுக்கு லலிதாவின் மீது வெறுப்போ மன வருத்தமே சற்றும் கிடையாது. ஆனால் அவன் இதயத்தில் படிந்திருந்த சோகப் புகை லலிதாவின் மீதுள்ள அன்பையும் மறைத்து விட்டிருந்தது. இதை லலிதா உணரமாட்டாள்.

சீயக்காய் வியாபாரி (தம் சிப்பந்தியிடம்) ஏங்காணும்! விடிஞ்சு கடை திறக்கும் போதே முகத்தில் எண்ணெய் வழிய நிக்கிறீர்? இன்னிக்கு வியாபாரம் உருப்பட்டாப் போலத்தான்!

சுந்தரம் பி. ஏ. (ஹானர்ஸ்) கடைசி வருஷம் படித்துக் கொண்டிருக்கையில் கமலா என்ற பெண்ணின் நட்பு அவனுக்குக் கிடைத்தது. அந்த நட்புக்கு சுந்தரத்தின் கலைப் பித்து தான் காரணம். அவன் ஒரு சங்கீதப் பித்தன். ஒரு கையில் லட்ச ரூபாயையும், இன்னொரு கையில் பிரபல பாடகரின் சங்கீதக் கச்சேரி பாஸையும் வைத்து இரண்டில் எது வேண்டும் என்று கேட்டால் கண்ணை மூடிக்கொண்டு பாஸை எடுத்துக் கொள்வான் என்றால் யூகித்துக் கொள்ளுங்களேன்.

கமலா அவன் நண்பன் பலராமனுடைய தங்கை. சுந்தரம், கல்லூரியில் படித்துக் கொண்டிருக்கும் போதே கமலா பிரசித்திப் பெற்ற பாடகி யென்ற புகழுடன் விளங்கினாள். ஆகவே இரும்பை, காந்தம் இழுத்ததில் வியப்பில்லை அல்லவா. சுந்தரம் அடிக்கடி பலராமன் வீட்டுக்கு வரத் தொடங்கினான்.

இரும்பும் காந்தமும் ஓரிடத்தில் சேர்ந்தால் என்ன ஆகும்! இதைப் பலராமனும் அவனுடைய பெற்றோரும் பரிபூரணமாக உணர்ந்தனர். உலகத்தையேமறந்து உறவாடும் அந்த இளங் காதல் ஜோடியை ஒன்று சேர்த்து, ஸ்வரமும்—சுருதியும் போல அவர்களை வாழவைக்க நினைத்தனர். சுந்தரத்தின் மனப்பூரிப்பைக் கூறவும் வேண்டுமோ!

எல்லாம் நாம் நினைக்கிறபடியே நடந்துவிட்டால் அப்புறம் அந்த பகவானுக்குத்தான் வேறு என்ன வேலை? மனிதன் நினைப்பதற்கு நேர்மாறாகவே காரியங்களை நடத்திக்கொண்டு போவதில் பகவானுக்கு என்ன ஆசையோ தெரியவில்லை!

புதிதாய் ஆரம்பிக்கப்பட்ட ஒரு சபையில் கச்சேரி செய்ய ஒப்புக்கொண்டிருந்தாள் கமலா. கச்சேரிக்கு இரண்டு நாளிருக்கும்போது திடீரென்று ஜுரம் வந்து படுத்துவிட்டாள். 'பென்ஸிலினும்' டாக்டர் கொடுத்த 'மிக்சர்'களும் ஜுரத்தை ஒரு அளவிற்குச் சமனப்படுத்திய போதிலும் அவள் ரொம்ப பலஹீனமாகவே காணப்பட்டாள். ஜுரம் சற்று தணிந்துவிடவே கச்சேரி பண்ணிவிடத் தீர்மானித்தாள். கடைசியில் யார் தடுத்தும் கேளாமல் பிடிவாதமாய் அதிகமாய் உடம்பை அலட்டிக்கொள்ளாமல் பாடிவிட்டு வந்தாள். விதி யாரை விட்டது! அன்று திடீரென்று கமலாவிற்கு பொறுக்க முடியாத மார் வலி ஏற்படவே டாக்டரை அழைத்துவர ஓடினான் பலராமன். டாக்டர் வருவதற்குள்ளாகவே இருதயத் துடிப்பு நின்று போய் மீளாத் தூக்கத்தில் ஆழ்ந்து விட்டாள் கமலா.

கலையை வளர்க்க ஆசை கொண்ட கமலாவை காலன் தன் கடைக்கண்களுக்கு பரிபூரண பாத்திரமாக்கிக் கொண்டான். எல்லையை மீறிய துக்கமோ அல்லது சந்தோஷமோ வரும்போது மனிதன் ஸ்தம்பித்துப் போய் ஒரு மோன நிலையை அடைந்து விடுகிறான். சுந்தரமும் அந்த நிர்ணயம் பண்ணமுடியாத ஸ்திதியில் தானிருந்தான். அவன் இதயம் உணர்ச்சியை இழந்து விட்டது. அவன் கண்களின் ஓரத்தில் கண்ணீர்த் துளிகள் விளிம்பு கட்டி நிற்கவில்லை. துக்கம் அவன் இருதயத்தைக் கசக்கிப் பிழியவில்லை. சுந்தரம் தன்னைத்தானே தேற்றிக்கொண்டுவிட்டான். உள்ளத்தில் ஏற்பட்ட மனப்புண் மேற்புறம் ஆறிவிட்டது போலத்

> பிறர் எழுத்தைத் திருடி அதைத் தன்னுடையது என்று சொல்லிக் கொள்பவன், சோரம் போன தன் மனைவிக்குப் பிறந்த குழந்தையைத் தன்னுடையதென்று ஒப்புக் கொள்ளுகிறவனாவான்.
>
> — புதுமைப் பித்தன்

தோன்றினாலும் உள்ளே புறையோடிப் போய்விட்டது. உல்லாசமாய் வளைய வந்து கொண்டிருந்தவன் முற்றும் மாறிவிட்டான். தன் மனப்போராட்டங்களை வெளிக்கு காட்டிக் கொள்ளாமல் சிரித்த முகத்துடன் பேசுவதையே ஒரு தனிக் கலையாகப் பயின்றுவிட்டான். எந்த விஷயத்தையும் கடமை என்ற எண்ணத்துடன் இயந்திரம் போல் செய்து வந்தான்,

லலிதாவை அவனுக்கு மண முடிக்க பெற்றோர் ஏற்பாடு செய்ததற்கு அவன் ஒருவிதத் தடங்கலும் சொல்லவில்லை.

அது ஒரு தவிர்க்க முடியாத தொல்லை என்ற அளவில் திருமணத்திற்கு ஒப்புக்கொண்டானே தவிர அவன் மனதில் சிறிது மகிழ்ச்சி கூட எட்டிப்பார்க்கவில்லை.

திருமணம் முடிந்த பின் சுந்தரம் தன் மனைவி லலிதாவிடம் மிக அன்போடுதான் நடந்து கொண்டான். ஆனால் கமலாவின் காலத்தில் பட்டுப்போன அவன் மனம் துளிர்க்கவே இல்லையே! அவன் இருதயத்தில் எப்படி ஈரம் இருக்க முடியும்?

'பாம்பின் கால் பாம்பறியும்' என்கிற மாதிரி சுந்தரம் மிகுந்த பிரயாசையுடன் தன் உள்ளக் குமுறலை அடக்கிய போதிலும், லலிதா அவன் மனதை ஊடுருவிப்பார்த்து அவன் ஒரு 'ஆஷாடபூதி' 'பாசாங்குக்காரன்' என்கிற முடிவிற்கு வந்து விட்டாள். எவ்வளவோ ஆசையுடன் தாம்பத்ய சுகதுக்கங்களை அனுபவிக்க ஏங்கி நின்றவளுக்கு மனக்கசப்பும் தீராத துயரமும் தான் எஞ்சி நின்றன.

மனத் துயரத்தைத் தாங்க சக்தியற்ற லலிதா நாளடைவில் உடல் தேய்ந்து படுத்த படுக்கையாய் விட்டாள். தினம் ஒரு டாக்டராக வந்து அவளை ஆட்கொண்டிருக்கும் நோய்க்கு புதுப் புது நாமகரணம் செய்துவிட்டுப் போனார்கள். சுந்தரம் மனைவியை விட்டு நகராமல், தன் கடமையிலிருந்து நழுவாமல் லலிதாவைக் கவனித்து வந்தானே தவிர, அவள் மனதை வாட்டும் விஷயம் என்ன என்பதைப் பற்றி அவன் சிந்தித்ததே யில்லை.

சோர்வுடன் நாற்காலியில் சாய்ந்த வண்ணம் உருவமற்ற யோசனையில் மனதைச் செலுத்தியிருந்த லலிதாவை "தபால்" என்ற குரல் விழிப்படையச்செய்தது. கல்கத்தாவிலிருக்கும் அவள் பிராண ஸ்நேகிதி நிர்மலா கடிதம் எழுதியிருந்தாள். புதுக் குடித்தனம் வைத்திருக்கும் அவள் கணவனுடன் நடத்தும் இன்ப வாழ்க்கையைப் பற்றி வரிந்து தள்ளியிருந்தாள். கடிதத்தை படித்து முடிப்பதற்குள் லலிதாவின் கண்களை நீர்த்திரை மறைத்து விட்டது. உஷ்ணப்பெருமூச்சு அவளையறியாமல் வெளிப்பட்டது. யாரிடமாவது தன் மனக் குறையை சொல்லி அழுதால் தான் நிம்மதி ஏற்படும் என்ற எண்ணம் தோன்றவே வெகு சிரமத்துடன் நிர்மலாவிற்கு ஒரு கடிதம் எழுத முற்பட்டாள்........

அன்பார்ந்த நிர்மலா,

உன் கடிதம் பார்த்தேன். சந்தோஷம். இன்பத்தில் திளைத்துக் கொண்டிருக்கும் உனக்கு இந்தக் கடிதம் எழுதவே என் மனம் இடங்கொடுக்கவில்லை. ஆனால் என் மனத்தாபத்தை உன்னிடமின்றி வேறு யாரிடம் நான் கூறுவேன்? வாழ்க்கை என்னும் வண்டியை இழுத்துச் செல்லும் இரு மாடுகளுக்குள் முரண்பாடு ஏற்பட்டால் வாழ்க்கை என்னவாகும்? ஏது! ஏதோ வேதாந்தம் எழுதுகிறாளே என்று பார்க்கிறாயா? ஆமாம்! மன வெறுப்பு உச்சநிலையை எட்டிப் பிடிக்கும் போது இந்த மாதிரி எண்ணங்கள் தோன்றுவது சகஜம்தானே! கணவன் மனைவிக்குள் ஏற்படும் ஊடலால் இந்த விரக்தி உண்டாயிற்றென்று நீ நினைக்கலாம். இல்லை....எதற்காக இப்படி சுற்றிவளைத்துக் கொண்டு போகிறேன். இதோ விஷயத்தைச் சொல்லிவிடுகிறேன்.

நிர்மலா, என் கணவர் என்னிடம் உண்மையான அன்பு கொள்ளவில்லையடி. அவர் உள்ளத்தின் அடித் தளத்தில் அமிழ்ந்திருக்கும் சோகத்தை என்னால் அறிய முடிகிறதே தவிர, அதன் காரணத்தை அறிய சக்தியற்றவளாய் இருக்கிறேன். என்னிடம் பரிபூரண அன்பு கொண்டிருப்பது போல் நடித்த போதிலும் அவர் முகத்தில் படர்ந்திருக்கும் வியாகூலத்தின் சின்னங்களை பார்க்க என் மனம் என்ன பாடுபடுகிறது தெரியுமா? உம்....நாம் கொடுத்து வைத்தது அவ்வளவு தான். புக்ககம் புகுந்த புதிதில் இந்த எண்ணங்களெல்லாம் என்னை எவ்வளவு வாட்டி வதைத்தன! சில சமயம் அவருடன் பேசாமல் கூட உதாசீனம் செய்திருக்கிறேன். அவர் என்னிடம் அந்தரங்க அன்பு கொள்ளாவிடினும் கரம் பிடித்த கணவனின் மனம் கோணாமல் நடக்க வேண்டியது தானே பெண்களின் கடமை. அவர் இன்பம்தானே என் இன்பம். உண்மை ஏனோ என் புத்தியில் படாமல் போய்விட்டது. நிர்மலா, என் கடமையை நான் உணர்ந்து விட்டேன். அவர் என்னை விரும்பவில்லை என்று தெளிவாகப் புரிகிற போது நான் ஏன் அவருக்குச் சுமையாக உயிர் வாழ வேண்டும்? இந்த எண்ணத்தின் அடிப்படையில் தான் நான் இப்பொழுது தேய்கிறேன்.

நிர்மலா, என் உடம்பை என்னவோ செய்கிறது. இதற்கு மேல் எழுத என்னால் தள்ளவில்லை. இன்னும் கொஞ்ச காலம் என் உயிர் இருந்தால்

"உமா"

விற்பனையாளர்கள்

★

சென்னை

நேரு நியூஸ் ஏஜன்ஸி
1. லஸ், மயிலாப்பூர்

இலங்கை

நவலட்சுமி புக் ஸ்டால்
தபால் பெட்டி நெ. 442
கொழும்பு

மதுரை

எஸ். ராமச்சந்திர ராவ்
நியூஸ் ஏஜண்டு
73. பேச்சியம்மன்
படித்துறை ரோடு.

விவரமாய் பிறகு எழுதுகிறேன்

இப்படிக்கு

லலிதா.

கடிதத்தை எழுதி முடித்த லலிதாவிற்கு தலையைச் சுற்றித் தள்ளிற்று. ஆயாசம் அதிகரிக்கவே மயக்கத்துடன் படுக்கையில் சாய்ந்து விட்டாள். சற்று நேரங் கழித்து கண்களைத் திறந்து பார்த்தபோது கடிதமும் கையுமாய் நிற்கும் கணவனைக் கண்டு திடுக்கிட்டாள்.

"லலிதா" என்று மெலிந்த குரலில் அழைத்த சுந்தரத்தின் கண்களில் நீர் ததும்பியது.

"என் தவறை இன்று தான் உணர்ந்தேன். லலிதா என்னை மன்னித்துவிடு" என்று அழாத குறையாக லலிதாவின் கரத்தைப் பற்றிய வண்ணம் அவளருகே அமர்ந்தான் சுந்தரம்.

அவன் இதயத்தில் குமுறும் வேதனை லலிதாவின் மனதைத் தாக்கியது. மன்னிப்புக் கோரும் பாவனையில் அவன் முகத்தைப் பார்த்த வண்ணம் "அவசரப்பட்டு என்னென்னவோ செய்துவிட்டேன். மன்னித்து விடுங்கள்" என்ருள்.

வாத்ஸல்யம் ததும்ப சுந்தரம் லலிதாவை அணைத்துக் கொண்டு "அன்பே என்னுடைய ஒரு சிறிய தவறு இம்மாதிரியான விபரீதத்தில் கொண்டு வந்துவிட்டது. மணமான அன்றே நான் உனக்கு என்னை உணர்த்தியிருக்க வேண்டும். என் மன ஏக்கத்தை விளக்கியிருக்க வேண்டும். அப்படிச் செய்திருந்தால் நீ என்னைப் புரிந்து கொண்டிருப்பாய். என் மனமும் ஆறுதலடைந்திருக்கும். தவறி விட்டேன்" என்று கூறி தன்னுடைய இந்த பைத்தியக்கார மனேபாவத்தின் காரணமான கமலா சம்பந்தப்பட்ட நிகழ்ச்சியை அவளுக்கு விரிவாக எடுத்துரைத்தான்.

இரண்டு இதயங்களையும் அழுத்திக் கிடந்த பயங்கரச் சுமைகள் ஒரே நேரத்தில் தகர்ந்து விழுந்தன. லலிதா கணவனைப் புரிந்துகொண்டு விட்டாள். அவள் முகத்தில் ஒரு தெளிவு ஏற்பட்டது.

* * *

"என்ன அப்படி ஒரேயடியாக எழுதுகிருய்?" என்று அன்போடு கேட்ட வண்ணம் சுந்தரம் லலிதாவின் அருகில் வந்தான்.

அவள் நீண்ட கடிதம் ஒன்றை நாற்காலியில் அமர்ந்து சுவாரஸ்யமாக எழுதிக் கொண்டிருந்தாள்.

உடல் நோயும், மன நோயும் அறவே நீங்கி புதுப்பொலிவு பெற்றிருந்த லலிதா, கடிதம் எழுதிக் கொண்டிருந்த தோற்றமே ஒரு தனி அழகாக இருந்தது. சுந்தரம் பெருமை தவழ

அவளைப் பார்த்த வண்ணம் "தோழிக்குக் கடிதமோ?"…. என்றான் குறும்புப் புன்னகையுடன்.

"நீங்கள்தான் படியுங்களேன்" என்று கடிதத்தை சுந்தரத்தின் கையில் கொடுத்தாள் லலிதா. அதில் பின்வருமாறு எழுதப்பட்டிருந்தது:—

அன்புள்ள நிர்மலா,

நான் நோய்வாய்ப் பட்டிருந்த போது உனக்கு ஒரு கடிதம் எழுதினேன். நல்ல வேளையாக அது அனுப்பப்படவில்லை. ஏனெனில் அப்பொழுது நான் சந்தேகப் பேய் பிடித்துத் தடுமாறிக் கொண்டிருந்தேன்.

இப்பொழுது புது மலர்ச்சி பெற்றிருக்கிறேன். நான் இழந்துவிட்டதாகக் கருதிக் கொண்டிருந்த என் இன்ப வாழ்வு மீண்டுவிட்டது.

நிர்மலா, முன்பு ஒரு தடவை உன்னிடம் நேரில் கூட என் கணவரைப் பற்றிக் குறை கூறினேனல்லவா. என்னிடம் பராமுகமாக இருப்பதாக கடிந்துக் கொண்டேனல்லவா! அவருடைய நல்லொழுக்கத்தைப் பற்றிக் கூட சந்தேகப்பட்டேனல்லவா! இது என்னுடைய அறியாத்தனம்.

என் கணவர் கமலா என்ற பிரபல பாடகியை காதலித்தாராம். அவள் எதிர்பாராது மாண மடையவே உடைந்த உள்ளத்தை சீர்படுத்த முடியாமல் திண்டாடி யிருக்கிறார். இதை நான் புரிந்துகொள்ளவில்லை. சமீபத்தில்தான் அவர் இது பற்றிக் கூறினர்.

கமலாவைப் பற்றி நினைக்கும் போது அவளது அளப்பரிய அன்பு என் கண்முன் நிற்கிறது. அவளின்றி உலகமே இல்லை என்ற நிலைக்கு என் கணவர் வந்துவிட்டார் என்றால் அவள் அன்பை எப்படி மதிப்பிடுவது!

நான் கமலாவை என் தெய்வமாகக் கருதுகிறேன். அவள் மறைந்துவிட்டாலும் தாம்பத்ய வாழ்வின் ரகசியத்தை எனக்கு மானசீகமாக உபதேசம் செய்தது போன்ற உணர்வு தான் எனக்கு ஏற்படுகிறது. ஆம், அவள் எனக்கு வாழ்வு அளித்த தெய்வம்….!"

கடிதத்தை மேற்கொண்டு படிக்க சக்தியற்று நின்ற சுந்தரத்தின் நினைவில் கமலா திடீரெனத் தோன்றினள். "அவள் தெய்வந்தான்…. சந்தேகமே இல்லை…." என்று அவன் வாய் முணு முணுத்தது.

ரசனை?

அடையாற்றில் சித்திரக் கண்காட்சி ஒன்று நடந்தது. அவனீந்திர நாத் தாகூரின் சித்திர வன்மையைப்பற்றி அதிகம் கேள்விப்பட்டிருந்த இரண்டு மாணவிகள் அங்கிருந்த ஒரு படத்தின் முன் நின்று அதை வெகுவாக சிலாக்கித்துக் கொண்டிருந்தனர். திடீரென்று அவர்களில் ஒருத்தி படத்தின் அடியில் சிறிய எழுத்தில் இருந்த பெயரைப் பார்த்தாள். "ஓஹோ! இது அவனீந்திரர் படமல்ல. வேறு யார் பெயரோ போட்டிருக்கிறது" என்றாள்.

"சை… இவ்வளவுதானா?" என்றாள் மற்றவள். உடனே இருவரும் அவ்விடம் விட்டுச் சென்று அவனீந்திரநாதர் எழுதிய படத்தைக் கண்டு பிடித்து சிலாக்கிக்கத் தொடங்கினர்.

—கல்கி.

சென்ற இதழ் தொடர்ச்சி :

கோமதியின் கனவு

நீண்ட நேரம் அமைதியாகக் கழிந்தது. நாராயணன் தலையைக்குனிந்து தரையைப் பார்த்தவன் தான், பார்வை தரையிலேயே நிலைத்து விட்டது. கோமதியின் எண்ணமும் கண்களும் நாராயணனின் மீதே பதிந்து நின்றன. இருவரில் ஒருவரும் ஒரு வார்த்தை கூடப் பேசவில்லை. அமைதி பயங்கரத் தாண்டவம் புரிந்தது.

அமைதியின் கொடுமையைத் தாங்க மாட்டாதவளாய் கோமதி கொஞ்சம் சலனப் படுத்த எண்ணி,

"ஏன் ஒரு மாதிரியாக இருக்கிறீர்கள்?" என்றாள்.

நாராயணனிடமிருந்து பதில் கிடைக்கவில்லை, அவன் நிலையிலும் மாற்றம் ஏற்படவில்லை,

கோமதி எழுந்து சென்று அவன் தோள்மீது கை வைத்து "உடம்பு சரியாக இல்லையா" என்றாள்.

திகைத்தவன் போல "உடம்பு.... ஒன்று மில்லையே." என்றான் நாராயணன். உள்ளத்து உணர்ச்சிகளை சிரமப் பட்டு மறைக்கிறான் என்பதை கோமதி கண்டு கொண்டாள்.

"இப்படிக் காலை நேரத்தில் கதவை அடைத்துக் கொண்டு என்ன ஆராய்ச்சியில் மூழ்கியிருந்தீர்கள்!"

சூழ்நிலையை மாற்ற கோமதி குறுக்கு வழியைக் கையாண்டாள். அப்போதைய நிலையை விபரீதமாக எடுத்துக் கொள்ளாதது போல் பாவனை செய்து வழக்கம் போல வேடிக்கையாகக் கேட்டாள்,

"ஆராய்ச்சியா?" என்று கோமதியை அர்த்த புஷ்டியுடன் நோக்கிய நாராயணனின் பார்வையில் குற்றவாளியின் சாயை படிந்து கிடந்தது. "நான் என்ன ஆராய்ச்சி செய்யப் போகிறேன். சும்மா படுத்துத் தூங்கிக் கொண்டிருந்தேன்" என்று மழுப்பினான்.

கோமதியின் மனதில் குபீரென ஆத்திரம் கொப்பளித்தது. பொறுமை எல்லை கடந்து விட்டது, ஏனெனில் அவள் கண்கள், சுருட்டிக்கிடந்த படுக்கைக்குள் மறைந்திருந்த அந்த கத்தியைப் பார்த்துவிட்டன.

"இப்படி தற்கொலை பண்ணிக் கொண்டு சாவதற்குத் தான் நான் இவ்வளவு நாட்களாக உயிரை விட்டு உங்களைக் காப்பாற்றினேனா".

கோமதியின் பேச்சு கீச்சுக் குரலில் உச்சஸ்தாயில் ஒலித்தது. வேகமாகச் சென்று அந்தக் கத்தியை இழுத்து வந்து மேஜையின் மேல் போட்டு விட்டு "இதற்கு என்ன அர்த்தம்" என்று அடித்தொண்டையால் கத்தினுள்.

"நீ தவருகப் புரிந்து கொண்டு விட்டாய்" என்ருன் நாராயணன் மெதுவாக. பிறகு எழுந்து கைகளைப் பின்புறம் கட்டியவண்ணம் இங்குமங்குமாக உலாவியவாறு "இந்தக் கத்தி என் தந்தையினுடையது, தற்காப்புக்காக வைத்திருந்த இதை, அவர் தம் மரணத் தருவாயில் என்னிடம் தந்து "உனக்கு நான் சொத்தோ சுதந்திரமோ வைத்து விட்டுப் போகவில்லை, என்ருலும் நினைவுச் சின்னமாக இதைத் தருகிறேன்" என்று கூறிவிட்டுச் சென்ருர். நீண்ட நாளைக்குப் பிறகு என் தந்தையின் நினைவு வரவே காப்பாற்றி வைத்திருந்த இந்தக் கத்தியை எடுத்துப் பார்த்துக் கொண்டிருந்தேன்" என்ருன்,

அவன் கூறும் கதை உண்மையல்ல என்பதை கோமதியின் உள்ளுணர்வு கூறினுலும் வீண் சந்தேகத்தால் நிலைமையைச் சிக்கலாக்க விரும்பாமல் அந்த காரணத்தால் திருப்தி யடைந்தவள் போல நடித்து "நல்ல வேளை, நான் ஏதேதோ எண்ணிப் பயந்துபோய் விட்டேன்." என்று சிரித்தாள் கோமதி.

நாராயணனும் அந்தச் சிரிப்பில் கலந்துக் கொண்டான். அப்புறம் அவன் வழக்கம் போலவே மாறி விட்டது கோமதிக்கு திருப்தியைத் தந்தது. என்ருலும் இடையிடையே அவன் மௌனமடைந்து விடுவதையும், சட்டென எதையோ சிந்திப்பதையும், பிறகு தன் முகத்தைப் பார்த்துவிட்டு மாற்றிக் கொள்வதையும் அவள் உணராமல் இல்லை,

கோமதி நாராயணனுக்கு சாப்பாடு எடுத்து வருவதற்காக வீட்டுக்குப் புறப்பட்டாள். போகும் போது மறக்காமல் அந்தக் கத்தியையும் தூக்கிக் கொண்டாள். நாராயணனுல் தடுக்க முடியவில்லை. வெளியே வந்து காவல்காரனிடம் "உள்ளே ஐயாவுக்கு உடம்பு சரியாக இல்லை. நீ அங்கே போய் நான் வரும் வரை அவருடன் பேசிக்கொண்டிரு. அப்படி இப்படிப் போய் விடாதே" என்று எச்சரித்துவிட்டு வீட்டுக்குச் சென்ருள்.

வீட்டுக்குள் நுழையும்போதே மார்க்க சகாயம் திரும்பி விட்டார் என்பதை உணர்ந்தாள், ஆனுல் அவர் ஆபீஸ் அறையில் இல்லாமல், படுக்கை யறையில் படுத்துக் கொண்டிருக்கிருர் என்று வேலைக்காரன் மூலம் கேள்விப்பட்டதும் அவளுக்கு ஆச்சரியமாக இருந்தது.

மார்க்க சகாயம் பெரும்பாலும் பகலில் உறங்குவதில்லை. அப்படி என்ருவது இலேசாக தூக்கம் போட்டாலும் உணவுக்குப் பிறகுதான் இருக்கும். பகல் பன்னிரண்டு மணிக்கு படுக்கையில் இருக்கக் காரணம்?.... உடல் நிலை சரி இல்லையோ என்ற அச்சத்துடன் "அப்பா" என்று கூப்பிட்டுக் கொண்டே உள்ளே ஓடினுள். படுக்கையில் நன்ருகப் போர்த்திக்

சண்முகம்

கொண்டு மார்க்கசகாயம் படுத்திருந்தார். கோமதி அவரை நெருங்கி அவர் நெற்றியைத் தொட்டு பார்த்தாள். காய்ச்சலடிப்பதற்கான அறிகுறியொன்றும் இல்லை.

"உடம்புக்கு ஒன்றுமில்லையம்மா. கொஞ்சம் அசதியாக இருந்தது படுத்தேன்" என்று எழுந்து உட்கார்ந்தார் மார்க்கசகாயம். அவர் முகம் தெளிவற்று இருந்தது. குரலில் சஞ்சலம் தோய்ந்திருந்தது. இது கோமதியின் இருதயத்தைக் கவ்வியது,

நாராயணன் வந்த பிறகு அவரிடம் அவள் கொஞ்சம் பராமுகமாகவே நடந்து வந்திருக்கிறாள். தன் கையால் அவருக்கு சாப்பாடு போடத் தவறாத கோமதி, நாராயணனுக்கு உணவு எடுத்துச் செல்லும் அவசரத்தில் பல தடவை சமயல்காரனை விட்டுப் பரிமாறச் செய்திருக்கிறாள். ஒவ்வொரு நாள் இரவும் மார்க்கசகாயம் தான் சென்று வந்த இடங்களில் நிகழ்ந்த ருசிகரச் செய்திகளை கதையாகச் சொல்லுவார். கோமதியும் சுவாரஸ்யமாகக் கேட்பாள். நாராயணன் வந்த பிறகு இந்த பழக்கமே நின்று விட்டது.

இப்படி எத்தனையோ சம்பவங்கள் நடந்திருக்கின்றன. அன்று மனச்சஞ்சலத்துடன் இருந்த தந்தையின் நிலையைக் கண்டதும், மறைந்திருந்த பாசம் கோமதியின் மனதில் பீரிட்டெழுந்தது.

"எழுந்திருங்கள் சாப்பிடுவோம்" என்றாள் கோமதி அன்பு ததும்ப.

"நீ சாப்பிடம்மா, எனக்கு பசிக்க வில்லை" அவர் முகம் மட்டுமல்ல குரலும் வாட்டம் கண்டிருந்தது.

கோமதி அவரை விடவில்லை. எழுந்திருக்கச் செய்து வலிய அவர் கைகளைப் பற்றிக் கொண்டு சமயலறைக்கு அழைத்துச் சென்றாள்.

அமைதியாக சாப்பிட்டுக் கொண்டிருந்த மார்க்கசகாயம் இருந்தாற் போலிருந்து கோமதியைப் பார்த்து "அந்த பையன் போய்விட்டானா?"

'ஓர் அங்கத்தினர் கூட்டம்!'

என்று மெல்லிய குரலில் கேட்டார்.

சுமார் ஒன்றரை மாதத்திற்குப் பிறகு இன்றுதான் அவர் நாராயணனைப் பற்றி விசாரித்தார்.

''இல்லை. அங்கே நமது பங்களாவில்தான் இருக்கிறார். விரைவில் போய் விடுவார்'' என்று கூறிவிட்டு கோமதி தந்தையின் முகத்தைப் பார்த்தாள்.

''போய்விடப்போகிறானா? ஏன்?'' என்று வியப்புடன் கேட்டார் மார்க்கசகாயம். இந்தக் கேள்வியை கோமதி எதிர் பார்க்கவில்லை.

''அவர் போய்விடுவது நல்லது என்று நான் நினைக்கிறேன். அவரும் அதைத்தான் நினைக்கிறார்'' என்றாள்.

''அவன் என்னைப்பற்றி உன்னிடம் ஏதாவது சொன்னானா?'' என்றார் மார்க்க சகாயம்.

ஒன்றுமில்லை யென்று கோமதி தலையை அசைத்தாள். மார்க்க சகாயம் அடங்கிய குரலில் ''அவனைப் பற்றி நான் ஒரு தீர்மானத்திற்கு வந்திருக்கிறேன். அவன் இப்பொழுது போகாமல் இருந்தால் தேவலை....'' என்று கூறி முடிக்கு முன் கோமதி கண்களில்கோபக் கனல் சிதற ''ஏன்! வசதியாக போலீசிடம் மாட்டி விடலாம் என்றா? அப்பா, என்னால் இதை சகித்துக் கொண்டிருக்க முடியவில்லை. நாராயணன் ஆயிரம் வகையில் கெட்டவனாக இருக்கலாம். ஆனால் அடைக்கலம் தருவது போல் தங்க வைத்து விட்டு, கேவலம் தொழில் புகழுக்காக போலீஸிடம் காட்டிக்கொடுப்பதைவிட ஈனச் செயல்வேறு ஒன்றுமேயில்லை'' என்று சத்தம் போட்டாள்.

மார்க்க சகாயம் அதிர்ந்து போய் விட்டார். ஒன்றுமறியாத செல்லப்பிள்ளையாக, கபடு அற்ற மான்குட்டியாகத் தான் கருதிக் கொண்டிருக்கும் கோமதி அவ்வளவு சாதாரணமானவளல்ல என்பதை நேரிடையாக அன்றுதான் மார்க்க சகாயம் கண்டார். ஒரு புறம் வியப்பு ஏற்பட்டாலும், மறுபுறம் அவருக்கு மகிழ்ச்சியே உண்டாயிற்று.

சாப்பாடு முடிந்ததும் தந்தையும் மகளும் பழையபடி அறையை அடையும் வரை ஒருவரோடொருவர் பேசவில்லை.

படுக்கையில் வந்து உட்கார்ந்த மார்க்க சகாயம் கோமதியின் பக்கம் திரும்பினார். அவள் ஒரு பிரம்பு நாற்காலியில் உட்கார்ந்து எதிரே மேஜையில் கிடந்த ஆங்கில பத்திரிகையைப் புரட்டிக் கொண்டிருந்தாள். சற்று முன் ஏற்பட்ட கோபத்தின் நிழல் இன்னும் அவள் முகத்தை விட்டு மறையாததைக் கண்ட மார்க்க சகாயம் உள்ளூர சிரித்துக் கொண்டு ''கோமதி'' என்று அழைத்தார்.

கோமதி திரும்பிப் பார்த்தாள். தன்னிடம் வருமாறு அவர் அழைக்கவே எழுந்து வந்து படுக்கையில் அவருக்கு முன்னால் உட்கார்ந்தாள்.

மார்க்கசகாயம் நிதானமாக ''கோமதி, என் வாழ்வில் நிகழ்ந்த ஒரு முக்கிய நிகழ்ச்சியைப் பற்றி இப்போது கூறப் போகிறேன். இதை கொஞ்ச காலத்துக்கு முன்பதாகவே சொல்லியிருக்க வேண்டும், என்றாலும் காலம் தாழ்ந்து விடவில்லை....'' என்று கூறிவிட்டு அவள் முகத்தை உற்றுப் பார்த்தார்.

அவர் சொல்லப் போகும் செய்தியை கேட்கும் ஆர்வத்துடன் கோமதி நிமிர்ந்து உட்கார்ந்தாள். முகத்தில் உற்சாகம் பிரதிபலித்தது.

மார்க்க சகாயம் மெல்லிய குரலில் பேசத் தொடங்கினர்.

"நமது குடும்பம் தஞ்சை ஜில்லாவின் பெரிய தாலுக்காவான நன்னிலத்தில் இருந்தது உனக்கு நினைவிருக்கும். அப்போது நீ பத்து வயதுச் சிறுமி.

நன்னிலத்தில் சிவகுருநாதப் பிள்ளை என்று ஒரு லட்சாதிபதி இருந்தார். அக்கரைச் சீமைக்குச் சென்று பணம் திரட்டி மீண்டவர். மிகவும் நல்ல மனிதர். உலகத்தின் சூதுவாதுகளை அறியாத பச்சைக் குழந்தை என்று தான் அவரைப் பற்றிக் கூற வேண்டும். யார் எதைச் சொன்னாலும் நம்பி விடுவார்.

அவருடைய சிறு வழக்கு ஒன்றிற்கு நான் ஒரு தடவை வக்கிலாக வேலை செய்தேன். அந்த வழக்கு தோற்றுப் போய் விட்டாலும் சிவகுருநாதர் என் மீது ஒரு வித மரியாதையும் பற்றும் வைக்கத் தொடங்கினர். பின்னர் நாங்கள் இருவரும் நெருங்கிய நண்பர்களாக மாறிவிட்டோம்.

அந்த சமயத்தில் என்னுடைய தொழில் மிகவும் மந்தமாக இருந்தது. வழக்குகளே கிடைப்பதில்லை. கிடைத்தாலும் அவை வெற்றியடைவதில்லை. ஆகவே நம் குடும்பம் பொருளாதார நெருக்கடிக்கு ஆளாகி மிகவும் சங்கட நிலையில் இருந்தது. அப்போது சிவகுருநாதர் எனக்குச் செய்த உதவிகளை விவரித்துக் கூற முடியாது. என் குடும்பத்தையே அவர்தான் நிர்வகித்தார் என்றால் அதில் வியப்பில்லை. அவர் மட்டும் அப்

பொழுது கை கொடுக்காமல் இருந்திருந்தால் -நாம் நடுத் தெருவில் நின்று திண்டாடி யிருக்க வேண்டியதுதான். அவர் செய்த உதவிக்கு என் வாழ்வையே அர்ப்பணித்தாலும் ஈடாகாது.

ஆனல் நான் என்ன செய் தேன் தெரியுமா? பயங்கரத் துரோகம்! கோமதி, இதை முன்னதாகவே உணர்ந்திருந் தால் நீ என்னை மன்னித்தே இருக்க மாட்டாய். என் முகத் தில் விழிக்கக்கூட விரும்பி யிருக்கமாட்டாய்...'' இதைச் சொல்லும்போது மார்க்க சகாயத்தின் குரல் வேதனை யால் தழதழத்தது. கண்களில் நீர் துளிர்த்தது.

மார்க்க சகாயம் மேற் கொண்டு பேசத் தொடங்கினர். ''சிவகுருநாதரின் செல்வமும் சிறப்பும் நன்னிலத்தில் எத் தனையோ பேருடைய கண்களை உறுத்தின. அவரை எந்த நிமி ஷமும் கவிழ்த்துவிட பலர் சூழ்ச்சி செய்தனர்.

நன்னிலத்தில் திருவேங்கடம் பிள்ளை என்று ஒரு செல்வந்தர் இருந்தார். அவரிடம் சிவகுரு நாதர் ஒரு காலத்தில் மிகச் சாதாரண வேலைக்காரராக இருந் தாராம். அப்போது ஊரில் திருவேங்கடம் பிள்ளைக்குத் தான் செல்வமும் சிறப்பும் இருந்ததாம்.

சிவகுருநாதர் வெளிநாடு சென்று தம்மைவிட பெரிய செல்வந்தராகத் திரும்பியது, முதலில் திருவேங்கடம் பிள்ளை பின் கண்களைத்தான் உறுத் தியது. தன்னிடம் பத்து ரூபாய் சம்பளத்தில் வேலை பார்த்து வந்த சிவகுருநாதர் தன்னைவிட உயர்ந்து நிற்பதை அவரால் சகிக்க முடியவில்லை.

அதனல் எப்படியாவது சிவ குருநாதரை கீழே தள்ளிவிட வேண்டும் என்று அவர் பெரு முயற்சி எடுத்தார். சிவகுரு நாதரின் பங்காளியான ஒரு ஏழை மனிதரைப் பிடித்து அவ ருக்குக் கைக்கூலி தந்து, சிவ குருநாதரின் சொத்தின் பெரும் பகுதியில் தனக்கும் பாத்தி யதையுண்டு என்று கலாட்டா செய்யச் செய்தார். இதற்காக சட்டத்தின் துணைகொண்டு தன் முயற்சியை தீவிரப்படுத்தினர். அதாவது சிவகுருநாதரின் சொத்தில் பங்கு பெறுவதற் காக அந்த கைக்கூலி ஆசாமி யைவழக்குத் தொடரச் செய்து இவர் பக்கபலமாக நின்றார்.

வழக்கு விசாரணைக்கு வந்தது. வழக்கில் திருவேங்கடம் பக்கத் தில் உள்ள போலித்தனம் ஊரறிந்த விஷயமாகும். அவர் வீண் பைத்தியக்கார செய லில் இறங்குகிறார் என்று ஊரார் இகழ்ந்தனர். நானும் சிவகுரு நாதரும் கவலைப்படவேஇல்லை. என்னுடைய அரைமணி நேர வாதத்திற்குகூட அந்த வழக்கு நிற்க முடியாது என்பது நிதர் சனமாக எனக்குப் பட்டது.

இந்த சமயத்தில்தான் நான் அந்தப் பயங்கரச் சோதனைக்கு இலக்கானேன். கோமதி, இன்று நினைத்தால் கூட என் துரோகம் என் நெஞ்சை அறுக்கிறது.

ஒரு நாள் இரவு திருவேங்க டம் பிள்ளை என்னை ரகசியமாக சந்தித்தார். இந்த வழக்கில் சிவகுருநாதர் பக்கம் உண்மை யாக வாதாடாமல் கடைசிவரை மௌனமாக இருந்து அவர் காலை வாரிவிட ஒப்புக்கொண் டால் ரொக்கமாக பதினையா யிரம் ரூபாய்கள் முன் பணமா கவே தரத் தயாராக இருப்ப தாக அறிவித்தார்.

உலகை வளர்ச்சிக்காக மாயா சக்தியால் ஏற்பட்ட காந்த சக்தியே காதல். இவ்வுணர்வைத் தடுக்கவோ, இதை விட்டுத் தப்பவோ யாராலும் முடியாது.

யோகி சுத்தானந்த பாரதியார்

என் மனம் குழம்பியது. சிவகுருநாதரின் உதவிகள் மனக் கண்களின் முன் நின்றாலும், வாழ்நாளில் என்னால் கனவில் கூடக் காண முடியாத பெருந் தொகை கை மேல் கிடைப்பதையும் என்னால் உதறிவிட முடியவில்லை. இரவு முழுதும் தூக்கமின்றி இது பற்றி ஆலோசனையில் மூழ்கிக் கிடந்தேன். இறுதியில் துரோக புத்தியே மேலோங்கிவிட்டது.

கடைசி வரையும் இந்த வழக்கு சம்பந்தமாக நான் ஒரு முயற்சியும் செய்யாமல் இருந்துவிட்டேன். மற்றும் எதிரிகள் கை ஓங்குவதற்கான பல வழிகளையும் நானாக விட்டுக் கொடுத்தேன். நான் முழுமூச்சாக உழைப்பதாகக் கருதிய சிவகுருநாதர் என்னை முழுக்க முழுக்க நம்பி நின்றார்.

முடிவென்ன: வழக்கு சிவகுருநாதருக்கு எதிராக முடிந்தது. அவருடைய சொத்தின் பெரும் பகுதி திருவேங்கடம் நிறுத்திய ஆளுக்குச் சேர வேண்டுமென்று தீர்ப்பாகி விட்டது,

இந்த எதிர் பாராத முடிவு கண்டு சிவகுருநாதர் அதிர்ச்சியடைந்து அதே ஏக்கத்தில் நோய் வாய்ப்பட்டு படுக்கையில் விழுந்துவிட்டார். அவருக்கு எனது துரோகச் செயலும் புரிந்துவிட்டது.

இந்த சமயத்தில் சென்னையில் சிவகுருநாதரின் தங்கை வீட்டில் நீண்ட காலமாகத் தங்கிக் கல்லூரியில் படித்துக் கொண்டிருந்த அவருடைய மகன் ஊர் வந்து சேர்ந்தான். படுக்கையில் கிடந்த சிவகுருநாதர் தன் மகனிடம் நான் செய்த துரோகத்தைப் பற்றிக் குறிப்பிட்டு என்னைப் பழி வாங்க வேண்டும் என்று கூறி உயிரை விட்டுவிட்டார். கணவன் இறந்த துயர் தாங்கமாட்டாது அவருடைய மனைவியும் சிலநாளில் இறந்துவிட்டாள்.

தன்னந்தனியாக நடுத்தெருவில் நின்ற அந்தப் பையனுடைய ஆத்திரம் முழுவதும் என் மீது திரும்பியதில் வியப்பில்லையல்லவா! என்னைத் தொலைத்துக்கட்டிவிடுவது என்று வெறியடைந்து திரிய ஆரம்பித்தான்.

நான் எனது துரோகத்துக்காக கிடைத்த பரிசுடன், தப்பித்தோம் பிழைத்தோம் என்று குடும்பத்தோடு இங்கே ஓடி வந்துவிட்டேன். என் வாழ்வுடன் ஒட்டிய இந்த ரகஸியத்தை உன் தாய்மட்டுந்தான் அறிவாள், அவளுக்கு என் நடவடிக்கைகள் ஆரம்ப முதல் கடைசிவரை கொஞ்சங்கூட பிடிக்கவே இல்லை. சாகும் போதுகூட அவள் இதைப் பற்றி நினைத்துக்கொண்டு கண்ணீர் வடித்தாள், இதற்கு ஏதாவது வகையில் பிராயச்சித்தம் செய்தாக வேண்டும் என்று வற்புறுத்திவிட்டுத்தான் உயிரை விட்டாள்.

நான் சென்னை வந்த பிறகும் அந்தப் பையன் விடவில்லை. என்னைப் பற்றிய புலன் விசாரணையில் தீவிரமாக ஈடுபட்டு

சென்னைக்கே வந்து என்னைத் தேட ஆரம்பித்து விட்டான். இரண்டொரு தடவை அவன் கண்களில் நான் பட்டுவிட்டேன். நல்லவேளையாக பக்க பலம் சற்று அதிகமாக இருந்ததால் நான் தப்பமுடிந்தது.

இரண்டு மூன்று வருடங்களுக்கு முன்பு தர்மபுரம் என்ற ஊரில் சில அரசியல் புரட்சிக்காரர்கள் ரயிலைக் கவிழ்த்துப் பெருஞ் சேதம் விளைவித்து விட்டனர். அக்குற்றவாளிகள் சென்னை வட்டாரத்தில் தலை மறைவாக உலாவுதாக வதந்தி வந்ததன் பேரில் சென்னைப் போலீஸார் அவர்களை ரகஸியமாகத் தேடிக் கொண்டிருந்தனர்,

எனக்கு ஒரு யோசனை தென்பட்டது, மெல்ல அந்தப் பையன் இருக்குமிடத்தைப் புரிந்து கொண்டு, எனக்குத் தெரிந்த உயர்தர போலீஸ் அதிகாரி ஒருவரின் துணையால் அவனைக் கைது செய்து, தர்மபுரம் வழக்கில் மாட்டி வைத்து நிரபராதியான அவனுக்கு ஐந்து வருடக் கடுங்காவல் தண்டனை வாங்கியளித்தேன்....''

இந்த விடத்தில் மார்க்க சகாயம் சற்று நிறுத்திவிட்டு ''அதன் பிறகு நடந்த கதை தான் உனக்குப் புரிந்திருக்கும்'' என்று கூறி மகளைப் பார்த்தார்.

வெகுசுவாரஸ்யமாகக் கேட்டு வந்த கோமதி நீண்ட பெருமூச்சு ஒன்றை விட்டுக்கொண்டு ''உம்....உங்கள் கதை இனி மேல் தான் விறுவிறுப்பாக இருக்கும். ஏனென்றால் அந்த அப்பாவிப் பையன் மீண்டும் சிறையிடப் படப்போகிறான்'' என்றாள் வேதனையுடன்.

தன்னை அவள் இப்படி நேரிடையாகக் குத்திக் காண்பித்ததில் மார்க்க சகாயத்திற்கு கோபம் வரவில்லை. சிரித்துக் கொண்டே ''உன் யூகந்தான் தவறு. அந்தக் கடிதத்தை நான் போலீஸுக்கு அனுப்பவே இல்லை'' என்றார்.

'' அப்படி யென்றால்....?''

''முதலில் போலீஸில் அவனைக் காட்டிக் கொடுத்துவிடலாம் என்ற எண்ணத்துடன் தான் கடிதம் எழுதினேன். பிறகு மனம் மாறிவிட்டது. இப்பொழுது ஒரு முடிவுக்கு வந்திருக்கிறேன். அந்தப் பையனை நேரில் சந்தித்து என் குற்றங்களுக்கு அவனிடம் மன்னிப்பு கேட்க எண்ணியிருக்கிறேன்''

''அதனால் இனி என்ன பிரயோசனம்? எப்படி யிருந்தாலும் ஒரு நாள் அவர் போலீஸ் பிடியில் சிக்க வேண்டியவர் தானே'' என்றாள் கோமதி குறுக்கிட்டு.

''அது உண்மைதான். ஆனால் நிலைமை அப்படியொன்றும் சிக்கலானதல்ல. அவன் வழக்கிலிருக்கும் பலஹீனம் எனக்குத் தெரியும். அவன் குற்றவாளி தான் என்பதற்கு தகுந்த சாட்சியம் இல்லை. நான் அவனுக்காக மேல் கோர்ட்டில் அப்பீல் செய்தால் வெற்றி கிடைத்து விடலாம். ஆனால் சிறையிலிருந்து தப்பியது ஒரு குற்றமே. அது தவிர்க்கமுடியாதது. எனினும் தண்டனை மிகக் குறைவாகக் கிடைக்கவோ, அல்லது ஏதாவது பெருந்தொகை அபராதம் என்ற தீர்ப்புடனே, அதை சரிப்படுத்திவிடலாம்.'' என்றார் மார்க்க சகாயம். இப்பொழுது அவர் பேச்சில் மட்டுமல்ல முகத்தில்கூட தெளிவு இருந்தது.

கோமதிக்கு மகிழ்ச்சி தாங்க முடியவில்லை. சிறு குழந்தை

மாதிரி பாய்ந்து தந்தையைக் கட்டிக் கொண்டாள். பிறகு அவசர அவசரமாக டிபன் காரியரில் நாராயணனுக்கு சாப்பாடு எடுத்துக்கொண்டு தோட்ட பங்களாவை நோக்கி விரைந்தாள்.

தோட்டபங்களாவின் வாசலை அடைந்ததும் வெளிப்பக்கம் காவல்காரன் உட்கார்ந்திருப்பதைக்கண்ட கோமதி "ஏண்டா இங்கே இருக்கிருய். நான் அந்த ஐயாவுடன் இருக்கச் சொன்னேனே" என்று கடிந்துகொண்டாள்,

"அவரு போயிட்டாருங்கோ" என்ருன் காவல்காரன்.

கோமதிக்கு இருதயமே நின்று விடும்போல் இருந்தது. கையில் இருந்த டிபன் காரியர் அவள் கையை விட்டு நழுவியது.

"என்ன சொல்லிவிட்டுப் போனுர்?" என்ருள் கோமதி படபடப்புடன்.

"ஒன்றுமே சொல்லலிங்க. செடி கொடிகளை வெட்டறதுக்காக என் கையிலே வைத்திருந்த கத்தியைப் பார்த்து விட்டு, கொஞ்ச நேரம் அது வேண்டும்னு சொன்னுரு; கொடுத்தேன். இது இருக்கட்டும் எனக்கு காபி வேணும், போய் வாங்கி வான்னு சொன்னுர். ஹோட்டலுக்குப் போய் திரும்பிவந்து பார்த்தா, காணேமுங்க" என்ருன் காவல்காரன்.

"அட படுபாவி.... காரியத்தைக் கெடுத்துட்டியேடா" என்று துடித்தாள் கோமதி.

வேறு எங்காவது சென்று தற்கொலை செய்துக்கொள்ள நாராயணன் முடிவு செய்து விட்டான் என்பது தெளிவாக விளங்கி விட்டது. இனி என்ன செய்வது! உயிரை இழந்துவிட்ட வெறுங் கூடுமாதிரி கோமதி விட்டுக்குத் திரும்பினுள்.

4

இரவு சுமார் பன்னிரண்டு மணிக்குமேல் ஆகிவிட்டது. மார்க்க சகாயத்தின் விட்டில் தந்தையும் மகளும் தூங்கவே இல்லை. மார்க்க சகாயம் தன் அறையில் விளக்கைப்போட்டுக் கொண்டு சிந்தனையில் ஆழ்ந்து கிடந்தார். நாராயணனின் அன்றைய நடவடிக்கைகள் அவர் மனதைக் குழப்பிவிட்டிருந்தன.

கோமதி விட்டுக்குப் பின் புறமிருக்கும் சிறு தோட்டத்தில் இருளில் உலாவிக் கொண்டிருந்தாள். வேதனை, பயங்கரம், பீதி ஆகிய உணர்ச்சிகள் எல்லாம் ஒன்று திரண்டு அவள் மனதில் கண்ணுமூச்சி விளையாடிக்கொண்டிருந்தன.

பொழுது விடிந்தால் நாராயணனின் தற்கொலைச் செய்தி நிச்சயம் கிடைத்துவிடும்.... இப்படி நினைக்கும் போதே கோமதிக்கு உடலெல்லாம் சிலிர்த்தது.

கோமதி பிறந்தது முதல் சுகமாகவே வளர்ந்தவள், கஷ்டத்தின் சிறு முனையைக்கூடக் கண்டவளல்ல. ஆகவே இந்த நிகழ்ச்சிகள் அவளுடைய சகிப்புத் தன்மையையும் மீறி மனதை ஒடித்துவிட்டன.

நாராயணன் வந்த புதிதில் இப்படிப்பட்ட சம்பவங்கள் நிகழ்ந்திருந்தால் அவள் கவலைபட்டிருக்கமாட்டாள். ஏதோ ஒரு விளையாட்டாகக் கருதியிருப்பாள். இப்பொழுது நாராயணன் அவள் இதயத்தில் ஒரு முக்கிய இடத்தை ஆக்கிரமித்துக் கொண்டிருந்தான். இது

வரை பெற்றோரின் பாசத்தை மட்டுமே அனுபவித்து வந்த கோமதி கொஞ்ச காலமாக ஒரு புதிய இனிய அனுபவத்துக்கு உள்ளாகி இருந்தாள். தன்னையும் நாராயணனையும் இணைத்து அவள் கண்ட கனவுகள் கொஞ்சமா! கடைசியில் விஷயம் இப்படி பயங்கரமாக முடிந்து விட்டதே...! அவளது மனவேதனையின் முக்கால் பகுதியும் இந்த விசாரத்தில்தான் நிரம்பியிருந்தது.

குழம்பிய எண்ணங்களோடு போராடிய வண்ணம் உலாவிய கோமதி திடுக்கிட்டு நின்று சற்று தூரத்தில் இருந்த சுற்றுச் சுவற்றைக் கவனித்தாள். வெளிப்புற மிருந்து ஒரு வெண்மை உருவம் சுவற்றின் மேல் ஏறி உள்ளே குதிப்பது அந்த இருளிலும் தெளிவாகத் தெரிந்தது. பிறகு அந்த உருவம் மெல்ல வாசற்படியை நோக்கி நகர்ந்து வந்தது.

கோமதிக்கு இருதயத் துடிப்பே நின்று விட்ட மாதிரி இருந்தது. பேச நாவெழவில்லை. கால்கள் இடம் பெயர மறுத்தன. பக்கத்திலிருந்த ஒரு அடர்ந்த செடியின் அருகில் சோர்ந்து உட்கார்ந்துவிட்டாள்.

வந்த உருவம் தன்னைக் கவனிக்காமல் தாண்டிப் போகும் போது கோமதி நிதானமாகக் கவனித்தாள். அந்த உருவத்தின் கையில் ஒரு கத்தியிருந்தது. கோமதிக்கு விஷயம் புரிய வெகு நேரமாகவில்லை.

தன்னை மீறிய வெறியுணர்வோடு எழுந்து ''நாராயணன்'' என்று கத்தினாள்.

வாசற்படியை நெருங்கிவிட்ட அந்த உருவம் திகைத்து நின்றது. கோமதி வேகமாக ஓடிச் சென்று கத்தியும் கையுமாக நின்ற நாராயணனுக்கு முன்னால் கம்பீரமாக நின்று ''நாராயணன் நீங்கள் உங்கள் தகப்பனாரின் வாக்கை நிறைவேற்ற என் தந்தையைப் பழிவாங்கத் துணிந்து விட்டீர்கள்.... இதோ நான் தந்தையின் பாதுகாவலனாக நிற்கிறேன். என்னை கொலை செய்த பிறகுதான் ஒரு அடி எடுத்து வைக்க முடியும்'' என்றாள்.

நாராயணன் இந்த எதிர்பாராத நிகழ்ச்சியைக் கண்டு செயலற்றுவிட்டான். அவன் முகத்தில் படிந்திருந்த குரூரம் மடமட வென இறங்கத் தொடங்கிற்று. உயரத் தூக்கியிருந்த கத்திபிடித்த கை தாழ்ந்தது.



கோமதி டக்கென அவன் கையிலிருந்த கத்தியைப் பிடுங்கி வேகமாக வீசி எறிந்தாள். அது சுற்றுச் சுவற்றைச் தாண்டி வெளியே போய் விழுந்தது.

பிரமித்துப் போய் நின்ற நாராயணனின் கைகளைப் பிடித்துக் கொண்டு "உங்கள் வரவுக்காகத்தான் அப்பா காத்துக் கொண்டிருக்கிருர். பழைய மார்க்க சகாயம் வெகு நாட்களுக்கு முன்பே மடிந்துவிட்டார். இப்போது இருப்பது ஞான ஸ்நானமடைந்துள்ள புனித உருவம். உங்கள் ஆத்திரம் இனி அர்த்தமற்றது. தேவையில்லாதது. வாருங்க்ள் போகலாம்" என்று கோமதி முன்னுல் நடந்தாள். மந்திர சக்தியால் இயக்கப்படுபவன்போல மௌனமாக நாராயணன் பின் தொடர்ந்தான்.

5

மகிழ்ச்சியின் பிரதிபிம்பம் போல அன்றிரவு மார்க்கசகாயத்தின் தோட்ட பங்களாவுக்குள் எல்லா விளக்குகளும் ஜெக ஜோதியாய் ஒளிவிட்டுக்கொண்டிருந்தன. அந்த சூழ்நிலேயே புத்துணர்வு பெற்று விழித்து நிற்பதுபோலத் தோன்றிற்று.

மார்க்கசகாயம் பங்களா வாசலில உல்லாசமாக உலாவிக் கொண்டிருந்தார். அவருடைய முகத்தில் நிரம்பியிருந்த ஆனந்த ஜோதி வானத்தில் பவனி வந்த பூர்ண சந்திரனேயும் தோற்கடித்து விடும்போல் இருந்தது. அவருக்கு அருகே வீட்டு வேலேக்காரன் பணிவுடன் நின்றுக் கொண்டிருந்தான். கோமதி–நாராயணன் திருமண சம்பந்தமாக செய்ய வேண்டிய ஏற்பாடுகளே பற்றி அவனிடம் உத்தரவு மேல் உத்தரவாக போட்டுக்கொண்டும், அவனுடைய ஆலோசனைகளைக் கேட்டுக் கொண்டும் ஏகப்பட்ட ரகளேயுடன் அவர் உலாவினுர்.

அடிக்கடி அவர் கண்கள் சற்று தொலேவில் தனிமையில் உட்கார்ந்திருந்த நாராயணனேயும் கோமதியையும் பார்த்து விட்டுத் திரும்பின.

இருந்தாற் போலிருந்து எதையோ நினேத்துக்கொண்ட மார்க்கசகாயம் "கோமதி" என்று உரக்கக் குரல் கொடுத்தார்.

"என்ன அப்பா" என்று அங்கிருந்தபடியே பதில் குரல் கொடுத்தாள் கோமதி.

"எனக்கு ரொம்ப வேலே யிருக்கு. நான் நடந்தே வீட்டுக்குப் போகிறேன், நீங்க பத்திரமாகாரில் வந்துவிடுங்க" என்று கூறிவிட்டுப் புறப்பட்டார்.

அவர் சென்றபின் நாராயணன் "உன் அப்பா உன்னேப் பற்றி ரொம்ப கவலேப்படுகிருர் போலிருக்கே" என்ருன்.

"ஆமாம். கவலே இருக்காதா என்ன! நீங்கள் பக்கத்தில் இருக்கிறீர்களே" என்று குறும்புடன் கோமதி கூறினுள்.

"நான் இருந்தால்....?"

"என்ன இருந்தாலும் என் அப்பா உங்கள் வாழ்வைக் கெடுத்தவர். உங்கள் தந்தையை...." என்று சொல்ல ஆரம்பித்த கோமதியை அருகே இழுத்து அவள் வாயைத் தன் கைகளால் மூடி "உன் தந்தை என் வாழ்வைக் கெடுத்தார் என்பது உண்மை. ஆனுல் நீ எனக்கு வாழ்வைக் கொடுத்திருக்கிருயே...." என்று கூறி

விட்டு கோமதியின் முகத்தை அர்த்தத்துடன் நோக்கி "என்னைக் கண்டால் உனக்குப் பயமாக இருக்கிறதா?" என்ருன்

"என்னை என்ன, அப்பா என்று நினைத்து விட்டீர்களா! உங்களைக் கண்டு மிரண்டு ஓட.... என்னிடம் உங்கள் மிரட்டல் எல்லாம் பலிக்காது. அன்று இரவு வீட்டு தோட்டத்தில் கத்தியும் கையுமாக வந்த நீங்கள் என்னைக் கண்ட உடனே என்ன நிலையை அடைந்தீர்கள்! எனக்குத் தெரியாதா."

"அப்போ உன் தந்தை எச்சரிக்கை செய்தது எனக்காகத் தான் போலிருக்கிறது" என்று மகிழ்ச்சி பொங்க அவளை அணைத்துக் கொண்டான் நாராயணன்.

"கல்லூரியில் படிக்கும் போது ஒருநாள் நானும் தோழிகளும் வேடிக்கையாக குருவி சாஸ்திரம் பார்த்தோம். எல்லோரும்பார்த்து முடித்த உடன் எனக்காக குருவி எடுத்துத்தந்த சாஸ்திரத்தை நானே வாங்கிப் படித்தேன். அதில் என்ன எழுதியிருந்தது தெரியுமா?" என்று கேட்டாள் கோமதி.

"ஏதாவது லாபம் கிடைக்கும் என்று இருந்திருக்கும்" என்ருன் நாராயணன் சிரித்துக் கொண்டே.

"அதுதான் இல்லே. "உன் கனவு நிச்சயம் பலிக்கும்...."

"நீ சாஸ்திரம் பார்த்தபோது பகல் தானே. உன்னுடைய பகற் கனவு என்னவாக இருந்தது? சாயந்திர டிபனைப்பற்றிக் கனவு கண்டுக் கொண்டிருந்திருப்பாய்" என்று கேலி செய்தான் நாராயணன்.

கோமதி நாராயணனின் கழுத்தைக் கட்டிக் கொண்டு அன்பு தவழப் பார்த்தவண்ணம் "நன்ருக யோசனை செய்துப்பாருங்கள். என் கனவு எதுவாக இருந்திருக்கும்?" என்ருள்.

நாராயணனுக்குப் புரியாதா என்ன: "அது சரி....அந்தக் கனவு அப்படி ஒன்றும் சுலபமாகப் பலித்துவிட வில்லையே" என்ருன் புன்னகையுடன்.

"சுலபமோ, கஷ்டமோ, கல்லூரி வாழ்வில் நான் கண்ட கனவு பலித்துவிட்டதா இல்லையா?" என்று கோமதி கொஞ்சினுள்.

கனவு உலகத்தில் சஞ்சரித்துக் கொண்டிருந்த இந்த இளங் காதலர்களைக் கண்டு வானத்து நிலா சிரித்த வண்ணம் நகர்ந்துக் கொண்டிருந்தது.

டாக்டர்கள் பல ரகங்கள்!

டாக்டர்களில் பல வகை உண்டு. ஏழைகளுக்கு இலவசமாக வைத்தியம் செய்து செல்வர்களிடம் அதிகப் பணம் வாங்குவோர் ஒரு வகை. ஆனுல் இவர்களிடம் ஒரு தொந்தரவு என்னவென்ருல் ஏழைகளுக்கு வைத்தியம் செய்ய மட்டும் இவர்களுக்கு அவகாசமே கிடைப்பதில்லை.

மற்ருெரு வகை டாக்டர்கள் கை நீட்டிப் பணம் வாங்குவதில்லை என்று விரதம் கொண்டவர்கள். ஆனுல் மேஜைமீது அவரவர்களுக்கு விருப்பமான தொகையை வைத்துவிட்டுப் போகலாம்.

— கல்கி.

உலக இலக்கியம் :

மூன்று

லா-டா என்னும் மூத்த சகோதரர் லா-யீ என்ற இளைய சகோதரரிடம் ''நாம் கொஞ்சம் டீ தயாரிக்கலாமா?'' என்று கேட்டுவிட்டு கைகளை நீட்டிச் சோம்பல் முறித்துக்கொட்டாவி விட்டார். தொடர்ந்து, ''இன்றைக்கு ரொம்ப குளிராக இருக்கிறது. என் கால்கள் ஜில்லிட்டுப் போய்விட்டன'' என்றார்.

''எனக்கும் அப்படித்தான்'' என ஒத்துப்பாடினார் லா-யீ! ''அடுப்பில் கரி காலியாகப் போகிறது. சீக்கிரம் டீ போடு'' என்றார்.

மூத்தவர் அடுப்பங்கரைக்குப் போய் கெட்டிலை எடுத்து அடுப்பின்மீது வைத்தார். லா-யீ தூக்கம் சொக்கும் கண்களைக் கசக்கினார். களைப்புப் பெருமூச்சு சிதறினார். கணக்குப் பார்ப்பதில் முனைந்தார். கணக்குப் பார்ப்பதற்காக பாசி மணிகளைக் கோத்து அமைத்த சட்டத்தில் மணிகள் நகரும் பொழுது, வெள்ளித் தாம்பாளத்தில் முத்துகள் உருளுவதுபோல் இனிய ஓசை எழுந்தது. அவர் விரலின் வேகம் அதிகரிக்க அதிகரிக்க, அந்த ஓசையின் இனிமையும் அதிகரித்தது. சில வினாடிகளில் அவர் தன் களைப்பை மறந்துவிட்டார். சுகமாகத் தூங்கி எழுந்தவுடன் ஏற்படும் சோபை மாதிரி ஒரு களை அவர் கண்களிலே பிறந்தது. அந்தப் புராதன கணக்கு யந்திரத்தோடு கைகள் விளையாடியதில் பிறந்த தெம்பு அது.

கடந்த பதினான்கு மாதங்களில் தாங்கள் அண்ணனும் தம்பியுமாகச் சேர்ந்து நடத்தும் அந்தக் கடையில் கிடைத்த லாபம் எவ்வளவு என்பதை அறிவிக்கும் கணக்குதான் அவர் பார்த்தது.

சிறிது நேரத்திற்கெல்லாம் லா-டா அடுப்பங்கரையிலிருந்து வெளியே வந்தார். மணி மாதிரி அமைப்புக்

மூல ஆசிரியர் :
சுன் - சான் யே

சீனக் கதை :

சகோதரர்கள்

கொண்ட இரு நீல நிறக் கோப்பைகளை அவர் மேஜை மேல் வைத்தார். இரண்டிலும் சுமார் ஒரு டஜன் தேயிலை இலைகள்—நீளமான, பசுமையான, நன்கு பதம் செய்யப்பட்ட இலைகள்—கிடந்தன. அவர் சூடான தண்ணீரை கெட்டிலிலிருந்து கோப்பைகளில் ஊற்றினார். இலைகள் மேல் எழுந்து மிதந்தன. அவை மெது மெதுவாக விரிந்து, ஊறி, சுருண்டு பையப் பைய மறுபடியும் அடியில் ஆழ்ந்தன. அவை அமிழ்ந்ததும் வசந்த காலத்தில் எப்பவாவது மழை பெய்யும் பொழுதும், பனிக்காலத்திலும் நீல நிற மலைகளில் தேயிலைத் தோட்டங்களில் இருந்து எழுந்து பரவும் இனிய மணம் அந்த இடத்திலும் பரவியது. பெரியவர் மூச்சை இழுத்து அந்த வாசனையின் மோப்பத்தை அனுபவித்தார். சந்தோஷத்தால் அவர் கண்கள் பாதி மூடின. தேயிலையை ரசித்தார் அவர். அதன் மணம் அவருக்கு மகிழ்வூட்டியது.

தம்பி கணக்கு எண்ணுவதைத் திடீரென நிறுத்தினார். காரணம் அதே வாசனையால் கவரப் பட்டதுதான். அவர் கண்மூடி இன்ப மயக்கத்தில் ஆழ்ந்தார்.

வாழ்வில், மிகவும் சமீப காலமாக அவர்கள் கண்டு பிடித்த இன்பம் இது. ஆளை அசத்தும் வேலைக்கு ஊடே ஓய்வு கொடுத்து இன்பமூட்டும் சாதனமாய் விளங்கியது, இந்தத் தேநீர் பானம். இருபது வருஷங்களுக்கு முன்னால் நாடோடியான ஒரு தெருப் பாடகனின் குழந்தைகளாக சாப்பாட்டிற்கு லாட்டரி அடித்துக் கொண்டிருந்தவர்கள் அவர்கள். காட்டாற்றின் வழியே போய்க் கொண்டும், வந்து கொண்டும்

தமிழாக்கம் :
அசோகன்

இருக்கும் தோணிகளில் உள்ளவர்களுக்குப் பாட்டுப்பாடி மகிழ்வித்து ஜீவனம் நடத்தி வந்தார் அவர் தந்தை. உடம்பை வலித்து, மூஞ்சியை வலித்துக் கோணங்கி காட்டியும், ஆபாசமான பாட்டுகள் பாடியும் அவர் தேடிய வரும்படியோ மிகவும் சொற்பமானது. காலத்தை அப்படி ஓட்டிய அவர் திடீரென ஒரு நாள் ஆற்றங்கரை மணலிலே கந்தல் கம்பளத்திலே விழுந்து செத்தார். கையிலே தம்பிடி கிடையாது சாகும் பொழுது. முந்திய வருஷம் தான் அவர் பெண்டாட்டி செத்துப் போனுள். எனவே நிராதரவாக நிற்கப் போகும் தன் மூன்று புதல்வர்களையும் வரவழைத்து அவர் சாகும் தருவாயில் சொன்னுர்: ''நீங்கள் வேறு ஏதாவது உபயோககரமான, அதிக லாபம் தரும் தொழில் செய்து பிழைப்பு நடத்துங்கள். ஆற்றங்கரைப் பக்கமே அடி எடுத்து வைக்காதீர்கள்.''

அப்பொழுது பையன்களில் மூத்தவனுக்குப் பதினைந்து வயது, கடைசிப் பையனுக்கு எட்டு. பத்து வருஷங்களாக எங்கெங்கெல்லாமோ சுற்றித் திரிந்துவிட்டு, கடைசியாக மூத்தவர்கள், இருவரும் இந்தச் சிறு நகரத்தில் காய்கறிக்கடை ஆரம்பித்தார்கள். ஊக்கத்தோடும், விடாமுயற்சியோடும் கடுமையாகப் பாடுபட்டதில் கடை வளர்ச்சி யடைந்து, நாளடைவில் நாட்டிலுள்ள சகல சரக்குகளையும் விற்பனை செய்யும் பெரிய கிட்டங்கியாகி விட்டது. இரவின் அமைதியினூடே ஹாயாக இருந்து. பெரிய பெரிய முதலாளிகளைப் போல சுகமாகத் தேத்தண்ணீர் சாப்பிட முடிந்தது அவர்களால். பழைய நாட்களைப்போல நட்சத்திரங்கள் மின்னும் வானத்தைப் பார்த்தவண்ணம், ஆற்றங்கரையோரமாகக் கட்டாந் தரையில் எங்காவது, குளிருக்குப் பாதுகாப்பாக கையது கொண்டு மெய்யது போர்த்திப் படுத்திருக்க வேண்டியதில்லை.

கோப்பையிலிருந்து எழுந்து பரவிய மணம் படிப்படியாகக் குறைந்தது. சகோதரர்கள் இருவரும் மூடிய கண்களைத் திறந்து கனவின்பத்தில் மகிழ்பவர்கள் மாதிரி, தேயிலை, நீரைப் பார்த்தார்கள். கோப்பைகளைக் கையில் ஏந்தி, அவர்கள் உதடு சூடான தேநீரை ஸ்பரிசித்த பொழுதுதான் அவர்களுக்கு இவ்வுலக நினைப்பு-வியாபாரம் பற்றிய சிந்தனை-வந்தது.

''கணக்கு என்ன சொல்லுது?'' என்ருர். மூத்தவர்.

''இன்னும் முடியலையே!' எனப் பதிலளித்தார் லா-யீ ''ஆனல் இதுவரை பார்த்ததில் நிகரலாபம் நூற்றைம்பது டாலர் வரை காட்டுது'' என்ருர்.

''பேஷ்!'' என்ருர் லா-டா' டீயை இன்னுமொரு மடக்கு பருகினுர். ஏதோ தீவிர யோசனையில் மௌனமானுர், கண் முன்னல் எத்தனையோ எண்ணங்கள் சிறகடித்தன. நகரத்திற்குப் புறம்பாக சௌகரியமான கிராமம் ஒன்றில் ஒரு பெரிய வீடு. பின்னல் அழகான தோட்டம், வலது பக்கத்தில் தனியாக அடுப்பங்கரை, இடது பக்கத்தில் ஒரு குடிசை, அதில் தான் தோட்டக்காரனும் அவன் மனைவியும் வசிக்க இடம் கொடுக்க வேண்டும். தோட்டக்காரனையே தோட்ட வேலையைக் கவனிப்பதுடன் சமையல் வேலைகளையும் கவனிக்க ஏற்பாடு செய்து விடலாம், நம்ம வீட்டுக்கு யஜ

மானியாகத் தேர்ந்தெடுப்பவளை வாட்ட சாட்டமானவளாகத் தேர்ந்தெடுக்க வேண்டும்; அப்பதான் குழந்தைகளைப் பராமரிக்கப் போதுமான தென்பும், வேலைக்காரர்களிடம் கௌரவமான தோற்றமும் ஏற்பட வசதியாக இருக்கும். குழந்தைகளை அசல் பிரபுக்கள் மாதிரியே வளர்க்க வேண்டும். அப்பன் கடைக்காரன், தாத்தா ஆற்றங்கரைப் பாடகன் என்ற நினைப்பே அந்தப் பிள்ளைகள் மனசில் ஏற்படக் கூடாது: என்றெல்லாம் திட்டமிட்டார் அவர்.

அண்ணன் இத்தகைய இன்பக் கனவுகளில் திளைத்திருக்க தம்பி லா-யீ சிட்டை பேரேடு, கணக்கெண்ணும் யந்திரம் ஆகியவற்ளுேடு உறவாடி லாபக் கணக்கு முடிப்பதில் மீண்டும் லயித்துவிட்டார். யந்திரத்தில் கோத்திருந்த பாசிகளை ஒரு மூலையிலிருந்து மறு மூலைக்கு ஏரோப்ளேன் வேகத்தில் நகர்த்திக் கொண்டிருந்தன அவர் விரல்கள். அதே வேளையில் அவர் மனமும் மனோகரமான நினைவுகளில் தான் உழன்றது. தனக்கும் தன் அண்ணனுக்கும் கல்யாணம் ஆகும் நாளைப் பற்றி கனவு கண்டார் அவர். ‘கல்யாணம் ஆனதும் கடையைப் பங்கு பிரித்துவிட வேண்டியது தான். ஏனென்ருல் அண்ணனே வேதாந்த மனோபாவம் ஊறி வருபவர். உள்ளதே போதும் என்ற திருப்தி ஏற்பட்டுவிடும் அவருக்கு. அதோடு துணிஞ்சு எதிலும் இறங்க மனம் வராதவர்’ என்றெல்லாம் எண்ணினுர். கடையைத் தனியாகப் பிரிக்க வேண்டியது, இதர நகரங்களிலெல்லாம் கிளைகள் ஏற்படுத்த வேண்டியது, எண்ணெய் மில் ஒன்று ஏற்படுத்துவதுடன், சாமான்கள் வாங்கிவர, ஏற்றிச் செல்ல தோணியும் வாங்கிவிட வேண்டும் என்று திட்டமிட்டார் அவர்.

இரவு காவற்காரன் நேரம் எவ்வளவு ஆயிற்று என்பதை அறிவிப்பதற்காக அடித்த மணி ஓசை ஓடிக்கொண்டிருந்த கற்பனை யுள்ளங்களுக்கு கடிவாளம் போட்டு நிறுத்தியது. புராதன வெங்கல மணியின் ஓசை மெதுவாக எழுந்து கம்பீரமாக ஒலித்தது. நடுநிசியின் ஆழ்ந்த அமைதியை எடுத்துக் காட்டியபடி. பாவம், அந்த எளியவனுன காவற்காரனையும், கடும் உழைப்பாளிகளான இந்த இரு சகோதரர்களையும் தவிர மற்ற எல்லோரும் நன்கு தூங்கிக் கொண்டிருந்தார்கள். அயர்ந்த தூக்கம். ஒரு சிறு சப்தம் கூட இல்லை. அந்த சிறிய நகரமே ஏதோ கனவில் ஆழ்ந்திருப்பது போல் இருந்தது. ஏதோ ஒரு அமைதியற்ற உந்துதலால் பெரியவர் விழிப்படைந்தார். சத்தான டீ செய்த வேலையோ என்னவோ! ‘புத்த பகவானே, புத்த பகவானே!’ என முணு முணுத்தார். அந்த சப்தத்தைக் கேட்டு அவர் தம்பி ஆச்சரியமடைந்தார். அம்மாதிரி ஜபிப்பது அவரை அறியாமலே அவர் அன்னையிடமிருந்து கற்றுக் கொண்ட பாடம். அவள் அப்படித்தான், தனக்கும் குழந்தைகளுக்கும் உண்ண உணவு கிடைக்காமல், பட்டினி கிடக்க நேரும் சந்தர்ப்பங்களிலெல்லாம் ஜபிப்பாள். இப்பொழுது அண்ணன் அவ்வாறு ஜபித்தது அவர் தூங்கப் போவதில்லை என்பதை உணர்த்தும் அறிவிப்புதான் என நிச்சயித்தார் தம்பி.

திடீரென்று பகவானை ஜபித்தது போலவே வேகமாக எழுந்து, மெதுவாக அடி எடுத்து வைத்து நடந்து மாடிக்குப் போனுர் அண்ணன்.

ஜன்னலோரமாகப் போய் நின்று, சப்தம் செய்யாமல், பனி விழுவதை உன்னிப்பாகக் கவனிப்பவரைப் போல் நின்ருர் அடுத்த க்ஷணம் நடுங்கும் கரங்களால் ஜன்னல் கதவுகள் இரண்டையும் திறந்தார். அங்கே, வெளியேதான் எவ்வளவு மனோகரமாக இருந்தது மாரிக்கால நிலவு! தலையை வெளியே நீட்டி முதலில் வலது பக்கமும் பின்பு இடது புறமும் அவர் பார்வை செலுத்தினுர். பனி பலமாகப் பெய்து உறைந்து கொண்டிருந்தது. கூரை ஓடுகள் பனி படிந்து சந்திர ஒளியில் மீன் செதிள்கள் மாதிரிக்காட்சியளித்தன. தூரத்தில் நெளிந்த ஆறு வெள்ளை ஸில்க் ரிப்பன் மாதிரி தெரிந்தது. கரை மணல் எண்ணிறந்த நட்சத்திரங்கள் கண் சிமிட்டுவது போல் தோன்றியது. திடீரென இதயத்தில் ஒரு வேதனை. இது மாதிரி வேளையில் அழுக்கடைந்த 'ஷெட்' எதிலாவது ஒதுங்கி குளிருக்குப் பாதுகாவலாக தன்னையும் தன் தம்பிமார் இருவரையும் பார்புறத் தழுவி, கந்தல் ஆடையால் தன் தாய் போர்த்த முயன்ற சந்தர்ப்பங்கள் திடீரென அவருக்கு நினைவு வந்தன. அந்த நினைப்பு தற்போதைய பின்னணியில் மிகவும் தெளிவாக எழுந்து வேதனை விளைவித்தது, அவரால் தாள முடியவில்லை. படீரென ஜன்னலை மூடிவிட்டு, சோர்வாக அடி எடுத்து வைத்து, கீழே ஆபீஸ் அறை நோக்கி நடந்தார்.

தம்பி இன்னும் கணக்கில் கண்ணுய்த்தான் இருந்தார். கவிழ்ந்த தலையை நிமிர்த்தவில்லை. அவரது நிழல் சுவரில் விசித்திரமாகப் படிந்திருந்தது.

"இன்னும் முடியவில்லை?" என்று அசட்டுச் சிரிப்பு ஒலி எழுப்பிய வண்ணம் வினவினுர் லா-டா பால்யப்பருவ நினைவுகள், கடைசித் தம்பி பற்றிய ஞாபகங்களை மறப்பதற்காக எதையாவது பேச முயன்ருர் அவர்.

"இன்னும் கொஞ்சம் தான் பாக்கி.... அது முடிந்தாலும் சரி முடியா விட்டாலும் சரி அடுத்த மணி அடித்த உடன் நாம் படுக்கப்போகலாம்" என்ருர் லா-யி.

அண்ணன் மேஜை அருகில் அமர்ந்து காத்துக் கொண்டிருந்தார். நேரம்மெதுவாக நகருகிற மாதிரித்தோன்றியது. நாழிகை ஆகிக் கொண்டிருந்தது. இருந்தும் அடுத்த மணி அடிப்பதற்கான வேளை வரவில்லைபோலும். ஒரு வேளை தூக்கம் அவன் கடமையைச் செய்ய வொட்டாது காவற்காரனைச் சிறைப்படுத்தி விட்டதோ, அல்லது அவன் ஏதாவது இன்பக்கனவில் ஆழ்ந்து விட்டானே? சலிப்படைந்த லா-டா தம்பி மீது கண் பதித்தார். இறுக மூடிய அவன் உதடுகள், வைராக்கியத்தைப் பிரதி பலிக்கும் கண்ணிமைகள், அகன்ற நெற்றி, எடுப்பான மூக்கு.... தந்தை இறந்த பின்பு இரண்டு தம்பிகளையும் தன் பராமரிப்பில் ஒப்புக்கொண்ட பின்பு படிப்படியாக வளர்ச்சி யடைவதைக் கவனித்திருந்த அதே உருப்புகள் திரும்பவும் பால்ய நினைவுகளைக் கொணர்ந்தன. அவற்றைப் பார்க்கப் பார்க்க காணமற்போன கடைசித் தம்பி பற்றிய ஞாபகம் மண்டியது. அவன் எங்கிருக்கிருன் என்ற சுவடே அவருக்குத் தெரியாது.

மேலும் மௌனமாய் இருக்க முடியவில்லை அவரால். "லா-யி! லா-ஸான் இப்பொழுது எங்கே இருப்பான் என்று நினைக்கிருய்?" எனக் கேட்டார்.

மும்மரமாகக் கணக்குப் பார்த்துக்கொண்டிருந்த தம்பி கணக்கு யந்திரத்திலிருந்து விரல்களை எடுத்துவிட்டு கோபப் பார்வையுடன் திரும்பினார். காணமற்போன அவனைப்பற்றி இந்த நேரத்தில் நினைப்பானேன் என்ற ஆச்சரியம் அவருக்கு. ''ஆற்றங்கரை ஓரமாக எங்காவது அசட்டுப் பிரயாணிகளுக்கு பாட்டுப்பாடிக் கொண்டிருப்பான் என நினைக்கிறேன்'' என்று சொல்லிவிட்டு மீண்டும் தலைகுனிந்து கணக்கில் ஆழ்ந்தார். என்ன நினைத்தாரோ, கொஞ்ச நேரம் கழிந்ததும், ''இல்லை இல்லை. தனது தோழர்களோடு எங்காவது வைக்கோல் போரில் படுத்துத் தூங்கிக் கொண்டிருப்பான்'' என்றார்.

வளர்த்த பாசத்தால் பிரியத்தோடு வினவிய அண்ணனின் மனதில் தம்பியின் வார்த்தைகள் வருத்தம் விதைத்தன. அவர் ஒரு வார்த்தைகூட பேசவில்லை.

இந்த இருசகோதரர்களுக்கும் முற்றிலும் முரண்பட்டவனாக இருந்தான் கடைசித் தம்பி. பரம்பரை ரத்தம் அவனது நாளங்களிலே ஓடியது. சிறு வயதில் ஆற்றங்கரையில் வசித்த பொழுதே அவனுக்கு தன் தகப்பனாரின் ஆபாச வேடிக்கைகள், நாடோடி வாழ்க்கை ஆகியவற்றில் பற்றுதல். தோணிகளில் வரும் கூலிகளை மகிழ்விப்பதற்காகத் தந்தையுடன் சேர்ந்த நாடோடிகள் செய்யும் ஆட்டபாட்டங்களைப் பெரிதும் ரஸிப்பான். பெரியவன் ஆனதும் தானும் அம்மாதிரி ஆகவேண்டும் எனத் தீர்மானித்தான். லா-யீக்கு வியாபாரத்தில் எவ்வளவு பற்றுதல் இருந்ததோ அவ்வளவு பற்றுதல் அவனுக்கு அந்தக் கலையைப் பின்பற்ற வேண்டும் என்ற ஆர்வத்தில் இருந்தது. எனவே சகோதரர்கள் அவனையும் வியாபாரத்தில் பங்கு கொள்ள அழைத்த போது அவன் கண்டிப்பாக மறுத்துவிட்டான். தான் பணத்திற்கு அடிமை ஆவதற்காக பிறக்கவில்லை என்று சொல்லிவிட்டான். லா-யீக்கு கோபம் வந்தது. ''சரி, அப்படியானால் நீ எங்காவது போய்த்தொலை!'' என்றார். அவன் ஒரு வினாடி கூடத் தயங்காமல் வெளியேறிவிட்டான்.

இரண்டு நாட்களுக்கு முன்புதான் திடீரென அவன் கடைக்கு வந்தான். வெளுத்துப் போய் ஒல்லியாய் இருந்தான் அவன். தலைமுடி நீளமாக வளர்ந்து கிடந்தது. பார்ப்பவருக்குச் சிரிப்பூட்டும்படியான சிறு தாடி, மஞ்சள் நிறத்தில் நாடோடிப் பாடகனைவிட கவிஞன் என்று சொல்லும்படியான தோற்றம். இந்தத் தடவைதான் அவன் தன் சகோதரர்களுடன் வியாபாரம் பற்றிப் பேசினான். அவர்கள் செல்வமும் சுகமுமாக இருப்பதாகக் கேள்விப்பட்டதாகவும், கல்யாணம் செய்துகொள்ளப் போவதாகவும் சுகமாக கிராமங்களில் தங்கப் போவதாகவும் யார் மூலமோ அறிந்ததாகச் சொன்னான். தானும் கல்யாணம் செய்துகொள்ள வேண்டும் என்றான். ஆனால் தான் ஒரு இடத்தில்

நிரந்தரமாகத் தங்கிக் குடும்பம் அமைப்பது என்னவோ நிச்சய மில்லை என்றான்.

"நீ கல்யாணம் செய்து கொள்வது தானே? அது உனக்கு நல்லது" என்றார் லா-டா. அவர் குரலில் பரிவு தொனித்தது. "என்னிடம் பணம் இல்லை........அது தான் கலைத் தொழிலில் வரும் படி கம்மி என்பது தெரிந்தது தானே!" என்றான் அவன்.

"அது தெரியும்...நாங்கள் வந்து...." அவர் பேசி முடிப்ப தற்கு முன்பாக இரண்டாவது சகோதரர் குறுக்கிட்டார். லா-ஸானைப் பார்த்து "யாரைக் கல்யாணம் செய்து கொள்ளப் போகிறாய்?" என்றார்.

"ஒரு நடிகையை; ஜோராகப் பாடுவாள். அற்புத அழகி."

"உன்னோடு சேர்ந்த நாடோடிக் கழுதையையா?" கலை மனைவி என்ற எண்ணமே அவருக்கு வெறுப்பூட்டியது. "வாழ் நாள் முழுவதையும் நாடோடிகளாக வாழ்ந்து குழந்தைகளைப் பெற்று ஆற்றங் கரை மணலில், சந்திர ஒளியி லும், நட்சத்திரங்களடியிலும் தவிக்க விடவேண்டும் என்ற எண்ணமா? நாம் தான் குழந்தைகளாக அதில் வேண் டிய அனுபவம் பெற்றிருக் கிறோமே! இங்கே நில்லாதே வெளியே போ!" என்றார்.

முதல் தடவை மாதிரியே திரும்பவும் வெளியேறினான் அவன். "லோகாயதமான, ஆபாசமான, அவமானப்படுத் தும்" வார்த்தைகளை அவனால் சகிக்க முடியவில்லை. வீடு இழந்து தவிக்கப்போகும் குழந்தைகளை எப்படி சகிக்க முடியாது என்று அண்ணன் எண்ணினாரோ, அதுபோல் அவர் வார்த்தைகளையும் தான் சகிக்க முடியாது என நினைத் தான் அவன். இந்த முறை அவர்கள் விரோதிகளாகப் பிரிந்தார்கள். "போய் வரு கிறேன்' வணக்கம்" என்ற வார்த்தைகளில்லாமல் பிரிந் தார்கள்.

அந்தக் காட்சி நன்றாக—அப் பொழுதுதான் நிகழ்கின்ற மாதிரி பெரியவர் கண் முன் தோன்றியது. "புத்தபிரானே! புத்தபிரானே!" என திரும்ப வும் ஜபித்தார் அவர்.

அவர் ஜபித்து முடித்தாரோ இல்லையோ! தெருவில் பலத்த ஆரவாரம் கேட்டது. கோடை யிடி மாதிரி ஒலித்தது ஆர வாரம். பணப்பெட்டியைப் பாது காக்க வேண்டும் என்ற குறிக் கோளுடன், குதித்தெழுந்து, கணக்குப் புத்தகங்களை கக்கத் தில் இடுக்கிக் கொண்டு மாடிக்கு ஓடினார் இரண்டாமவர். மூத்தவர் கனத்த மேஜையை கதவுப் பக்கம் தள்ளி முட்டுக் கொடுத்துவிட்டுத்தாமும் மேலே போனார். மாடி ஜன்னலை ஜாக் கிரதையாக சிறிது திறந்து இருவரும் எட்டிப் பார்த்தார் கள். முகமூடி அணிந்த மனிதர் கள் சிலர் நகரத்திற்குள் பிர வேசித்துக் கொண்டிருந்தார் கள். அந்த நேரத்தில் நகரத் தின் பிரதான வாசல் திறந்து கிடந்ததுதான் ஆச்சரியமாக இருந்தது.

"இதனால் தான் இரண்டா வது தடவையாக மணிச் சப்தம் கேட்கவே இல்லை" என்றார் அண்ணன். பயத்தால் அவர் பற்கள் தந்தியடித்தன. "பாவம் காவற்காரக் கிழவன் வாயில் துணியைத் திணித்து அவன் மூர்ச்சையடையச் செய்திருப் பார்கள். திருடர்களின் ஆட்கள்

இருட்டுவதற்கு முன்பாகவே ஊருக்குள் புகுந்து ஆங்காங்கே பதுங்கி இருந்திருக்க வேண்டும் காவல் கோபுர அருகிலேயே கூட ஒளிந்திருந்திருக்கலாம்.''

''அசட்டுத்தனமாக உளராதே அதோபார். நம் கடையைக் கொள்ளை யடிக்கத்தான் வருகிறார்கள் அவர்கள். இந்த வருஷம் லாபம் சம்பாதித்திருக்கிறோம் என்பது அவர்களுக்குத் தெரியும். புது வருஷத்தை முன்னிட்டு இப்பொழுது நாம் விடுமுறைவிட்டிருப்பதால் பணம் ரொக்கமாகக் கடையில் தான் இருக்கும் என்பதும் அவர்களுக்குத் தெரியும். அந்தப் பணத்தை எடுத்துப் போகவே வருகிறார்கள். நாம் இன்பக் கனவு கண்ட நமது குடும்பம், சுகம் எல்லாம் நமக்கு இல்லாமல் போக வேண்டும் என்பது அவர்கள் எண்ணம். கூரை மீது தொத்தி, நம்மை நாம் பாதுகாப்போம்!'' என எச்சரித்தார் தம்பி.

இந்த வார்த்தைகள் நிலைமையின் எக்கச் சக்கத்தை அண்ணன் புரியும்படி செய்தன. பயத்தால் நடுங்கினார் அவர். எதிர் கால வீடு, தோட்டம், தோட்டக்காரன், அவன் குடிசை எல்லாம் எழுந்து பயம் தெளியச் செய்தன. தம்பியும் அவருமாகக் கூரை மீது ஏறி, இது போன்ற அபாயகரமான சந்தர்ப்பத்தை எதிர் பார்த்து தங்குவதற்காக அமைக்கப்பட்டிருந்த இடத்தில் பம்மினார்கள்.

பத்துப் பதினைந்து பேர் இருந்தனர் திருடர்கள். அவர்களிடம் போதுமான துப்பாக்கிகள் இல்லை. பழங்கால ஈட்டிகள், வாள்கள், கைத் துப்பாக்கிகள் ஆகியனவே இருந்தன துப்பாக்கிகள் சுட உபயோகப்படுமா என்பதே சந்தேகம்.

நிலவு வெளிச்சத்தில் அவர்கள் உருவங்கள் நிழலாடின. அவர்கள் பார்வைக்கு அவ்வளவு பயங்கரமானவர்களாகத் தென்படவில்லை. கும்பலாகச் சேர்ந்து கூச்சல் போட்டதுதான் ஓரளவு கலவரம் உண்டு பண்ணியது. தெருவின் ஒரு கோடியிலிருந்து மறு கோடிவரை பேய்கள் மாதிரி ஊளையிட்ட வண்ணம் குதித்தார்கள். சிலர் மூடியிருந்த கடைக் கதவுகளை அசைத்துப் பார்த்தார்கள். திறக்க முடியவில்லை. கதவுகள் பலமானவை. நன்றாகத் தாளிடப்பட்டிருந்ததுடன்; கனமான மேஜைகளினால் வேறு அண்டை கொடுக்கப்பட்டிருந்தன.

கூரை மேலிருந்து கவனித்த சகோதரர்களுக்கு கொள்ளைக்காரர்களின் தோல்வி தெம்பூட்டியது. கொஞ்ச நேரத்தில் அவர்கள் பதற வேண்டி ஏற்பட்டது. திருடர்கள் இப்பொழுது அவர்கள் கடை முன்பு குழுமினார்கள. சதுர வடிவமுள்ள, கனமான கல் ஒன்றை எடுத்து இரண்டு கயிறுகளால் அதைப் பிணைத்தார்கள். இரண்டு புறமும் வரிசையாக நின்று கயிற்றைப் பிடித்துக் கொண்டு, கல்லை வீசி அது கதவு மீது மோதும்படி செய்தார்கள். கதவு பிராய்ந்தது. ஒவ்வொரு முறையும் கல் கதவு மீது மோதும் போதெல்லாம் சகோதரர்கள் உடல்கள் சில்லிட்டன. அவர்கள் கடந்த கால உழைப்பு, எதிர் கால இன்பம், வாழ்வு எல்லாவற்றிற்குமே இப்பொழுது ஆபத்து! இந்த நிலைக்கு உயர பதினைந்து வருஷங்கள் அவர்கள் பாடுபட வேண்டியிருந்தது. ஆனால் இன்னும் கால் மணி நேரத்தில் அந்த உழைப்பின் பலன் எல்லாம் சிதறிவிடும் போலிருந்தது.

ஆபத்து சமயத்தில் ஏற்படும் துணிவின் விளைவாக மூத்தவருக்கு ஒரு யோசனை உதித்தது. பழைய கட்டிடத்தை ஒரு மூலையில் இடித்துப் பெரிதாகக் கட்டுவதற்காக சுண்ணும்பு வாங்கி ஸ்டாக் செய்திருப்பது ஞாபகம் வந்தது. விரைவாகக் கீழே போய் இரண்டு வாளிகள் நிறைய சுண்ணும்புப் பொடியை அள்ளி வந்தார். கதவைத் திறப்பதையே கவனமாகக் கொண்டு அதில் மும்மரமாக திருடர்கள் ஈடுபட்டிருந்தார்கள். அப்பொழுது திடீரென்று சகோதரர்கள் சுண்ணும்புத் தூளை கொட்டினுர்கள். மூச்சுத் திணறச் செய்யும்படியாக வெண் திரள் மேகமாக எழுந்து திருடர்கள் மீது கவிந்தது சுண்ணும்புத் தூள். திருடர்கள் முயற்சி ஏதோ மந்திரத்தால் கட்டுப்பட்டது போல் திடீரென நின்றது. இருமல்கள் எழுந்து இரவின் நிசப்தத்தைக் குலைத்தன. தொண்டை கமறியது மட்டுமல்ல, தூசி கண்ணில் பட்டு கண்களும் கலங்கின. திருடர்கள் முழித்துப் பார்க்க முடியவில்லை. சூருவளியில் சிக்கி கூடுகளை இழந்த பறவைகள் அங்குமிங்கும் சிறகடித்துச் சிதறுவதைப் போல சிதறினுர்கள் திருடர்கள். ஆனுலும் முயற்சியைக் கைவிடவில்லை. திரும்பவும் பயங்கரமாக ஊளையிட்டார்கள். கடைக்குள் நுழைந்ததும், அத்தகைய அட்டூழியம் புரிந்தவர்கள் தலையை வாங்கி விடுவதாகப் பயமுறுத்தினுர்கள். இன்னும் அரை மணி நேரத்தில் கதவை உடைத்து விடுவதாகச் சபதம் செய்தார்கள்.

தூசிப்படலம் படிப்படியாக அடங்கியது. கதவு மறுபடியும் தெளிவாகப் புலனுயிற்று. திரும்பவும் திருடர்கள் அங்கு குழுமினுர்கள். இந்த முறை மிகவும் ஆக்ரோஷத்துடன் இருந்தார்கள். மூச்சுத் திணறியதால் ஏற்பட்ட கோபம் கொழுந்துவிட்டது. பணத்தைக் கொள்ளையடிப்பது மட்டுமல்ல இப்பொழுது அவர்கள் நோக்கம். தங்களுக்கு இழைக்கப்பட்ட 'அநீதி'க்குப் பழிவாங்க வேண்டும் என்ற எண்ணம் வேறு சேர்ந்து கொண்டது. ''அடே, கோழைப் பசங்களா? கதவைத் திறந்து வந்ததும் உங்களை உலைப்பானையிலே போட்டு அரை வேக்காடு வேகவைத்த அப்புறம்தான் உங்கள் தலைகளை வெட்டப் போகிறேம்!'' என்று சிலர் கத்தினுர்கள். உலைப்பானையில் மனிதர்களை வேகவைக்க முடியுமா என்ற பிரச்னை பற்றிய கவலையை அவர்கள் சகோதரர்களின் சிந்தனைக்கு விட்டுவிட்டார்கள். ''சுண்ணும்புப் பொடியை ஆயுதமாக உபயோகிக்க எவ்வளவு கொடிய நெஞ்சம் இருக்கவேண்டும்! உம், சும்மா விடுகிறேமா, பார், உங்களை!'' என உறுமி, முஷ்டியை உயர்த்திக் காட்டினுர்கள் சிலர்.

திருடர்களின் மத்தியில் ஒரு இளைஞன் காணப்பட்டான். அவன் கத்தவில்லை. கையை ஓங்கவில்லை. தன் தோழர்களிடம் நிதானமாகப் பேசினுன். எந்த முறைகளைக் கையாள வேண்டும். என்ன செய்யவேண்டும் என்பதையெல்லாம் படை வீரர்களுக்கு யோசனை சொல்லும் சேனுதிபதி மாதிரி சொல்லி வந்தான். அந்த மனிதன்தான் தங்கள் கடையைச் சுட்டிக்காட்டி, முற்றுகைக்கு ஏற்பாடு செய்தவன் என்பதை லா-யீ கண்டுகொண்டார். தூசி அடங்கியதும் அவன் மீண்டும் முற்றுகையிடக் கட்டளையிட்டான். வெறும் பேச்சை

நிறுத்தி வேலையில் ஈடுபடும்படி பணித்தான். மிகவும் உன்னிப்பாக அவன் நடவடிக்கைகளை பயத்துடன் கவனித்தார் லா-யீ. மீண்டும் இரண்டு வாளி சுண்ணும்பு அண்ணன் கொண்டுவருவதற்குள், பக்கத்துச் சுவரிலிருந்து ஒரு செங்கல்லை பெயர்த்தெடுத்து, அந்த வாலிபன் மீது குறிப்பாக எறியச் சந்தர்ப்பத்தை எதிர்நோக்கியிருந்தார் அவர்.

கீழே கதவு மூச்சுவிடத் தொடங்கியது. இன்னும் சில நிமிஷங்களில் அது உடைந்து விடக் கூடும். எதிர்ப்பவர்கள் அதை உணர்ந்தார்கள். எனவே அவர்கள் வேகம் அதிகரித்தது. தங்கச் சுரங்கத்தில் உற்சாகமாக வேலை செய்கிற மாதிரி உழைத்தார்கள் அவர்கள். கடையில் கன்னம் வைப்பதாகக் கருதவில்லை. வெற்றி மகிழ்வில் பாட்டுப் பாட ஆரம்பித்தார்கள். இளம் விதவை ஒருத்தி புதிய கணவனை எதிர்பார்ப்பதைப் பற்றிய பாட்டு அது. இதுவரை கட்டளையிட்டுக் கொண்டிருந்த வாலிபன் காலியாகக் கிடந்த பக்கத்துக் கடையில் போய் அமர்ந்து சிகரெட் பற்ற வைத்தான். கூரை மீதிருந்த இரண்டாவது சகோதரன் சரியாகக் குறி பார்த்து செங்கல்லை அவன் சிகரெட் பற்ற வைத்த சமயத்தில் வீசி எறிந்தார். அது வந்து சரியாக அவன் தலையில் பட்டது. திருடர் தலைவன் சுருண்டு மரம் மாதிரி சாய்ந்தான். அவனுக்கு பிரக்ஞை தவறிவிட்டது.

பாட்டுப் பாடிய வண்ணம் கதவை உடைப்பதில் முனைந்திருந்த கள்வர்கள் கவனத்தைக் கவர்ந்தது இந்த நிகழ்ச்சி. மிகவும் வருத்தத்துடன் அந்த வேலையை நிறுத்திவிட்டு தங்கள் தலைவனண்டை வந்தார்கள். அவனை மூர்ச்சை தெளிவிக்க எதுவும் செய்ய முடியாத நிலையில் அவர்கள் இருந்தார்கள். முதல் உதவிக்கு தேவையான எதுவும் இல்லை. தண்ணீர் கொதிக்க வைத்து அவனுக்குக் குடிக்கக் கொடுப்பதற்குக் கூட வசதியான இடம் அங்கில்லை. இதற்கிடையில் கோழிகள் கூவி பொழுது புலர்வதை அறிவித்தன. தங்களது வெற்றியின் விளைவான துணிச்சலால் ஓடுகளை வாரி சரமாரியாக வீசினார்கள். கூரை மேலிருந்த இரு சகோதரர்களும். ஓடுகள் திருடர்களில் சிலரது மூக்கை உடைத்தன. சிலரது காதுகளைப் பிய்த்தன. சிலரது மண்டையை உடைத்தன. எனவே தங்கள் தலைவனது உடலைத் தூக்கிக்கொண்டு தப்பினோம் பிழைத்தோம் என்று ஓடினார்கள் அவர்கள்.

இரண்டு சகோதரர்களும் இறங்கி ஆபீஸ் அறையை அடைந்தார்கள். விசேஷம் எதுவும் நிகழாத மாதிரி டீ கோப்பைகள் கணக்கு யந்திரத்தின் பக்கத்தில் அப்படியே இருந்தன.

அண்ணன் அவற்றைப் பார்த்து உதட்டைச் சுளித்தார்.

"ஒருமட்டும் திருடர்கள் போய்ச் சேர்ந்தார்கள். எல்லாம் ஒரு கனவு மாதிரித் தோன்றுகிறது" என்று சொல்லி மௌனத்தைக் கலைத்தார் அவர்.

"கனவு அல்ல. நனவுதான். நமது பொருள், பல நாள் உழைப்பு, எதிர்கால இன்பம் எல்லாம் மயிரிழையில் தப்பிப் பிழைத்தன" என்றார் தம்பி.

பெரியவர் பதில் ஒன்றும் சொல்லவில்லை. மெதுவான நெடுமூச்சு எறிந்தார். முற்றிலும் சந்தர்ப்பத்திற்கு ஒவ்வாத இந்தச் சோர்வு மனப்பான்மை ஆச்சரிய மூட்டியது.

"இப்பொழுதுதான் நமது ஆபத்து நீங்கிவிட்டதே? ஏன் பெருமூச்செறிகிறீர்கள்?" எனக் கேட்டார் அவர்.

"நமது எதிர்காலம் பற்றி எண்ணினேன்."

"புரியவில்லை".

"ஒரு அதிசயமான நினைப்பு. எதிர்காலத்தில் நமக்கு இந்த ஐசுவரியம் எல்லாம் இல்லாமல் இருந்தால் நல்லாயிருக்கும் என எண்ணுகிறேன்".

அண்ணன் என்ன சொல்கிறார் என்பது தம்பிக்குப் புரிந்தது. எனவே அவர் எதுவும் விவாதிக்கவில்லை. "ஆனால் நமது அப்பாவும், அம்மாவும் ஒவ்வொரு நாளும் பட்டினியால் பயமுறுத்தப்பட்டார்கள்" என்றார்,

"நமக்கு சொத்து இல்லை என்றால்கூட அந்த கதி வராது".

"உம்...."

தூரத்தில் எழுந்த பசுவின் குரல் ஒன்று தம்பியின் பேச்சிற்கு தடையாக முளைத்தது, பொழுது விடிந்துவிட்டது. சுறுசுறுப்பான குடியானவர்கள் யாரோ, அவ்வளவு சீக்கிரமாக எழுந்து தங்கள் மாடுகளை வெளியே ஓட்டிக்கொண்டு கிளம்பி விட்டார்கள். இதன் மூலம் சகோதரர்களுக்கு காவல்காரன் நினைவு வந்தது. அவனைக் கொள்ளைக்காரர்கள் பயங்கரமாகக் கொலை செய்திருக்கக் கூடும். அந்த நினைப்பே பெரியவரை உலுக்கியது.

திடீரென ரத்தக் கறைகள் படிந்த காவல்காரன் தேகத்தைத் தம் முன் காண்பது போன்ற பிரமை ஏற்பட்டது அவருக்கு. "பாவம் கிழவன்! அன்பு ததும்பும், களங்கமற்ற முகம் அவனுக்கு!" என்றார்.

"என்ன சொல்கிறீர்கள்? ஏதாவது பிசாசோடு பேசுகிறீர்களா?" என விசாரித்தார் தம்பி.

"காவல்காரனைச் சொல்கிறேன் நான். புகை பிடிக்கும் சுங்கானைத் தவிர வேறு ஒன்றும் கிடையாது அவனுக்கு. அவன் குடியிருந்த காவல் கூடம், படுத்திருக்கும் வைக்கோற் படுக்கை, உட்காரும் ஸ்டூல் எல்லாம் நகரத்தார்களைச் சேர்ந்தது. அவன் ஏன் கொலையுண்டு சாகவேண்டும்?"

"கனவு கண்ட மாதிரி பேசாதே. அவன் கொலையுண்டிருப்பான் என்று எப்படிச் சொல்ல முடியும்? அப்படி நேர்ந்திருந்தாலும் நாம் என்ன செய்ய முடியும்? நம்மால் அதைத் தடுத்திருக்க முடியுமா?"

"முடிந்திருக்கும்" என்றார் லா-டா. அவர் தாம்தான்

கொலைக்குக் காரணம் என்று கருதுவதைப் போல் தீர்மான மாகப் பேசினர். "போன வருஷம் மட்டும் நாம் அவ்வளவு லாபம் சம்பாதிக்கவில்லை என்ருல் திருடர்கள் வந்தே இருக்க மாட்டார்கள். அவனுக்கும் அந்தக் கதி ஏற்பட்டிருக்காது. அவன் சாகக் காரணம் நமது செல்வம்தான்".

"அசட்டுத்தனமாக உளற வேண்டாம்" என்று சொல்லி தம்பி அண்ணனைத் தேற்ற முயன்ருர். சாவு என்பது துர்ப் பாக்கியமான விபத்து. உதாரணமாக நான் எறிந்த செங்கல் அந்த இளம் கொள்ளைக் காரனைக் கொன்றிருந்தால் அதுவும் ஒரு விபத்துதான். அப்படி தற்செயலாக நேர்ந்ததாகத் தான் கொள்ள வேண்டும். நான் மாதக் கணக்கில் திட்டம் போட்டுச் செய்த செய்கையல்ல அது".

"என்ன? மிகவும் துறு துறுப் பாக விளங்கிய அந்த யுவன் மீதா நீ செங்கலை எறிந்தாய்? அவன் ஈடுபட்டிருந்த குற்றத் தைத் தள்ளிவிட்டுப் பார்த்தால், அவன் மிகவும் நல்லவனுகவே தென்பட்டான்".

"அநாவசியமான உணர்ச்சிகள் உன்னைப் பிடித்து ஆட்டுகின்றன. அண்ணு, உல்லாசமாக சிகரெட் பற்றவைத்த வேளையில் கணக்காக அவன் மண்டைமீது அந்த செங்கலை விட்டெறிந்தேன்".

"அப்படியானல் நீ ஒரு கொலைகாரன்." அண்ணனின் குரல் பயங்கரமாக ஒலித்தது. "நம் குடும்பத்தில் இதுவரை யாரும் உயிரோடிருந்த மனிதனைக் கொலை செய்ததில்லை. அவன் தலையிலிருந்து ரத்தம் அதிகமாகக் கொட்டியதா?"

"உணர்ச்சிவசப்பட்டு விஷயங்களைக் கற்பனை செய்து கலவரமடையாதே அண்ணு. அவன் மனிதனல்ல, கொள்ளைக்காரன். அதிலும் நமக்கு அறிமுகமில்லாதவன். அவன் முகம் எப்படியிருக்கிறது எனப் பார்த்திருக்க மாட்டாய் நீ. நானும் பார்த்ததில்லை. அவனுக்காக ஏன் கவலைப்பட வேண்டும்?"

தம்பியின் சமாதான வார்த்தைகளையும் மீறிக் கலவரமடைந்தது பெரியவரின் உள்ளம். ஓடியாடி உல்லாசமாகத் திரிந்த ஒரு மனிதன் கொலையுண்டு, ரத்த வெள்ளத்தில், கனமான கார் சக்கரத்தில் சிக்கி நசுக்குண்டு கிடக்கும் எலி மாதிரி கிடக்கும் பரிதாப பயங்கரக் காட்சி அவர் கண்முன் எழுந்தது.

அந்தக் காட்சி மயங்கும் தன் கண்கள் முன்பு பூதாகார உரு வெடுப்பதாகத் தோன்றவும் அவர் கால்களை உதறினர். அவை தெம்பிழந்து தம்மை நிலை தடுமாறச் செய்வதாக உணர்ந்தார்.

"நம் சொத்தை நாம் பாதுகாக்கத் திட்டமிடுவது அவசியந்தானு எனக் கருதுகிறேன்" என முணு முணுத்தார் அவர், தன்னைச் சமாளிக்க முயன்றவாறே.

தம்பிக்கு அண்ணன் எதைக் குறித்து இவ்வாறு பேசுகிருர் என்பது புரியவில்லை. எனவே மௌனமாக அண்ணனின் முகத்தைப் பார்த்தபடி இருந்தார்.

"நம் தம்பி திரும்பவும் நம் உதவியை நாடி வந்தால், நமது சொத்தில் மூன்றில் ஒரு பாகத்தையாவது அவனுக்குக் கொடுத்து, அவனும் நம்மைப் போல் சுகமாக வாழவும், அவன்

காதலிக்கும் கன்னியைக் கல்யாணம் செய்து கொள்ளவும், அவனது நாடோடி சகாக்களுக்கு அடிக்கடி விருந்துகள் செய்து களிக்கவும் வகை செய்ய வேண்டும். அவர்கள் அனைவரும் நல்ல சாப்பாடு சாப்பிட்டு நாம் சின்னப் பிள்ளைகளாக இருந்த போது சந்தோஷப்பட்டதைப் போல் மகிழ்வு பெற வேண்டும்....'' என்றார்.

இந்த மாதிரி தொடர்ந்து அர்த்தமற்று முணமுணத்தது தம்பிக்கு பெரிய வேதனையாக இருந்தது. இது மாதிரி விசித்திரமான கருத்துக்களை அவர் கேள்விப்பட்டதே கிடையாது. குழந்தைத் தனமான இப்பிதற்றலுக்கு முற்றுப் புள்ளி வைப்பதற்காக, ''உனக்கு என்ன பைத்தியமா, அண்ணா? பழங்காலப் பாட்டி மாதிரிப் பேசுகிறாய்!'' என இரைந்தார் அவர்.

''நீ என்ன வேண்டுமானாலும் சொல்லு. எனக்கு திடீரென வாழ்க்கையே வெறுமையாகப் போன மாதிரித் தோன்றுகிறது'' என்றார் அண்ணன்.

தோல்வி மனப்பான்மை பிரதிபலிக்கும் இந்தக் கோளாறை நிவர்த்திக்க சரியான வார்த்தைகளுக்காக தம்பி தவித்து நின்ற சமயத்தில் வெளியே யாரோ கதவைத் தட்டினார்கள். விடிந்து கொஞ்ச நேரமாகிவிட்டது என்பது விசித்திரமாகப் பட்டது அவருக்கு. மேல்சட்டை மீது படிந்திருந்த சுண்ணாம்புப் பொடியை உதறிவிட்டு கதவைத் திறக்கப் போனார் அவர். நகரத்துப் பிரதானி வாசலில் நின்றார். வயோதிகரான அவர் உலர்ந்த ஒரு புன்னகையை நெளிய விட்டு, பின்பு கொள்ளைக்காரர்களைத் தந்திரமாகச் சமாளித்து விரட்டி அடித்த சாமர்த்தியத்தைப் பாராட்டினார். அடுத்த க்ஷணம் அவர் முகத்தில் கவலை படிந்தது, ஸில்க் துணியில் ஒரு ஆப்பிள் பழத்தைச் சுற்றி அதை வைத்து கிழ காவல்காரன் வாயை அடைத்து அவனைக் கொள்ளைக்காரர்கள் சாக அடித்துவிட்டார்கள் என்ற செய்தியை அறிவித்தார். ''பாவம் அந்தக் கிழவனைச் சாக அடிக்க வேண்டும் என்பது அவர்கள் நோக்கமாக இருந்திராது. அவனும் அவர்களைப் போல் ஏழை தானே! தங்கள் வேலை முடிந்து திரும்புவதற்கும் கிழவன் கட்டை அவிழ்த்துக் கொண்டு, வாய்த் துணிப் பந்தை எடுத்தெறிவதற்கும் சரியாக இருக்கும்; உடனே பட்ட அவஸ்தைக்கு மாற்றாக ஆப்பிள் பழத்தைச் சாப்பிட்டு சந்தோஷம் அனுபவிக்கட்டும் என்று எண்ணி இருக்கலாம்'' என்ற தமது அபிப்பிராயத்தையும் அறிவித்தார். ஆனால் 'கிழவன், பாவம்! அவனுக்கு அப்படிக் கொடுத்துவைக்கவில்லை' என்று தம் அனுதாபத்தையும் தெரிவித்தார். ''செத்தவன் கண்கள் மூடாமல் திறந்தே இருந்தன. அகால மரணமாதலால் தான் அப்படி'' என்றார்.

''அகால மரணமா?'' என்று கேட்டார் அண்ணன்.

''எனக்குத் தெரிந்த வரை அப்படித்தான்,'' என்றார் பிரதானி, அவர் குரல் மெதுவாக ஒலித்தது. இருவருக்கும் சம வயதுதான். ஒரே சம்பளம் தான். வேலை நேரத்தில் தான் வித்தியாசம். ஒருவர் பகலிலும் ஒருவர் இரவிலும் வேலைசெய்து வந்தனர். விவரிக்க வொண்ணாத துயரமும், தனிமையும் அவரைத் தின்ற அடித்தன. அவருக்கும் நாளை அந்தக் கதி

ஏற்படாது என்று யார் சொல்ல முடியும்? "ஆமாம். அகால மரணம்தான். உங்கள் சொத்துகளுக்குக் காவல் இருந்ததன் பலன்" என்ருர்.

அவர் சொன்ன வார்த்தைகள் சட்ட விரோதமானவை. இந்த சகோதரர்கள் மாதிரி மக்களை நம்பிதான் அவர் ஜீவனம் நடைபெற்றது. எனவே அசட்டுச் சிரிப்பு மூலம் சமாளிக்க முயன்று "கிழவனைக் கொன்றதற்கு பர்த்தியாக அவர்களில் வாலிபன் ஒருவனைக் காவு கொடுத்துவிட்டுத்தான் போயிருக்கிருர்கள் திருடர்கள்" என்ருர்.

தம்பி திகைப்படைந்தவராய், "என்ன சொல்கிறீர் நீர்?" என வினவினுர்.

"ஆற்றங்கரை மணலில் வாலிபனுன திருடன் ஒருவனின் பிரேதம் கிடக்கக் கண்டேன் நான். அந்தக் கழுதைக்கு சரியான காயம்பட்டு அவன் சகாக்கள் தூக்கிக் கொண்டு போகும்போது உயிரை விட்டிருக்கிருன். அவன் உடலை விட்டெறிந்துவிட்டு, ஆற்றுக்கு அக்கரையில் உள்ள மலைகளில் பதுங்கிவிட்டார்கள் மற்றவர்கள்" என்று சாவதானமாக விஷயத்தை விளக்கினுர் அவர்.

இரண்டு சகோதரர்களும் பயத்தால் முகம் வெளுத்தார்கள், சின்னவரின் உடல் நளுக்கிக் கொடுத்தது. தான் பார்த்த உருவம் நினைவு வந்தது. குதிப்பும், ஓட்டமுமாக எப்படி இயங்கினுன் அவன். சிகரெட் பற்ற வைத்த ஜோர்தான் என்ன! ஒரு பெரிய முற்றுகையின் போது தன் வீரர்களுக்கு கட்டளை பிறப்பிக்கும் தளபதி மாதிரியல்லவா தோன்றினுன் அவன்! அவனை அநியாயமாகக் கொன்று விட்டேன், கொலைகாரன் நான் என்று எண்ணினுர்.

"நாம் போய் அந்த உடலைப் பார்க்கலாம்!" என்ருர் அவசர அவசரமாக. இறந்த வாலிபன் தான் செங்கல்லால் தாக்கியவனுக இருக்காது என்ற ஒரு அசட்டு நம்பிக்கை அவருக்கு.

'சரி. போவோம்.'

இரு சகோதரர்களும் அந்தக் கிழவரைத் தொடர்ந்தார்கள். ஒரு இடத்தில், தோணி ஒன்று உடைந்து பலகைகள் தாறுமாருக குவிந்துகிடந்த இடத்தில் ஜனங்கள் கும்பலாக நின்ருர்கள். அங்கே மணலில் அந்த திருடனின் சடலம் கிடந்தது. விசாரணை நடத்திய அதிகாரியால் பிரேதத்தை அடையாளம் கண்டுகொள்ள முடியவில்லை. ஒரு கன்னத்து தாடி தவிர முகத்தின் மற்றப்பாகம் எல்லாம் சிதைவுண்டு போயிருந்தது. அவன் சட்டைப் பையில் அரைகுறைக் கடிதம் ஒன்று இருந்தது.

"என் அன்பே"

கடைசியாக ஒரு பிரயாணம் கிளம்புவதெனத் தீர்மானித்து விட்டேன். இந்தப் பயணம் மிகவும் முக்கியமானதாக முடியலாம், எனக்கு என் நண்பர்கள் அனைவரும் துணையாக வருகிருர்கள். அவர்களை எல்லாம் நம் கல்யாணவிருந்திற்கு அழைத்து கௌரவிப்பேன் நான். எனக்கு வெற்றி நிச்சயம் என்று நம்புகிறேன். ஏனென்ருல் நான் யாருக்கும் தீங்கு செய்யப் போவதில்லை. நமக்குத் தேவையான பணத்தை—நம் வாழ்வின் முக்கியமான ஒரு நாளை உல்லாசமாகக் கொண்டாடுவதற்குத் தேவையான தொகையை கடனுகப் பெற்றுவர வேண்டும்

என்பது தான் என் எண்ணம். அப்படிப் பெற எனக்கு உரிமை இருப்பதாக நான் கருது கிறேன்....''

கடிதத்தை கூட்டத்திலிருந்த வர்களுக்கு வாசித்துக் காட்டிய அதிகாரி, இது சம்பந்தமான விவரம் யாருக்காவது தெரி யுமா?'' என விசாரித்தார்.

''செத்துப்போனவன்தான் அக்கடிதத்தை எழுதியிருக்க வேண்டும்'' என்ருர் பிரதானி.

''எங்கே அக்கடிதத்தை நான் பார்க்கட்டும்'' என்ருர் லா-டா.

கடிதத்தின் கையெழுத்தைப் பார்த்ததும் மூத்த சகோதர ரின் மூஞ்சியில் சவக்களை படிந் தது. அவர் அதை அடையா ளம் கண்டுகொண்டார். அவரது கரங்கள் நடுங்கின. விரல்களின் பிடிப்பிலிருந்து நழுவிக் கடிதம் கீழே விழுந்தது. தம்பி லா-யீ அதை எடுத்துப் படித்தார். அவ ரிடமும் அதே மாறுதல். இதைக் கவனித்த கிழவர் அவரைக் கீழே விழுந்துவிடாதபடி தாங் கிக் கொண்டார்.

அதிகாரிக்கு ஆச்சரியமாக இருந்தது. ''உங்களுக்கு இந்த திருடனைத் தெரியுமா?'' என அவர் இளையவரை விசாரித் தார்.

இளைய சகோதரர் அந்தக் கேள்வியைக் கவனித்ததாகவே தெரியவில்லை. ''நான்தான் அவனைக் கொன்றேன்.... குஷி யாக அவன் சிகரெட் பற்ற வைக்க முயன்றபொழுது கொலைசெய்தேன்....'' என முன கினர்.

வார்த்தைகளைத் தெளிவாகப் புரிந்துகொள்ளாத அதிகாரி பெரியவர் பக்கம் திரும்பி விசா ரித்தார்: ''உமக்கு இந்த ஆசாமியைத் தெரியுமா? உங் களுக்குள் பைசலாகவேண்டிய விவகாரங்கள் ஏதாவது உண்டா? நீங்கள் ஒருவருக் கொருவர் விரோதிகளா? அல் லது சொத்து காரணமாக சண்டையிடும் தாயாதிகளா?'' என வினவினுர்.

கொஞ்ச நேரம் யாரோ ஒரு அந்நியனைஉற்றுப்பார்ப்பதைப் போல் அதிகாரியைப் பார்த்து விட்டு, பெரியவரும் புரியாத வகையிலேயே பதில் சொன் ஞர்: ''சண்டையிட பூர்வீக ஆஸ்தி எதுவும் எங்களுக்கு கிடையாது. நாங்கள் மூன்று சகோதரர்கள் தான். எங்கள் பெற்ருேரின் ஆஸ்தி, உடல் உரம் பெற்ற புதல்வர்கள். ஆனல் இப்போ ஒருவன் கால மாகிவிட்டான்.... செத்துப் போனுன்.... வளர்ந்த ஆற்றங் கரை மணலிலே ஐக்யமாகிவிட் டான்.... நாங்கள் எல்லோரும் மணலிலேதான் வளர்ந்தோம்!''

அர்த்தமாகாத இந்த ஆத்ம கதம் கூட்டத்தினரைக் குழம்ப வைத்தது. ஆச்சரியத்தால் அகல விரிந்த கண்கள் சகோ தரர்கள் இருவர் மீதும் நிலைத்து நின்றன. சூழ்நிலையில் மௌனம் நிலவியது.

மயக்கத்திலிருந்து உணர்வு பெற்ற இளைய சகோதரர் அதி காரியை அணுகி, 'இக்கடி தத்தை ஒரு ஞாபகப் பொரு ளாக நான் வைத்துக் கொள்ள லாமா?'' என்று கேட்டார்.

''ஞாபகப் பொருளாகவா? எதற்கு?'' என்று திருப்பிக் கேட்டார் அதிகாரி.

''அதைப் பற்றிப் பரவா யில்லை. நாங்கள் இந்த வாலி பனுக்கு சரியான மரணச் சடங்கு செய்து புதைக்க அனு மதியுங்கள். அவனுக்கோ குடும் பம் எதுவும் இல்லை, அவன்

ஆத்மா அமைதி பெற நாங்கள் மரணச் சடங்குகளை நடத்து விக்கிறோம்'' எனறார்.

பரோபகார சிந்தை எனப் பாராட்டியது கும்பல். ஆனால் மரணச் சடங்கு ஒரு பெரிய பிரபுவுக்கு நடைபெறுவது போல் நடைபெறக் கண்டதும் அனைவரும் ஆச்சரியம் அடைந் தனர். அந்த வைபவத்திற்கு ஆற்றங்கரை நாடோடிகள் உட் பட பலர் அழைப்பு பெற்று பிரமாதமான விருந்து அளிக் கப் பெற்றனர். பிரேத ஊர் வலம் ஒரு மைல் நீளம் இருந் தது. மணற்பாங்கான கரைக்கு அப்பால், மலைச் சரிவில் ஒரு இடத்தில் சடலம் புதைக் கப் பட்டது. அந்த இடத் திற்குநேராக ஆற்றின் வழியே நூற்றுக் கணக்கான தோணிகள் தினமும் போகும் வரும். சமாதியின் முன்பு ஒரு கல் நாட் டப்பட்டது. அதில் ''இவ்வழி யாகத் தோணியில் போகும் பிரயாணிகள் மகிழ்வதற்காகப் பாடல்கள் பாடி, வாழ்ந்த பெயர் தெரியாத, மகத்தான கலைஞன் ஒருவன் இங்கே நீள் துயிலில் ஆழ்ந்திருக்கிறான்'' என்று பொறிக்கப்பட்டிருந் தது. அந்த சமாதியைக் கட்டி முடித்து சுற்றுப் புறத்தை அழகு படுத்தியதில் அந்த சகோதரர்கள் செல்வம் முழு வதும் காலியாகியிருக்க வேண் டும்.

''அவர்களுக்குப் பைத்தியம் தான் பிடித்திருக்கிறது. விரை வில் அவர்கள் கடையைக் கட்ட வேண்டி வரும்'' என்றார் பிர தானி.

அவர் சொன்னது உண் மையாயிற்று. ஈமச்சடங்கு நடைபெற்ற மறு நாள் கடை அடைத்துக் கிடந்தது, திரும்ப வும் அது திறக்கப்படவேயில்லை, வாடிக்கைக்காரர்களுக்கு ''நெருங்கிய பந்து ஒருவரின் பிரிவு பற்றிய துயரத்திற்காக'' என்ற எழுத்துக்கள் தாங்கிய அட்டை ஒன்று தான் காட்சி யளித்தது. சில சமயம் காற் றில் அந்த அட்டை ஊசலாடி யது. இரண்டு சகோதரர் களும் எங்கே போனார்கள் என்பது எவ ருக்கும் தெரி யாது. ஒரு நாள் ஒரு தோட்டக் காரன் தான் பக்கத்து நக ருக்கு போய் திரும்பும் பொழுது, வழியில் அவர்களை, நாடோடிப் பாடகர்கள் வேஷத்தில் பார்த்த தாகக் கூறினான். பிரயாணிகள் கூடி இருந்த இடம் நோக்கி அவர் களைத் தங்கள் பாடல்கள், ஹாஸ்யங்களால் மகிழ்விக்க அவர்கள் விரைவாகப் போன தைத் தான் கண்டதாகச் சொன்னான் அவன். ''ஆனால் அது அவர்கள் தான் என்று என்னால் நிச்சயமாகச் சொல்ல முடியாது, காலை வெயிலில் என் கண்கள் அவ்வளவு தெளிவாகப் பார்க்க முடியவில்லை. தவிர முடுபனி வேறு திக்காக இருந் தது'' என்றான் அவன்.

இலங்கைக் கடிதம்

—

ராஜன்

இ. இ. காங்கிரஸின் அடுத்த நடவடிக்கை என்ன?

முற்றுப் பெருத தொடர் கதை போல் போய்க்கொண்டிருக்கும் இலங்கை இந்தியர் பிரச்சினை இருதேசப் பிரதமர்களின் சந்திப்பால் முடிந்து விடக்கூடுமென்று எதிர்பார்த்தவர்கள் பலர். ஆனல் இப்போது கிடைத்துள்ள செய்திகளிலிருந்து எட்டு லட்சம் இந்தியத் தமிழர்களின் தலைவிதி மேலும் சிக்கலாகி யிருக்கிறதென்று தெரியவருகிறது.

இரண்டாவது எலிஸபெத் மகாராணியின் முடிசூட்டு விழாவுக்கு லண்டன் போயிருந்த இந்தியப் பிரதமர் திரு. ஜவஹர்லால் நேரு அவர்களும், இலங்கைப் பிரதமர் திரு. டட்லி சேனநாயகா அவர்களும் மேற்படி சிக்கல் தீர மனம் விட்டுப் பேசியிருக்கிருர்கள். ஆனல் இலங்கைப் பிரதமர் அளித்த கருத்துக்களில் புதியதாக எதுவுமே தென்படவில்லை. பழைய பல்லவி புதிய ராகத்தில் பாடப்பட்டிருக்கிறது.

அடுத்தபடியாக இனி என்ன செய்வது என்பது பற்றி இலங்கை இந்தியர் காங்கிரஸ் வட்டாரங்களில் பலதரப்பட்ட கருத்துக்கள் அடிபடுகின்றன. அஹிம்ஸா முறையில் சத்தியாக்கிரகம் செய்து பார்த்தாகி விட்டது. சட்டத்தின் மூலம் நீதி கோரி பிரிவி கவுன்ஸில் வரை சென்ருகிவிட்டது. அவர்களுக்கு நியாயப் பூர்வமான உரிமை இலங்கையில் கொடுபட வேண்டுமென்பதில் இங்குள்ள தமிழரசுக் கட்சி, கம்யூனிஸ்ட் கட்சி, சம சமாஜக் கட்சி, புரட்சி சம சமாஜக் கட்சி ஆகிய சகல இடதுசாரிக் கட்சிகளும் ஆதரவாக இருக்கின்றன. இப்போது இலங்கை இந்தியக் காங்கிரஸ் என்ன நடவடிக்கை மேற்கொள்ளப் போகிறதென்பதில் எல்லாருடைய கவனமும் பதிந்திருக்கிறது.

குன்றக்குடி மகா சந்நிதானம்

மட்டக்களப்பில் இம்மாத முதல் வாரத்தில் நடைபெற்ற தமிழ் விழாவில் கலந்து கொள்ள இலங்கை வந்த குன்றக்குடி மகா சந்நிதானம் அவர்கள் இங்கு தமிழ் மக்கள் வாழும் பகுதிகளெல்லாம் சென்று சமயப் பிரசாரமும், தமிழ்த் தொண்டும் செய்து 15-ம் தேதி விமான மார்க்கமாக இந்தியா திரும்பினர். அடிக்கடி தமிழ் நாட்டிலிருந்து இத்தகைய தமிழ்த் தொண்டர்கள் இங்கு வருவதால் புதியதொரு எழுச்சியும், தமிழ் மொழிப் பற்றும் இலங்கையில் ஏற்பட்டுக் கொண்டு வருவது நல்ல சுப சூசகமென்றே சொல்ல வேண்டும்.

உதவி நிதி நாடகங்கள்

கண்டி காந்திஜி கல்லூரி, மட்டக்களப்பு விபுலாநந்த பணி மண்டபம் இவற்றுக்காக உதவி நிதி நாடகங்கள் நடத்த திரு. என். எஸ். கிருஷ்ணன் கோஷ்டியார் இலங்கை வந்திருந்தனர். கொழும்பு, கண்டி., மாத்தளை, வதுளை, மட்டக்களப்பு, அனுராதபுரம் ஆகிய இடங்களிலெல்லாம் நாடகங்கள் நடத்திய மேற்படி கோஷ்டியார் கதிர் காமத்துக்குச் சென்று கதிரமலைக் கந்தனையும் தரிசித்துச் சென்ருர்கள்.

Estd : 1890 Phone : 3202

M. C. Appaswamy Chetty & Co.,

TRI-COLOUR, HALF-TONE & LINE

BLOCK MAKERS

14, JONES ST., MANNADY, MADRAS-1.

All the blocks used in "UMA" are made by us.

Grams : "Attapotty" P. B. No. 1377 Phone : 2200

UMA PRINTERS

SPECIALISTS IN

CARTONS & CARDBOARD BOXES

OF ALL DESCRIPTIONS.

FINE ART COLOUR AND JOB WORKS

ARE UNDERTAKEN IN

HINDI, ENGLISH, TAMIL & TELUGU.

"Uma House" 4/32, Thathamuthiappan St., MADRAS-1.

Phone : 3849 P. B. No. 1546 Grams : 'Printype'

THE MADRAS TYPE FOUNDRY

LETTER FOUNDERS AND PRINTERS' SUPPLIERS

38, JONES STREET, MADRAS-1.

We proudly assert that the types used in the magazine "UMA" are supplied by us.

தந்தி. அட்டபொட்டி தபால் பெட்டி நெ. 1377 போன். 2200

உமா பிரிண்டர்ஸ்

4/32, தாதாமுத்தியப்பன் தெரு, சென்னை-1.

எல்லாவகை

அட்டைப் பெட்டிகள்

தயாரிப்பதில் தேர்ச்சிப் பெற்றவர்கள்.

ஹிந்தி, இங்கிலீஷ், தமிழ், தெலுங்கு

ஆகிய மொழிகளில் சில்லரை வேலைகளும் எல்லாவித உயர்தர கலர் வேலைகளும் ஏற்றுக்கொள்ளப்படும்.

Edited, Printed and Published by G. Umapathy, M. C. at the Uma Printers, 4/32, Thathamuthiappan Street, Madras-1. Phone: 2200

Vummidiars
STAINLESS STEEL
HOUSEHOLD UTENSILS

You can buy them with utmost confidence for they are backed by Vummidiars' reputation for superfine workmanship.

VUMMIDIARS
Stainless Steel

Use **SHINO**

CLEANING COMPOUND

IDEAL FOR CLEANING
SILVERWARE.
STAINLESS STEELWARE ETC.

VUMMIDIARS (MFRS.) LTD., MADRAS-2

Regd. No. M. 6309. UMA

Edited, Printed and Published by G. Umapathy, M.C. at the Uma Printers,
4|32. Thathamuthiappan Street, Madras-1 Phone: 2200